புராண சார கதாமஞ்சரி.

E 872

உ

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீமந்மாணிக்கவாசககுரவேநம:

# வாதவூரர் புராணம்.

இஃது

ாவதானம். வீராசாமி செட்டியாரவர்கள்

மருகராகிய

ா. வித்வான். அப்பன்செட்டியாரவர்கள்

மாணாக்கர்

ா. வடிவேலு முதலியாரால்

எழுதப்பட்டது.

சூளை:

அபாலோ பிரஸ்

1902.



உ.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீமத்மாணிக்கவாசகசுரவேசம:

# வாதவூரர் புராணம்.

## பாயிரம்: கிளை - 1.

### விநாயகஸ்துதி.

பவளமால் வரையி னிலவெறிப் பதுபோல்
பரந்தநீற் றழகுபச் சுடம்பிற்
றிவளமா துடனின் றருடிய பரமன்
சிறுவனைப் பாரதப் பெரும்போர்
தவளமா மருப்பொன் றொடித்தொரு கரத்திற்
றரித்துயர் கிரிப்புறத் தெழுதுங
கவளமா களிற்றின் றிருமுகம் படைத்த
கடவுளை நினைந்துகை தொழுவாம்.

(இ-ள்.) பவளமாகிய மலையிலிருந்து நிலாச்சந்திரிகை வீசு
தல் தழைத்த திருமேனியில் உத்தூளனமாய்ப் பூசிய திரு

நீற்றின் அழகானது பார்ப்பதாதேவியின் பச்சுடம்பில் தாக்கும் படி. அவ்வம்மையுடனிருந்து மகாநிர்த்தத்தைச் செய்தருளிய சிவபெருமானது புத்திரனாகிய பாரதக்கதையைத் தமது வெள்ளிய கொம்பிலொன்றை யொடித்து (எழுத்தாணியாக) ஒரு கரத்திற்கொண்டு மகா மேருமலையாகிய (ஏட்டில்) எழுதிய கவளங்கொள்ளும் யானைத்திருமுகத்தையுடைய விக்கின விநாயகனை (எடுத்துக்கொண்ட இந்நூல் இனிது முடியும் பொருட்டு) சிந்தித்துக் கைகுவித்து வணங்குவோம். (எ-று.)

'சிவபெருமானது திருமேனியில் பூசிய திருநீற்றின் வெண்மையானது உமாதேவியின் பச்சுடம்பிற் பட நடனஞ்செய்தார்' என்றதனால் ஐவகை சங்காரத்துள் கடைசி சங்காரமாகிய மகா சங்காரத்தைச் செய்யுங்கால் ஈஸ்வரியை உடன்வைத்துத் தாம் மாகிர்த்தம் செய்யும் அவசரம் வெளிவருகின்றது.

பாரத வடநூலை மேரு மலையில் எழுதியவர் விநாயகரேயாவார் என்பது புராண சம்மதம்.

விநாயகர் கஜமுகனைச் சங்காரஞ்செய்ய எடுத்தது யானைமுகம்.

## சபாபதிஸ்துதி.

இதந்தரு மடந்தை யொடிசைந்து யிருடம்புபோல்
விதம்படு லகங்களின் விரிந்தொளி விளங்குவார்
பதஞ்சமொடு துந்துமிவளங்கெழ முழங்கவே
சிதம்பர நடம்பயில் செழுங்கழ லிறைஞ்சுவாம்.

(இ-ள்.) திருவருட் சத்தியாகிய அம்மையுடன் சர்வ ஆன்மாக்களுள்ளும் உயிரும் உடம்பும் போல் கலந்துவிளங்கும் பிராசமாய் விளங்குவாரது மிருதங்கம் முதலிய மங்களவாத்தியங்கள் முழங்கச் சிதம்பரத்தின்கண் ஆனந்தத் திருத்தாண்டவஞ் செய்யாநின்ற திருவடிகளை வணங்குவோம். (வ-து) (2)

## சிவகாமிஸ்துதி.

ஆடக சிதம்பர வணங்குமை யணங்கிலா
நாடகனனந்த சுகனன்கு புனை பங்கினு
ளோடகமணம் பொருவ வெங்களு மிசைந்துணர்
பாடக மிலங்கு சிறுபங்கய மிறைஞ்சுவாம்.

(இ-ள்.) பொன்னம்பலத்தே எழுந்தருளியிருக்கின்ற உமாதேவியும், வருத்தமில்லாது நடனஞ் செய்கின்ற நடராஜரது சுகத்தைப்பெற்று அவரது பாகத்தில் வீற்றிருப்பவளும், பூவில் வாசனை போல் எங்கும் வியாபித்திருப்பவளுமாகிய சிவகாமியம்மையின் திருவடித் தாமரைகளை வணங்குவோம். (வ-து) (3)

## சுப்பிரமணியஸ்துதி.

துங்கமதகும்ப வுயர் தும்பிமுக னெம்பிசீர்
தங்குகிணகிழஞ்சிறு சதங்கைகள் புலம்பவே
மங்கையுமை கண்குளிரவந் துலவுகின்ற மா
ளங்கமலர் யொண்டி மிதுமன்புட னிறைஞ்சுவாம்.

(இ-ள்.) சுத்த மதசலம் பொழிகின்ற கஜமுகவிநாயகருக்குத் தம்பியாகிய முருகக்கடவுளின் சதங்கை முதலிய ஆபரணங்கள் சத்திக்கும்படி உமையம்மையின் கண் குளிர உலவுகின்ற திருவடிகளை (நால்வகை) மலர்களால் அர்ச்சனைசெய்து மிக்க அன்புடன் வணங்குவோம். (எ-து.) (4)

நூல்வரலாறு.

தென்பொதிய மாமுனி சிறக்க வருளெண்ணெண்
ணின்பவிளை யாடலதெனுங் கடலுளேயேன்
மின்பயிலு மாமதுரை மேவுதமிழ் மாறன்
றுன்பமற நல்குகதை சொல்ல லுறுகின்றேன்.

(இ-ள்.) அகஸ்திய முனிவர் முதலோர் மகிழ்ச்சியடையும்படி நைமிசாரண்ணியத்தில் சொல்லப்பட்ட 64 திருவிளையாடல்களுள், (கல்வியறிவில்லாத) நாயினுங் கடைப்பட்ட நான் பாண்டிய ராஜனானவன் துன்பத்தை நீங்கியுய்யும்பொருட்டு சிவபெருமானார் குதிரை கொணர்ந்து விட்ட திருவிளையாடலைச் சொல்லுகின்றேன். (எ-து.) (5)

அற்புத னிருந்தருள் பெருந்துறை யடைந்தே
சிற்பர முணர்ந்து திருவாசக முரைப்பார்
முற்பக லருந் தவமுயன்று பெருமன்பா
லுற்பவ மொழிந்தமை மொழிந்திட ரொழிப்பாம்.

(இ-ள்.) பரமேஸ்வரன் குருமூர்த்தமாயெழுந்தருளி யிருந்த

திருப்பெருந்துறையை யடைந்து ஆண்டு அவ்வாசிரியர்பால் ஞானோபதேசம் பெற்றுத் திருவாசகம் பாடியவரது பூர்வீக தவத்தால் மிக்க அன்பைப்பெற்றுப்பிறவிக் (கடலை) நீந்தகதையையே சொல்லி எம்முடைய துன்பங்களை எல்லாம் நீக்குவோம். (எ-து)

அவையடக்கம்.

கொண்டலன கண்டனருள் கொண்டு தமிழ்பாடித்
தொண்டுபடு மன்பர்செயல் சொன்னநெறி தன்னால்
வண்டமிழ் தெரிந்தவர்கண் மற்றெனுரை குற்ற
முண்டெனினு நன்கிதென வுள்ளுவர்க ளெள்ளார்

(இ-ள்) மேகம் போலுங் கறுத்த கண்டத்தையுடைய ஈஸ்வரனது திருவருள் மேலீட்டால் தமிழ் (வேதமாகிய) திருவாசகம் பாடியருளிய திருத்தொண்டரது அரிய சரித்திரத்தை ஈண்டுச்சொன்னமையாலே கற்றறிந்த பெரியோர்களெல்லாம் நான் சொல்வதில் எவ்வளவு குற்றம் பொதிந்திருந்தாலும் அவைகளைப் பாராட்டாமல் குணத்தையே பாராட்டுவார்கள். (எ-து.) (7)

நூற்பயன்.

இந்தவள நற்கதை யியம்பினர் நயந்தே
சிந்தையி னினைப்பவர் செவிப்புலனிறைப்போர்
புந்தி மகிழப் புவிபுரப் பருடல்விட் டா
லந்த வுலகத்தினி லரன் சபையில் வாழ்வார்.

(இ-ள்.) இவ்விடம் சொல்லப்பட்ட சரித்திரத்தை சொன்னவர்களும், நினைப்பவர்களும், காதால் கேட்பவர்களும், மனமகிழ்ச்சியோடு உலக முழுதும் ஏக சக்ராதிபதியாயாளும் திறத்தையடைவார்கள். தேகம் இறந்து பட்டாலோ அந்த சிவலோகத்தில் சிவத்தொண்டுசெய்து வாழ்ந்திருப்பார்கள். (எ-து.) (8)

பாயிரம் சம்பூர்ணம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## மந்திரிச்சருக்கம். கிளை-௨.

நூல்.

சந்திர, சூரியாக்கினியாகிய மூன்று கண்களையும், சதுர்ப்புஜங்களையும, ஈசானம், தற்புருடம், வாமம், அகோரம், சத்தியோசாதம் என்னும ஐந்து திருமுகங்களையும் கொண்ட சிவபெருமானார் திருக்கோவில்கொண்டு எழுந்தருளப்பெற்றதும், அவருடைய திருவருட்கிருபையால அகஸ்திய முனிவரையும் வாசஞ்செய்யப்

பெற்று, அம்முனி சிரேஷ்டரால் பதினெண் நிலத்துப் பாஷைகளுள்ளும் சிறந்ததாய;

"தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்தது முதலை
யுண்ட பாலனை யழைத்தது மென்புபெண் ணுருவாக்
கண்டதும் மறைக் கதவினைத் திறந்ததுங் கன்னித்
தண்ட மிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்"

என்றபடியே அநேக அற்புதங்களைச் செய்து முடித்த இயல், இசை, நாடகம் என்னும் மூன்று தமிழையும் ஜயம், தரிபு அறத் திருவாய்மலர்ந்தருளப் பெற்றதும், விஷத்தைக் குபீல் குபீலென்று கக்கிப் பகைவர்களை நொடிநேரத்தில் வெற்றிகொள்வோம் என்று சொல்லத்தக்க ஆயுதங்களையும், மிக்க புஜபல பராக்கிரமத்தையும் கொண்டுவரும் பகைவர்களை வென்று மநுநீதி தவறாதபடி அரசுபுரியும் பாண்டியராஜனது ஆளுகைக்குட்பட்டதும்,

"நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு"

என்றபடியே அந்நாட்டிலுள்ளோர் யாதாமொருபொருளைத்தேடி அப்பொருள் இவ்விடத்தில் கிடைப்பதரிது இது வொரு பட்டிக்காடு என்று சொல்லும் ஆபாச

வசனம் உண்டாகாதபடி சீவ வளங்களைப் படைத்தது மாகிய பாண்டி வளநாட்டிலே, திருவீதிகள் தோறும் வைதிகப் பிராமணர்கள் கூட்டங் கூட்டமாய்க் கூடிச் சற்றேனுங் கண்களிமையாதபடி வேதபாராயணஞ் செய்யுஞ் சிறப்பைக்கண்டு களிக்கு நிமித்தம் எழுந்தருளியதுபோல் சிவபெருமானனவர் திருக்கோயில் கொண்டமர்ந்திருக்கும் விசேடத்தால் தேவர்கள் இருப்பதற்குரித்தான தேவலோகத்தைப் பார்க்கினும் மிகுதியும் மேம்பட்டு விளங்குவது திருவாதவூர் என்னும் சிவ க்ஷேத்திரம்.

அப்படிப்பட்ட சிவமணங் கமழும் க்ஷேத்திரத்தில், பிராமண வருணத்திலே ஆமாத்தியர் குலத்திலே, சைவசமயமே மோக்ஷத்திற்கு வழிவிடுஞ் சமயமெனவும், அதைவிட வேறுசமயம் இல்லையெனவும், அச்சமயச் சார்பாயுள்ள யாதொரு சிவபெருமானே பாசத்திற்கட்டுப்பட்ட அநாதிபெத்த ஆன்மாக்களை இரட்சிக்குங் கருணாநிதியாயுள்ளவன் எனவும் சந்தேக விபரீதங்களில்லாமல் உணர்ந்தவரான ஒரு பிராமணரிருந்தார்.

அப்பிராமணோத்தமருக்கு அன்பில் உயிரும் உடலும் போலும், நகமும் சதையும் போலும் சமபோசித

யுக்தியில் மந்திரிபோலும், கற்புக்கு அருந்ததி போலும், அழகுக்கு லட்சுமி போலும், கல்வி சாதுரியத்தில் ஔவைபோலும், ஈஸ்வர பக்தியில் கௌரிபோலுமுள்ளவளாய் ஏகபத்தா விரதம் பூண்டவளாய்,

"கற்புறு சிந்தைமாதர் கணவனையன்றி வேறோ
ரிற்புறத்தவரை காடார்."

என்னும் ஆன்றவர் வாக்கியத்தை ஆபரணமாகக் கொண்டவளாய் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நாற்குணங்களையும் தமக்குக் காவலர்களாய்ப் பெற்றவளாய் ஒரு மனைவியிருந்தனள்.

அங்ஙனமாய பதிவிரதம் பூண்ட அவ்வம்மையாரது ஆலிலை போலும் அழகியவயிறு செய்ததவத்தால் அது உமாதேவியை இடது பாகத்தில் உடையவரான ஸ்ரீ சிவபெருமானது திருவருட் பிரேரேபனையால் பாண்டிய ராஜேந்திர செங்கோன்மைக்கு முதல் மந்திரியாராகிய ஸ்ரீமத்மாணிக்கவாசகரைக் கருப்பமாகக் கொண்டதென்றால், அவ்வயிற்றிற்கு காரணியாகிய அவ்வம்மையின் தபோபலத்தை என்னவென்று சொல்லலாம்?

அப்படி கருப்பமுற்று பத்து மாதங்களும் பட்டவேண்டிய

"ஊனமில் யோனியினுள்வினை பிழைத்தும்
மானிடப் பிறப்பினுள் மாதாவுதரத்
தீனமில் கிருமிச் செருவினிற் பிழைத்து
மொருமதிதன்னு ளிருமையிற் பிழைத்து
மிருமதி விளைவி லொருமையிற் பிழைத்து
மும்மதி தன்னுளம் மதம்பிழைத்தும்
ஈரிரு திங்களிற் பேரிருள் பிழைத்தும்
ஐஞ்சுதிங்களில் முஞ்சுதல் பிழைத்தும்
ஆறு திங்களி னூறலர் பிழைத்தும்
ஏழு திங்களிற்றாழ்புவி பிழைத்தும்
எட்டுத் திங்களிற் கட்டமும் பிழைத்தும்
ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்
தக்கதசமதி தாயொடுதான்படுந்
துக்கசாகரத் துயரிடைப் பிழைத்தும்."

என்றவண்ணம் உண்டான அவஸ்தைகளில் செறுக் குண்டு பத்து மாதங்களும் நிறையப் பத்தாமாதத்தில நல்ல சுப தினத்தில் உலகத்திலுள்ள ஆன்மாக்கள் அஞ்ஞான விருட்டை விட்டு நீங்கவும், அவ்விருளில சிக்கியவனை நரகத்தில் தள்ளுபவனான பரமதங்களா கிய நட்சத்திரங்கள் தங்கள் ஒளி கெடவும், சிவனடியார் களுடைய இருதய தாமரைகளெல்லாம மலரவும், ஸ்ரீமத்மாணிக்கவாசகரென்னும் ஞான சூரியர் திருவ வதாரஞ் செய்தார்.

## நாமகரணம்.

இவ்வாறு திருவவதாரஞ் செய்து வேதீ சம்மதமில்லாத மார்க்கத்தை அக்காலத்தில் கொண்டிருந்த மிக்க சமர்த்தனான புத்தனென்பவனிடத்தில் தர்க்கவாதஞ் செய்து அவனை வென்று சிவநாமாவளி மிகுதியும் உலகத்தின்கண் வளர்ந்தோங்க இதுவரைக்கும் யாதொரு ஜென்மத்தையும் எடுத்து அச்சென்ம ஏதுவாக வருகின்ற எவ்வகை நாமங்களையும் வகுக்கப் பெற்றிராத இவருக்கு திருவாதவூரர் என்று சுற்றத்தார்களெல்லாம் களி கூரவும், மங்கல வாத்தியம் கோஷிக்கவும் நல்ல ஓரையில் மிக்க சோதிட வல்லவர்களைக் கொண்டு நாமகரணஞ் செய்வித்தார்கள்.

## அன்னப்பிராசனம்.

இவ்வண்ணம் வைக்கப்பட்ட திருநாமத்தோடுலவுகின்ற குழவிக்கு ஏழுமாதங்கள்வர, முக்கனிகளும் பாலும் கலந்தாற்போலும் மிக்க மதுரத்தையடைந்ததான அன்னமூண்பித்தார்கள்.

## சௌளம்.

அதன்பின்னர், அநித்தியமாகிய தேகத்தில் நித்தியமாகிய ஆன்மாவானது தனது அநாதி மலத்தொடக்

கால் பிரவேசித்து தான் உலகின்கண் வந்த வரலாற்றை மறந்து அதிவிரத்துடன் செய்யும் இருவினைகளைச் சிவபெருமானது திருவருட் கிருபையாலுணரப் பெற்றுச் சுக துக்கங்களை வரையறுத்து நியதி செய்யும் தொகையில் அடங்கியதாகிய பாவமென்னும் குடுமியிருக்கப்பெறாத இவருக்குச் சிறந்து விளங்குவதான ஒரு குடுமியை வைப்பித்தார்கள்.

## வித்தியாரம்பம்.

இப்படியாக நாமகரணம், அன்னப்பிராசனம், சௌளம், ஆகிய மூன்று மங்கலங்களையும் செய்யப்பெற்றுத் தவமென்னும் பெரிய விதையினிடத்திலிருந்து முளைத்துச், சனனம் என்கிற சேற்றினின்றும் நீங்கி, திருவருளென்னும் குருத்து விட்டு, வீண் என்னும் களை நீங்கி, யாவையும் உண்டாக்க வல்லவனாகிய சிவபெருமானுடைய திருவருளினால் சிவமென்னும் விளைவுண்டாக, வளர்ந்த தெய்வச் சாலியாகிய திருவாதவூரர் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாகப் பெற்றோர் பரிபாலிக்க வளர்ந்து ஐந்தாமாண்டு வரவே, தாய் தந்தையர் செய்யவேண்டிய கிரமப்படி நல்லாசிரியனையாராய்ந்து சுபக்கிரகங்கள் யாவும் வித்தியாஸ்தானத்தைப் பார்க்கத்தக்க நல்லோரையில் தமது கண்ணிற் கருமணி

போலும் புத்திரராகிய திருவாதவூரருக்கு வித்தியாரம்பஞ் செய்வித்தார்கள்.

### உபநயனம்.

ஈண்டு கல்வி கற்பான்புகுந்த திருவாதவூரர் வேதாகமசாஸ்திரங்களைச் சிவபெருமானது திருவிருண்மேலிட்டால் நன்குணர்ந்து வருநாளில் தமக்கு ஏழாவதாமாண்டு வரப்பெறவே, பெற்றோர்கள்

“ஆண்டேழி லெட்டின் மறையந்தணர்க்
காகு முந்நூல்”

என்னுஞ் சுருதியை யநுசரித்தும், தங்கள் மரபு வழக்கத்தையநுசரித்தும் செய்யவேண்டியதான உபநயன நிமித்தம் தங்கள் பந்துவர்க்கங்களுக்கு நியமித்த சுபதினத்தைக்காட்டி முடங்கல் போக்கி, யாவரும் வந்து சேர, உண்மையான நூல் இதுவேயன்றி வேறு கிடையாதென்று வாதமிடுகின்ற ஆறு சமய நூல்களையும், ஸ்தல புராண நூல்களையும், பழைமையவான பதினெண் புராண நூல்களையும், பொது நூலாக உலகத்தாரால் சொல்லப்படும் நான்கு வேத நூல்களையும், சைவ சித்தாந்த நூல்களையும் உள்ளபடியே தரிப்பவராகிய திருவாதவூரருக்குத்தாங்கள் குறித்த சுபதினத்தில

மூக்நூல் தரிப்பதாகிய உபநயனமும் செய்வித்தார்கள். பிறகு,

“இருக்கினு நிற்கும்போது மிரவுகண் துயிலும்போதும் (தம்
பொருக்கென நடக்கும்போதும் பொருச்திபூண் துய்க்கும்போ
முருக்கிதழ்க் கனிவாயானை முயங்கிநெஞ் சழியும்போதுந்
திருக்களா வுடையநம்பா சிந்தையுன் பாலதாமே ”

என்றவண்ணமே திருவாதவூரர் சிவபெருமானிடத்தில் வைத்திருந்த அந்நியோன்னிய அன்பு மேலீட்டால், கங்காநதியையும், மூன்றுநாள் பிறையாகிய ஏக கலையையும் சடாபாரத்தில் தரித்தும், உருத்திர கண்டிகையைத்தோளில் அலையவிட்டும், புலித்தோலாகிய வஸ்திரத்தை அரையிற்கொண்டும் விளங்குபவராகிய பரமேஸ்வரனுடைய கிருபையால், அகப்பற்றுப் புறப்பற்றுக்களை நீக்க உபதேசிக்கின்ற சிவாகம முதலிய சர்வ சாஸ்திரங்களையும் தமக்குப்பதினறு வயது ஆகுமளவிலே கற்றுணர்ந்து, ஈஸ்வரனைக்குறித்து மிகுதியும் மனங்கரைந்து பாமாலை சூடி மனமகிழ்பவராய அன்பராய் விளங்கி வந்தனர்.

அக்காலத்தில் பாண்டிய வளநாட்டை மிகுதியும் மநு நீதி தவிராவண்ணம்,

"மாநிலங் காவலனாவான் மன்னுயிர் காக்குங்காலை
தானதனுக் கிடையூறு தன்னாற்றன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரா லுயிர் தம்மால்
ஆனபய மைந்துந்தீர்த் தறங்காப்பா னல்லனோ."

என்கிற நீதிப்படி அரசாண்டுகொண்டிருந்த அரிமர்த்தன பாண்டியராஜன் சபையின் கண்ணுள்ள சிலபெரியோர்கள் அரசனை நோக்கி, ஓ! வேந்தனே! திருவாதவூரிற் பிறந்தவராய்த் திருவாதவூரரென்னுந் திருநாமமுடையவராய், ஈஸ்வர பக்தியிற் சிறந்தவராய், கல்வி, கேள்வி, யுத்தி முதலியவைகளை மிகுதியும் மேற்கொண்டு விளங்குபவராய் ஒருவர் இருக்கின்றனர்; என்று சொல்லக்கேட்ட அரசன் இவர்கள் சொன்ன சொல்லளவிலேயே திருவாதவூரரது நற்செய்கை நற்குணங்களை நன்குணர்ந்தவனாய்அவரை வெகுவாகத் தம்மனத்தின்கண் சிலாகித்துச் சில பெரியோரைக் கொண்டு அவரைவருவித்து அவருக்கு நிலவுலகத்தை ரக்ஷித்துப பகைவர்களைக்கடிந்து மநுநீதி முறைப்படி நடாத்தும் முதன்மை மந்திரித்தனத்தையும் "தென்னவன் பிரமராயன்" என்கிற பட்டப் பெயரையும் நவரத்ன கஜித ஆபரணங்களையும், பீதாம்பரம், சந்திரவட்டக்குடை", சிவிகை, வெண்சாமரை, யானைகள் முதலியவைகளை

யும் கொடுத்துச் செங்கோன்மைத்தொழிலைப்பார்க்கும்படி ஆஞ்ஞாபித்தனன்.

அரசனது ஆஞ்ஞையின்படியே நடந்து இந்திரசம்பத்துபோல் பொருந்தியிருக்கின்ற பாக்கியத்தைப்பெற்றவராய் மற்றைய மந்திரிப் பிரதானிகள் தம்மைச்சூழ்ந்திருக்கத் தாம் நடுவே தலைமை பூண்டு நட்சத்திரங்கள் சூழும்படி சந்திரனிருப்பதுபோல் வீற்றிருந்து அரசநீதியை விர்த்திபண்ணி யாவர்க்குங் களிப்பையுண்டாக்கித் தன்னுடைய தோளில் வைத்துக்காக்கும் உலகபாரத்தை அரசனுக்குக்கொடுக்க மனம்பொறாராய்த் தாமே சுமந்து, அந்நாட்டில் தருமஞ்செய்யவிருப்பங்கொண்டவர்களுக்கும் அத்தருமத்திற்கும் யாதொரு தீங்கும் நேரிடாவண்ணம் கவசமும் கண்ணுமாகியும் மற்றவர்களுக்குத் துன்பந் தருபவராகியும், வணங்கினவர்களுக்கு இன்பத்தையும், வணங்காதவர்களுக்குத் துன்பத்தையும், தந்து ஏழைகளுக்குத் தாயாகியும், சிவபெருமானது திருவடிக்குப் பூரண அன்புகொண்டவராயுமிருந்து தமது மந்திரிச்சேவகத்தை மிகுதியும மேம்பாடாக நடாத்திவந்தனர்.

இவ்வாறு நடாத்திக்கொண்டு வருகின்ற நாளில் தாம் வந்த குறையை முடிக்கின்ற பரிபவகாலம் வந்து சமீ

பீக்கவே, அநாதி தொட்டு ஆன்மாக்களுக்குப் பலவித சத்திகளாய்ப் பொருந்தி யிருக்கின்ற மலங்களைப்பற்றி யுண்டாகும் எழுவகைப் பிறப்புகளின் தன்மையையும், அவைகள் மீண்டும் ஒடுங்குகிற விதத்தையும், இவற்றையெல்லாம் சிவபெருமானறிந்து தமது கருணையினால் பந்த மோட்சங்களைக் கொடுத்து நடத்துகின்ற விதத்தையும், சிவாகமங்களிலறிந்து தமது மனத்தின்கண் மிக்க துன்பத்தையுடையவராய் அந்தோ! இந்த ஆன்மாவானது சகல தேகங்களோடுங் கூடிப் பிறந்தும், மீண்டும் இறந்தும் படுகின்ற துன்பத்திற்களவில்லையாகையால் அங்ஙனம பிறவாநெறியைத் தேடவேண்டியது மனிதப்பிறவிக்கு உயர்ந்த காரியமாகும். இப்பிறவியிற் றேடாது விடுவோமானால் மறுதரம் வருவது எந்தப்பிறவியாயிருக்குமோ? அது தெரியாதல்லவா? என்று,

"எண்ணரிய பிறவிதனில் மானிடப்பிறவிதான்
யாதினும் அரிதரிது காண்
இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ
வேதுவரு மோவறிகி லேன்
கண்ணகனிலத்துநா னுள்ளபொழுதேயருட்
கடலாட்டத்தி னின்று
காலூன்றி நின்றுபொழி யானந்த முகிலொடு
கலந்துமதி யவச முறவே

பண்ணுவது நன்மைக் கிலைபதியு மட்டுமே
பதியாயி ருந்த தேகப்
பெண்ணிருலை யாமலே கௌரி குண்டலியங்கி
பண்ணவித னருளி னாலே
விண்ணிலவு மதியமுத மொழியாது பொழியவே
வேண்டுவே னுமதடியனை நான்
வேதாந்த சித்தாந்த சமரசகன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர் கணமே ''

என்றபடியே யெண்ணினவராய் வெயிலில் நடந்து விடாய்பட்டோர் சீக்கிரத்தில் நிழலை விரும்புவதுபோல் ஜென்மவிடாயை நினைத்து அதன்கெடுதியை யாற்றுந் வராய இவர் சிவபெருமானது திருவடி நிழலை விரும்பி அவனிடத்தில் மிக்க அன்பு பாராட்டிக்கொண்டே யிருந்தனர்.

இங்ஙனம் பிறப்பிறப்புக்களின் கொடுமைகளைக் களைய எண்ணிய அவசரத்திலேயே உலகவாழ்க்கை நிலையற்றதென்று உறுதியாய் நினைத்துச் சிவபெருமானை வழிபடுதலாகிய பரஞானத்தைப்பெற்ற இவர், அங்ஙனம் மெய்ஞ்ஞானத்தைப்பெற்றும் கழைக்கூத்தர்களுடைய கருத்து வேறும் வேஷம் வேறுமாயிருப்பதுபோல் இவரது கருத்துமாத்திரம் ஈஸ்வரனிடத்தில் ஈடுபட்டதாய்

அரசுரிமைக்குத் தக்கவாறு வேடம் மாத்திரம் தாங்கி முன்போலவே அப்பாண்டியராஜனது முதன் மந்திரித்துவத்தை நடாத்திக்கொண்டுவந்தனர்.

ஆயினும், அவ்வருளானது அம்மட்டும் நில்லாமல் மேலுமேலும் இவரிடத்திலுதித்து நாலாவது சத்தினிபாதமாகிய தீவிரதரபக்குவம் வந்தடையவே காரண பஞ்சாட்சரத்தின் பொருளாயிருக்கின்ற சிவபெருமானையறிவிக்கும் ஞானாசிரியனை நாம் கூடியசீக்கிரத்தில் பெறவேண்டுமென்று நினைந்து குரங்கு ஏறியாடுகின்ற விளாமரத்திலுள்ள பழத்தைப்பெற விரும்புவோர் அக்குரங்கைக் கல்லாலடித்தால் அது பதிலடிப்பதற்குத் தன்னிடத்தில் கல்லில்லாமையால் விளாம்பழத்தை அறுத்து எறிய அதைக்கொண்டு உண்டு களிப்பதுபோல் எவ்விடத்தில் ஞானாசிரியன் கிடைக்கப் பெறுவோமோ வென்று சிவவேடம் பூண்டோர் யாரெதிர்ப்படினும் அவர்களிடத்திலெல்லாம் தர்க்க வாதங்களைச்சொல்லிப் பிரசங்கம்பண்ணியும், வண்டானது தான் உண்ணுதற்கு வேண்டிய தேனைத்தேடி அங்கும் இங்கும் ஓடித்திரிவது போலத் தாமும் ஞானாசிரியனை வேண்டி காடு, மலை, நாடு, தீவு, வாவி, சோலை முதலிய இடங்களிலும் சென்று சென்று நல்லாசிரியர் எங்குளரோ என்று தேடியும்

ஈஸ்வரபக்தியிற் சிறிதும் குறைவில்லாது செலுத்திக் கொண்டேயிருந்தனர்.

இவ்வாறு நடந்தேறிவருநாட்களில் ஒருநாள் அரம்பா ஸ்திரீகள்போலும் பெண்கள் நிறைந்து சாமரைகள் வீசவும், முனிவர்களும் பிராமணர்களும் வித்துவான்களும் நெருங்கவும் குற்றமற்ற சந்திரகுலத்திலே யவதரித்த அரிமர்த்தனபாண்டிய ராஜனெனவன் அழகுபொருந்திய கூட்டமாக நவரத்தினங்கள் பதிக்கப்பெற்ற கிரீடமாகச் சூரியனெனவன் சிரசிலே உதயமாகும்படி வந்து சிங்காசனத்திலெழுந்தருளி யிருந்தனன்.

அப்பொழுது சில தூதர்கள் காற்றினும் கடிதாக விரைந்து வந்து திங்கள் குலத்திற்கோர் தீபம்போல் வானே! நீதிதவறாது செங்கோல்நடாத்துஞ் செல்வனே! சோமசுந்தரக்கடவுளிடத்தில் சோர்வடையா பக்தியுடையானே! எங்களைக் காப்பாற்றும் பிதாவே! அரசனே! என்று பலவகையாக அரசனை வந்தித்து நாங்கள் கண்டு வந்த ஒரு செய்தியைச் சொல்லுகிறோம் கேளும் என்று சொல்லத்தொடங்கினர்.

நாங்கள் சோழநாட்டிற்குச்சென்று வரும்போது அந்நாட்டைச்சேர்ந்த கடற்கரையினிடத்தே ஆரியதேசத்

தார் தமது தேசத்திலிருந்து மிக்க ரூபலாவண்ணியமுள்ளனவும், சுழிகள் நன்றாயிருக்கப் பெற்றனவுமான மிகுந்த குதிரைகளைக் கொண்டுவந்திருக்கின்றனர். அதை நாங்கள் பார்த்துத் தேவரீருக்குச் சொல்லுதற்கு விரைந்து வந்தோமென்று புகல, அதைக்கேட்ட அரசனனவன் தூதர்களில் இவர்களே மிக்க வல்லவர்களாவார்கள் என்று அவர்களைப் புகழ்ந்து விடைகொடுத்து அநுப்ப அவர்கள் தங்கள் தங்களிடப்போய்ச் சேர்ந்தனர்.

அதன் பின்னர், அரிமர்த்தனபாண்டிய ராஜனனவன் தமக்குச் சமீபத்தில் எழுந்தருளியிருந்த தன்னுடைய உயிரும் உடலும் போன்றவரும், ஸ்ரீசிவபெருமானிடத்துப் பிரியாவன்புடையவருமாகிய திருவாதவூரரைப்பார்த்து, ஓ என் அன்பிற்சிறந்த வாதவூரரே! நீதி தவறாது மந்திரித்துவம் நடாத்தும் நிபுணரே! நீர் போய் விரைவாய்த் தாவுகின்ற இராஜாங்கத்துக்கு நன்மையை விளைவிக்கும் குதிரைகளை வாங்கிக்கொண்டு வாரும் என்று அரசிட்ட ஆஞ்ஞையைச் சிரமேற்கொண்டவராய் அதற்கு உடன்பட்டனர். உடனே அரசனனவன் திருவாதவூரரைத் தமது தெய்வவிமானம்போல் விளங்குகின்ற அரண்மனைக் கழைத்துச்சென்று, சிநேகத்தில் வஞ்சனை செய்யாமலும், வட்டியில் மிதப்பர்கூறாமலும், குடிகளை

வருத்தாமலும், நியாயவாயிலாகவே சம்பாதித்த தமது திரவியத்தில் நாற்பத்தொன்பதுகோடி பொன் எடுத்துத் திருவாதவூரரிடத்திற் கொடுத்தனன்.

இவ்வண்ணம் ஆயுதத்தில் வில்லும், மங்கையரில் விஜயமங்கையும், இலட்சுமிகளில் சீதேவியும் தங்கப்பெற்ற புஜங்களையுடையவனும், மீனக்கொடியை யுடையவனுமாகிய அரிமர்த்தனபாண்டியராஜனால் கொடுக்கப்பட்ட நாற்பத்தொன்பதுகோடி பொன்னையும் பெற்றுக்கொண்டு எலும்பெல்லாம் நெக்குவிட்டுருகவும், ரோமம் புளகாங்கிதம் கொள்ளவும் ஈஸ்வரனிடத்தில் அன்பைச் செலுத்துகின்ற திருவாதவூரர் நல்லகாலத்தில் புறப்பட்டுச்செல்ல முயற்சிசெய்தார்.

(அநாதி மலத்தில் கட்டுப்பட்ட ஆன்மாவைத் திருவருட்சத்தியானவள் வந்து சேர்ந்து மோட்சத்திற்கனுப்புவதுபோல் இவ்வரசன் திருவாதவூரரிடத்து திரவியங்கொடுத்துக் குருமூர்த்தத்தையடையும் பொருட்டுத் திருப்பெருந்துறைக்குச் செல்லென்று அனுப்புதலின் இவன் திருவருட் சத்தியை யொப்பவனாயினன் என்றனர் புராணிகர்.)

அப்படியே பிரயாணத்திற்குப் போதற்குரிய சுபதினம் சமீபிக்கவே அத்தினத்தில் திருவாதவூரரானவர் தம்மை

விற்கொடியை யுடையவனான சேரமானுடைய சேனைகளும், புலிக்கொடியையுடைய சோழனுடைய சேனைகளும், மிக்க விஷத்தைப்பெற்ற ஆதிசேஷனுடைய தலைகளும் நடுங்க அசைந்து அடிபெயர்த்து வைக்குங் குணமுடைய யானைகளும், காற்றினுங்கடிது செல்லுவனவாகிய குதிரைகளும், கொங்கணர், கலிங்கர், கொங்கர், துளுவர், சிங்களர், ஒட்டியர், தெலுங்கர், சீனர், ...ளவர், மலாடர், ஆகிய இவர் போன்றவரும், தங்கள் தங்கள் குதிரைகளின்மேல் ஏறிய தமிழ்க்கவிவாணர்களும், சூழ்ந்து மிக்க பெருத்த பெரும்புறக்கடலும் உலகத்தின்கண்ணே வந்து குடிகொண்டாற்போல் ஆரவாரஞ்செய்யவும், அழகுமிக்க பெண்கள் திரண்டு இரணடுபக்கத்திலும் வரவும் முன்னர் வீணையும், புள்ளாங்குழலும் இசைத்துக்கொண்டு வரவும், சிலபெண்கள் கவரி வீசவும், சிலபெண்கள் வெள்ளிய சந்திரவட்டக்குடைபிடிக்கவும், பேரிகைகள் எவ்விடத்திலும் அடிக்கவும், உயர்ந்தனவாகிய சர்வசின்னங்களோடு சங்கவாத்தியங்கள் தொனிக்கவும், பாடல் வல்லவர்கள் கரதாளங்கொட்டிக் கொண்டுவரவும், நெருங்கிய கூந்தல்களையுடைய சிலபெண்கள் இனிய தீங்குரலோடு உல்லாசமாய்ப்பாடவும் தாமொரு பௌர்ணமிகாலத்துச் சந்தி

ரன் போன்று வெள்ளிய நில்லைக்கக்குகின்ற குளிர்ந்த முத்துப்பல்லாக்கின்மேல் ஆரோகணித்து மிக்க பிரதாபத்துடன் அஷ்ட திக்குகளிலும் புகழ்ப்பெற்று விளங்குவதான மீனக்கொடியையுடையவராய்த் தமது மாளிகையை விட்டகன்று பரிசுத்தமிக்க சங்கமணியையும், உருத்திராக்க மாலையையுந்தரித்துள்ளவரான ஸ்ரீசொக்கநாதக்கடவுள் எழுந்தருளி யிருக்கும் ஆலயத்திற்குச் சென்று அவ்வாலயத்திற்குப் புறம்பே தாம் ஆரோகணித்துவந்த முத்துப் பல்லாக்கினின்று மிழிந்து திருக்கோயிலினுள்ளே சென்று ஸ்ரீ சோமசுந்தரக் கடவுளைத் தெரிசித்துச்சிவாநுக்ரகம்மேலிடப்பெற்றுக் கைகளைச்சிரசின்மேல் கூப்பிச் சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்தெழுந்து ஓ சங்கரா! சம்பூ! மாதேவா! காளகண்டா! தேவ தேவ! என்று பலவாறாக துதித்து விடைபெற்று அங்கிருந்துமகன்று ஸ்ரீ அங்கயற்கண்ணி எழுந்தருளியிருக்குஞ் சந்நிதியிற்சென்று, ஓ சங்கரீ! பார்வதீ! பரிபூரணீ! அபிடேகவல்லீ! பெண்ணமுதமே! பேரிளங்கிளியே! தோன்றாத் துணைக்கோர் அருந்துணையே! என்று கைகளால் அஞ்சலி செய்து துதித்து விடைபெற்று அங்கிருந்தும் நீங்கி ஆவரண பிரதக்ஷிணஞ்செய்து திருக்கோயிலை நீங்கிப் புறம்போந்து அரிமர்த்தன

பாண்டியராஜன் வீற்றிருக்கும் அரண்மனைக்குட் சென்று அரசனைக்கண்டு அடியேன் குதிரை வாங்கிக்கொண்டுவரத் தேவரீர் உத்தரவு கொடுத்தருளவேண்டுமென்று கேட்க, அரசனும் நீர் போய் நமது நாட்டிற்கு யாதொரு தீங்கும் நேரிடாவண்ணம் நற்சுழி நல்வேகமுள்ள குதிரைகளாக ஆராய்ந்து பார்த்துப் பிடித்துக்கொண்டு சீக்கிரமேவந்து சேருமென்று சொல்லி விடைகொடுத் தனுப்பினன்.

ஆங்கு அரசனிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு திருவாதவூரரானவர், அந்த அழகிய மாடமாளிகைகள் நிறையப்பெற்ற மதுராபுரியை நீங்கி மிக்க ஆரவாரத்துடன் பட்டணங்கள், நாடுகள், காடுகள், முதலியவற்றைக்கடந்து அநேகங் காதவழிதூரஞ் சென்றனர்.

இனி திருவாதவூரர் திருப்பெருந்துறையை யடைந்த சருக்கம் வரும்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீமந்மாணிக்கவாசககுரவேசம:

## திருப்பெருந்துறைச் சருக்கம்: கிளை - 3.

இவ்விதமாக ஸ்ரீமந் மாணிக்கவாசகர் ஸ்ரீசொக்கநாதரது திருவருளினாலும் அரசனது ஆஞ்ஞையினாலும் குதிரைவாங்கு நிமித்தம் வழிதப்பி வேறுவழியில் சென்று கொண்டிருக்க, அஞ்ஞான்று அநாதிதொட்டு வருவனவாகிய நான்குவேதங்களையும் ஓதியுணர்ந்ததில்லைமூவாயிரவர் வணங்குப்படி திருச்சிற்றம்பலத்தில் ஆனந்தத் தாண்டவஞ் செய்தருள்கின்றவரான சிவபெருமான்மானிடம், மழுவலங்கொண்டு பார்ப்பதாதேவியார் மகிழ்ச்சியடையக் கைலாசமலையின் கண்ணே மிக்க உன்னதமாகச் செய்யப்பட்டிருக்கும் சொர்ணமண்டபத்திலே தமது திருவருள் விளக்கத்துடனே எழுந்தருளியிருந்தார்.

அப்பொழுது சர்வ ஜீவான்மாக்களையும் அவரவர் பரிபக்குவமறிந்து ஆட்கொள்ளுவோராகிய ஸ்ரீசிவபெருமானை முனிசிரேஷ்டர்களெல்லாம் சூழ்ந்து ஓ சங்கரா! மௌனாதீதா! துவாதசாந்தா! துரியாதீதா! நாங்கள் தேவரீருக்கு,

"அருளுடைய பரமென்றே வன்று தானே
யானுளனென் றும்மெனக்கே யாணவாதி
பெருகுவினைக் கட்டென்று மென்னுற் கட்டிப்
பேசியதன் றேயருளால் பேசிற்றன்றே"

என்ற கிரமப்படியே வழிவழியாக (வாழையடிவாழையாக) அடிமையாவோம், எங்களையாட்கொள்வது தேவரீருடைய கடைமையாகும் என முறையிடவும்,

ஸ்ரீநந்தியெம்பெருமானவர் மிக்க வல்லமையைக் கொண்டு விளங்குவனவான சுரிகையையும், பிரம்பினையுந் தாங்கி பூலோகத்தின் கண்ணிருந்து சிவசாலோக்கியம், சிவசாமீப்பியம், சிவசாரூப்பியம், சிவசாயுச்சியம் ஆகிய பதவிகளைப் பெறவரும் அன்பர் யாரோ என்று எதிர்பார்த்துக்கொண்டும், மற்றவர்களில் யாரேனும் சிவதரிசனத்தின் பொருட்டு வருவாரேல் அவர்களைச் சமயமறிந்து உட்புக உத்தரவுகொடுத்தும் வரும்

தொழிலில் மிக்க வல்லவராய் முதல் வாசல்காக்குந் தலைவராயமர்ந்திருக்கவும்,

இதுவே ஈஸ்வரனுனவர் நமக்கெல்லாம் திருவருள் சுரந்து கடாட்சிக்கும் காலமென்று ஐயமின்றி யுணர்ந்து பிரம விட்டுணுக்கள் முதலிய தேவர்களெல்லாம் புடை சூழ்ந்து நெருப்பினிடத்துக் குளிர்காய்வோர் அந்நெருப்பின் சமீபமாகச் சென்றால் சுடுமென்றஞ்சித் தூரவிலகியும், குளிருங்காய்வதுபோல் நெருங்காது நெருங்கி,

"வாழ்த்துவதும் வானவர்க டாம்வாழ்வான் மனநின்பால்
தாழ்த்துவதுந் தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்
சூழ்த்துமது கரமுரலுந் தாரோயை நாயடியேன் [டி
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுன்னைப் பணிகுவனே"

என்றவண்ணம் ஏகாங்கம் முதலிய உறுப்புகளால் வணங்கி ஓ காமதகனு! கங்காதரனே! கபாலமேந்தீ! காளகண்டா! கயிலைமூர்த்தி! என்று துதித்து ஓ சுவாமீ! அடியோங்களுக்குத் தேவரீரால் அநுக்கிரகிக்கப்பட்டுள்ள பிரமபதவி, விஷ்ணுபதவிகள் என்றும் அழியாமல் நிலைத்திருக்கவேண்டும் என மனோசங்கல்பத்தை முறையிட்டுக்கொள்ளவும்,

அன்பர்களெல்லாம் சிவபெருமானார் ஸ்ரீபார்ப்பதா தேவியோடு எழுந்தருளியிருக்கின்ற அர்த்தநாரீஸ்வர கோலத்தைக்கண்டு மிக்க ஆநந்த மேலீட்டால்,

“ கண்ணார நீர்மல்கி யுள்ளநெக் குருகாத
கள்ளனே னானு மோ
கைகுவித் தாடியும் பாடியும் விடாமலே
கண்பனித் தாரை காட்டி
யண்ணா பரஞ்சோதி யப்பா வுனக் கடிமை
யானெனவு மேலெழுந்த
வன்பாகி நாடகநடித்ததோ குறைவில்லை
யகிலமுஞ் சிறிதறியு மேல்
தண்ணாரு நின்னதரு ளறியாத தல்லவே
சற்றேனு மினி திரங்கிச்
சாசுவத முத்திநிலை யீதென் றுணர்த்தியே
சகசநிலை தந்து வேறொன்
றெண்ணாம லுள்ளபடி சுகமா யிருக்கவே
யேழையேற் கருள்செய் கண்டாய்
இகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி
யெங்கு நிறைகின்ற பொருளே ”

என்று ஸ்ரீ தாயுமான சுமாமிகள் அழுதவாறே அரஹர, வ சிவ, என்கிற ஒலியானது சமுத்திரகோஷத்தினும் மிகுதிப்படச் சொல்லியழவும்,

வெண்டாமரையில் வாழும் சரச்சுவதா தேவியும், மாவின் மார்பில் விளங்குபவளாகிய இலட்சுமியும் நின்று பார்ப்பதாதேவியின் பணிவிடைசெய்துவரவும், பல பூதகணங்கள் புடைசூழவும், கின்னரர்கள், கந்தருவர் முதலியோர் கீதம்பாடவும் அநேக ஆடம்பரத்துடன் அச்சபையைக் கண்டோர்களுக்கே இனிப்பிறவியில்லை யென்று சொல்லுவதாக அச்சபை மகா உல்லாசமா யிருந்தது.

இப்படிப்பட்ட விபவங்களோடு எழுந்தருளியிருந்த சிவபெருமானனவர் செந்தமிழ்க்கல்வியில் வல்லவரும், சிவஞான அமிர்தமுண்ட அருட்கடலுக்கு ஒப்பானவருமாகியஸ்ரீமங்மாணிக்கவாசகரை அடிமைகொண்டாள வேண்டுமென்று தமது ஞானசத்தியின் பிரேரபணை யால் தம்முள்ளத்தின்கண் சங்கற்பஞ்செய்தனர்.

அப்படித் திருவுளங்கொண்ட பரமேஸ்வரனனவர் தம்மைச்சூழ்ந்திருந்த சிவகணங்களை நோக்கி, ஓ கண நாதர்களே! நீங்கள் உலகத்திலுள்ள மனிதர்களைப் போல் ரூபந்தாங்கி என்னுடன் வாருங்களென்று சொல்ல, அவர்களும் அப்படியேயாயினர்.

உடனே சிவபெருமானனவர், ஒரு ஞானசிரியர் வ வந்தாங்கி அச்சிவகணங்களாகிய அடியார்களெல்லாம்

தமக்கு மிக்க பரிபக்குவம் வாய்ந்த சீடர்களாகத் தம்மைத் தொடர்ந்து அர அர வென்னும் கோஷம் சமுத்திரசத்தத்தைப் பார்க்கினும் மேற்பட்டு விளங்கத்தாம எழுந்தருளியிருந்த ஸ்ரீகயிலாசமலையைவிட்டு நீங்கி,

"வெம்பிறவி வேலைதனில் வீழ்பவர்களெல்லாம்
நம்புசிவ நாமமெனு நற்புணை பிடித்தால்
எம்பரனருட் கரையிலேறு துறையாமல்
அம்புவிமொழிக்குள பெருந்துறை யடைந்தோர்"

என்றவண்ணம் ஜெனனமென்னும் சமுத்திரத்தில் விழுந்து வருந்துகின்றவர்களெல்லாம் சிவநாமமென்னும பஞ்சாட்சர தெப்பத்தை ஆதாரமாகக்கொண்டு மோட்சமென்னும் கரையில் ஏறுவதற்குத் துறையாயிருப்பதாகிய திருப்பெருந்துறை யென்னும் திவ்விய க்ஷேத்திரத்தை யடைந்து அதின் பக்கங்களெல்லாம் ஆகாயத்தையளாவியவும், வாசனையிற் சிறந்தனவுமாகிய சந்தனம், சண்பகம், நாரத்தை, வகுளம், கோங்கு, புன்னை, குரா, மரா, தெங்கு, கமுகு முதலிய மரங்களடர்ப்பெற்று, மயில் தனது கலாபத்தை விரித்து ஆடவும், அன்னம் மிருதுவான நடைநடக்கவும், குயில்கள் தீங்குரலாய்க் கூவவும், குரங்குகள் தங்கள் சேஷ்டையாகிய

கூடத்தாடவும், வண்டுகள் ரீங்காரஞ்செய்தலாகிய இசை
கள் பாடவும், விழுகின்றதேன் துளிகள் 'ஆநந்தக்கண்
ணீராகவும், வண்டுகளின் ரீங்காரம் தோத்திரமாகவும்
மிக்க வணக்கத்துடனே மலர்களை யேந்திக்கொண்டு
பரமசிவனுக்கு குருமூர்த்தத்திற் கெதிரே அன்பர்கள்
போல் நிலைத்திருந்த ஒரு பூஞ்சோலையைக் கண்டு,
அந்தச்சோலையின் மத்தியில் கிளைகள் அடர்ந்ததும்
மிக்க உன்னதமானதுமாகிய ஒப்பற்ற ஒரு குருந்தமா
த்தின்கீழ் அடியார்களெல்லாம் தம்மைச் சூழும்படி
ஸ்ரீமாணிக்கவாசகரது மலபரிபாகமாகிற காலத்தையும்
அவரது வருதலையும் எதிர்பார்த்துக் கொண்டெழுந்தரு
ளியிருந்தனர்.

இவ்விதமாக ஸ்ரீசிவபெருமானனவர் இருக்க, இனித்
திருவாதவூரரானவர் அநேககாவதங்களுமகன்று திருப்
பெருந்துறையை யடைந்து அப்பதியின்கண் மிக்க உன்
னதமாயும் செழித்தோங்கியு மிருக்கின்ற சிவபெருமா
னர் குருமூர்த்தமா யெழுந்தருளி யிராநின்ற பூஞ்சோ
லையை வழியாகக்கொண்டு உடற்சுமை நீங்கப் போய்க்
கொண்டிருக்கும் போதே அர ஹர, சிவ சிவ என்கிற
கோஷம் சமுத்திரத்தினும் மிகுதியும் கோஷிப்பதைக்

காதினால் கேட்டுத் தமது ஏவலாளிகளைப் பார்த்து நீங்கள் முன்னிதாகச் சென்று நமக்கு முன்னரே அரகோஷம் சிவகோஷம் கேட்கின்றதே அது யாதெனத் தெரிந்து வாருங்களென்று அநுப்பினார்.

உடனே ஏவலாளிகள் ஸ்ரீமாணிக்கவாசகரது திருவாணையின்படியே போய்ப்பார்த்து விரைந்துவந்து ஸ்ரீமாணிக்கவாசகரைப் பார்த்துத் தாங்களிட்ட ஆஞ்ஞைபின்படியே போய்ப்பார்த்தோம் இப்பூஞ்சோலையில் ஒரு விசித்திரமான குருந்த மரத்தின்கீழ் சிவபெருமானே இங்கு எழுந்தருளினார் போன்று ஒரு ஞானாசிரியர் எழுந்தருளியிருக்கின்றனர். அவரை அநேக அடியார்கள் சூழ்ந்து அச்சிவகோஷ்டம் செய்கின்றனர் என்றனர்.

அம்மொழிகேட்ட திருவாதவூரருக்கு சிவனையடையும் ஆதரவு மேன்மேலும் ஓங்கி வளரச்சீக்கிரமே அப்பெரியவர் எழுந்தருளியிருக்கும் மரத்தினிடஞ்சென்று மிகவும் சந்தோஷித்து தாம் ஆரோகணித்திருந்த ரத்தினப் பல்லாக்கிலிருந்து மிறங்கி 999 அடியார்கள்சூழ அஞ்ஞானாசிரியர் எழுந்தருளியிருக்குஞ் சபையைக்கண்டு ஆநந்த மேலிட்டால் மானதவழியால் வணங்கிக்

காயிக வழியால் வணங்காதவர்போல அங்குசென்று நின்றனர்.

இவ்வண்ணம் திருவாதவூரரானவர் சிறிதுநேரம் நின்றிருந்து அக்குரு மூர்த்தியினுடைய உருவங்களைச் சிர முதல் பாதமீறாக நன்றாய்ப் பார்த்துப் பிறகு அவரது திருக்கரத்திலிருந்த புஸ்தகத்தை நோக்கி, ஓ சுவாமீ! தங்களது திருக்கரத்தில்விளங்குகின்ற புத்தகம்யாது? அதை எனக்கு தேவரீர் திருவாய் மலரவேண்டும் என்று வினவ, அதற்கவர், அப்பா! இது "சிவஞான போதம்" என்று சொல்லப்படும் ஒரு நூல் என்றனர்.

அதுகேட்ட ஸ்ரீமங்மாணிக்கவாசகரானவர் ஓசுவாமீ! தேவரீர் திருவாய்மலர்ந்தருளிய புத்தகத்தின் திருப்பெயரானது;

"சிவஞான போதம்" என்பது.

இப்படிப்பட்ட பேர் இந்நூலுக்குக் காரணம்பற்றியே வந்திருப்பதாகத் தெரியவருகின்றது. அக்காரணத்தையாராய்ந்து பார்க்கும்போது;

"சிவஞான போதம்" என்னும் பேரைப்பதச்சிதைவு செய்ய வேண்டி வருகின்றது. அப்படி சிதைத்தால்; அது

சிவம்+ஞானம்+போதம்=என்று மூன்று பதங்களாக ஏற்ப ட்டுப் பின்னர், முதல் பதமாகிய சிவம் என்னும் பதத்தோடு ஞானம் என்னும் பதம் சேரவேண்டியது கிரமம். அப்படி சேரும் போது அந்த முதற்சொல்லின் கடையிலிருந்த மகரமெய்யானது கெட்டுப்போக உடனே ஞானம் என்னுஞ் சொல் கலக்க சிவம்+ஞானம் என்பது போய் சிவஞானம் என வந்து பிறகு இரண்டு சொல்லும் சேர்ந்து சிவஞானம் என்னும் ஒரு சொல்லாய்ப் போதம் என்னுஞ் சொல்லோடு சேரவேண்டியது கிரமம். அப்படி சேரும்போது அச்சிவஞானம் என்னுஞ் சொல்லின் கடையிலுள்ள மகரமெய்யானது கெட்டுப்போக உடனே போதம் என்னுஞ் சொல் கலக்க சிவஞானம்+போதம் என்பது போய்ச் சிவஞானபோதம் என ஆகின்றதாக ஏற்படுகின்றது.

அப்படி பதைச்சிதைவு மார்க்கத்தில் கொண்ட

1. சிவம் என்றால் என்னை ?
2. ஞானம் என்றால் என்னை ?
3. போதம் என்றால் என்னை ?
4. இப்பெயர் இந்நூலுக்கு காரணமாயினது எப்படி ?

என்று ஸ்ரீமந்மாணிக்கவாசகர் அக்குருமூர்த்தமாயெழுந்தளியிருந்த சிவபெருமானைக்கேட்டு, தேவரீர் இவ்வினாக்களுக்குத் தக்கவாறு சுருதி, யுக்தி, அனுபவங்களுக்குப் பொருந்த விடையளிப்பிரேல் உம்மையேஉடவால

விருட்சத்தின்கீழ் எழுந்தருளியிருந்து ஜனகாதி நால்வர்க்கு அக்காலத்தில் சின்முத்திரோபதேசஞ் செய்தருளிய சிவபெருமானைக்கொண்டு நாம் உமக்கே அடிமையாவோம் என்று புகன்றனர்,

அம்மொழியைக் கேட்ட சர்வேஸ்வரனாவர் ஓ, அன்பனே! நீ கேட்ட நான்கு கேள்விகளைப்பற்றி மிகவும் சந்தோஷித்தோம்; அவை உட்கிடைப்பொருளை வெளிப்படுத்துவனவாகையால். ஆனால் அக்கேள்விகளுக்கு விடையளிப்போம் அவற்றை நன்குணர்வையாக. என்று சொல்லி சொல்லத்தொடங்கினர்.

௧. வினா. முதலாவது: சிவம் என்றால் என்னை?

ஆ. விடை: சிவம் என்பதற்குப் பொருள் மங்கலம் என்பது. அம்மங்கலமே வடிவாகக்கொண்ட பொருள் ஒன்றிருக்கின்றது. அது சர்வ வியாபகமாய் எல்லாச்சர அசரங்களிலுங் கலந்துள்ளது. அது மௌன ஞானிகளாலறியப்படுவதேயன்றி பாமரர்களால் அறியப்படாதது. வேதமுதலிய கலைகளாலும் இன்னும் தேடப்பட்டுவருவது வேதங்கள்;

“அல்லையீ தல்லையீ தெனமறை யன்மைச்
சொல்லினாற் றுதித்திளைக்குமிச் சுந்தரன்” என்றும்,

" பாயிரமா மறையகத்த மகத்த யின்னும்
பார்த்தளந்து காண்டுமெனப் பல்லூழ்தேடி
யாயிரமா யிரமுகங்க ளாலும்பன்னூ
ளளந்தளந்தோ ரணுத்துணையு மளவுகாணா
தேயிரங்கி யழுதுசிவ சிவவென் றேங்கித்
திரும்பவருட் பரவெளிவாழ் சிவமேயீன்ற
தாயிரங்கி யளிப்பதுபோ லென்போல் வாரைத்
தன்னளியா லளித்தென்றுந் தாங்குந்தேவே "

என்றும் வருந்தி வருந்தித் தேடியும் காணக்கூடாதது. சகளம், நிஷ்களம், சகள நிஷ்களம், என்னும் மூன்று ரூபங்களையும் தனதுசங்கற்பத்தால் அடியார்களது பரிபக்குவத்திற்குத் தக்கவாறு எடுப்பது இன்னும்,

" அரியானை யந்தணர்தஞ் சிந்தையானை யருமறையி
னகத்தானை யணுவை யார்க்குந்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கடங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்துநின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவாநாளே "

இப்படிப்பட்ட குணங்களையெல்லாமுமுடையது. அதுவேநம்மை ரட்சிப்பது, அதுதான் சிவம் என்று சொல்லப்படுவது.

மா. வினா. இரண்டாவது:—ஞானம் என்றால் என்னை?

ஆ. விடை: மேலே விரித்துச் சொல்லப்பட்ட 'சிவம்' என்னும் பொருளைப் பதிலட்சணக் கிரமப்படி ஞானாசிரியன் பாலுணர்ந்து அறிவதேயாகும்.

மா. வினா: மூன்றாவது:—போதம் என்றால் என்னை?

ஆ. விடை: அப்படி அறிந்த சிவமென்னும் பொருளை உண்மையாகத்தெளிந்து அப்பொருளையாஸ்ரயிப்பதேயாகும்.

மா. வினா: நான்காவது:—இப்பெயர் இந்நூலுக்கு காரணமாயினது எப்படி?

ஆ. விடை: மேலே சொல்லப்பட்டனவான மூன்று பொருள்களாகிய சிவம், ஞானம், போதம் என்பவற்றின் கிரமங்களை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உணர்த்துவதாகையால், இந்நூல் காரணவாயிலாகச் சிவஞான போதம் என்று பேரிடப்பட்டது.

இவ்வாறு குருமூர்த்தமாயெழுந்தருளியிருந்த சிவபெருமானனைவர் ஸ்ரீமங்மாணிக்கவாசகரது மனமானது நெருப்பிற்பட்ட மெழுக்கைப்போலிளகும்படிவிடையளித்தனர்.

அங்ஙனம் சிவபெருமானர் திருவாய் மலர்ந்தருளிய நான்கு பதிவிஷயங்களையுங் கேட்டுணர்ந்த ஸ்ரீமங்மாணி

க்கவாசகரானவர் நான்காவதாகிய தீவிரதர பக்குவசத்திநிபாதம் மதிப்பெற்றவரானமையின் அந்தோ!

"பரையிடமாய் நின்றுமுதிர் பஞ்சாக்க ரத்தால்
உரையுணர்வுக் கெட்டாவொருவன்—வரைமகடான்
காணும் படியே கருணையுருக் கொண்டாடல்
பேணுமவர்க் குண்டோபிறப்பு."

என்றபடி உள்ளன்போடு தெரிசித்தவர்களுக்கு அப்பிறப்பிலேயே ஜென்மவேரைக் களைந்தெறியுநிமித்தம்சிதம்பரத்தின்கண்ணே ஆநந்தத்தாண்டவஞ் செய்தருள்கின்ற ஸ்ரீ நடராஜப்பெருமானே, நம்மீது கருணைகூர்ந்து நம்மை யாண்டடிமைகொள்ள ஈண்டு இக்கோலங்கொண்டெழுந்தருளினார்போலும்! என்று மனத்தில் நினைத்து, அந்த ஞானாசிரியரைச் சமீபித்து ஓ, சுவாமீ! அடியேன் உலகத்தின்கண் ஜென்மித்தநாள் முதல் இதுகாறும் செல்வப்பிசாசம் பிடிக்கப்பட்டு வருந்தித்திரிந்திருந்தேன். இப்போதே தேவரீருடைய தெரிசன விசேடத்தால் அவைகளையெல்லாம் அறவே யொழித்துவிட்டேன். ஆசையால் தேவரீரே என்னுடைய பாசங்களையெல்லாம் நீக்கி யடிமைகொண்டு இரட்சிக்கவேண்டும். என்று பலவாறாகமுறையிட்டுக்கண்கள் தாரைதாரையா

கீளைச் சிந்தும்படி அக்குருமூர்த்தியின் திருவடிகளில் விழுந்தெழுந்து ஒரு புறமாக வொதுங்கி நின்றனர்.

இவ்விதமாக ஸ்ரீமந்மாணிக்கவாசகரிடத்தில் நிகழ்ந்த வற்றை அவ்வடியார் கூட்டத்தின்கண்ணிருந்த மிக்க சிரேஷ்டர் ஒருவர்கண்டு எழுந்து சிவபெருமானை நோக்கி ஓ சுவாமீ! இவ்வடியவர் மோட்ச விருப்பங்கொண்டவர்போலும்! ஆகையால், இவரது பாவங்களை நீக்கி ரட்சிக்கவேண்டுமென்று முறையிட்டு வணங்கி நின்றனர்.

அப்பெரியவர் வணங்கிப் புகன்ற கருணை வசனத்தை ஸ்ரீசிவபெருமானனவர் காதாரக்கேட்டு மகிழ்ந்து அந்த ஸ்ரீமந் மாணிக்கவாசகரை யாண்டடிமைகொள்ள நினைந்து சிதம்பரத்தின்கண் நடனஞ்செய்தருள்கின்றவரான ஸ்ரீசிவபெருமானனவர்சந்திரனைக்கண்டு அல்லிகுவிவது போல் முகம் வாடிச் சூரியனைக்கண்ட தாமரை மலர்வதுபோல் ஞானசிரியனைக் கண்டு முகமலர்ச்சிகொண்டு எதிரே நிற்கும் அன்பிற் சிறந்த ஸ்ரீமந்மாணிக்கவாசகரை கிருபா நோக்கத்தால் நோக்கியருளி ஓ, அன்பனே! நாம் இன்றையதினத்தில் உன்னை யடிமைகொள்ளுநிமித்தமே இவ்விடத்தில் எழுந்தருளி யிருக்கின்

ரேம். நீ பூர்வம் செய்த தவத்தால் அடிமை கொள்ளப் போகின்றேம், ஆகையால் மனம்வருந்த வேண்டாம் என்று திருவாய் மலர்ந்தனர்.

அதின் பின்னர் ஸ்ரீசிவபெருமானவர் தம்மைச் சூழ்ந்திருக்கின்ற சிவனடியார்களில் மிக்க பெரியவராய் யாவர்க்குந் தலைமை பூண்டவராகிய ஒருவரைப்பார்த்து, ஓ அன்பனே! நாம் இத்தொண்டனைச் சேர்ந்து வருத்திக் கொண்டிருந்த மாயைகளையெல்லாம் நீக்கி இன்றைக்கு அடிமையாக்கிக் கொள்ளவேண்டும், அங்ஙனம் செய்வதற்கு இது மிகவும் சிறந்தநாளாகும். ஆகையால் அதற்குச்செய்யவேண்டிய கிரியைகளையெல்லாம் சீக்கிரமே செய்து முடிப்பாயென்று ஆஞ்ஞாபித்தனர்.

இவ்வண்ணம் இறைவனது ஆஞ்ஞையைச் சிரமேற்கொண்டு அச்சிவனடியாராய் வந்திருக்கின்ற கணநாதரானவர் மிகவும் விரைவாகச்சென்று அச்சோலையினிடத்தே சுத்தமான ஓரிடத்தைக்கண்டு அவ்விடத்தில் கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூக்களாகிய நால்வகை புஷ்பங்களிலுமிருக்கின்ற அநேக சாதிகளாகிய புஷ்பங்களைக்கொண்டு தொடுக்கப்பட்ட புஷ்பமாலைகளாலும் மத்தியில் பொன்னைப் பதித்து, ஓரத்தில் முத்

னுக்களால் வரிசைப்படுத்தப்பட்ட பலவகைப் பட்டினா லும் மிக்க சிறந்து விளங்குவதாய் ஒரு கோவில் ஏற்ப டுத்தி, அதில் உயர்ந்த ஆசனமொன்றையுமிட்டு அங்கிரு ந்துமகன்று சிவபெருமானார் எழுந்தருளி யிருக்கின்ற திருச்சபையினிடம் சென்று;

"கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை
யரவாடச் சடைதாழ வங்கையி னனலேந்தி
இரவாடும் பெருமானை யென்மனத்தே வைத்தேனே."

என்றவண்ணம் வஞ்சனையுடையார்க்கு வெளிப்படாத குருமூர்த்தியைக்கண்டு ஓ சுவாமீ! தேவரீர் கட்டளை யிட்டருளிய வண்ணம் கோயில் செய்து முடிந்தது என்று மிகவும் வணக்கத்துடன் விண்ணப்பஞ் செய் தனர்,

அந்தச் சமயத்தில் சூரியன் மேற்கே அஸ்தமிக்க இருள் சூழ்ந்த இராத்திரி பதினைந்து நாழிகைக்குமேல் சகல பிராணிகளும் உறங்குகிறசமயத்தில் ஸ்ரீமணிவாச கப்பெருமானுக்கு மாயை நீங்கிக் கழியுஞ் சமயம் உண் டாகவே சிவபெருமானானவர் இதுவே இவ்வன்பனா

அடிமை கொள்ளுவதற்கு நல்ல சமயமென்றெண்ணித் தம் எழுந்தருளியிருந்த சபையை விட்டு நீங்கித் திருமஞ்சனச்சாலையுட் பிரவேசித்து நல்ல பரிமள கலவைகளையெல்லாம் திருமேனியில்பூசிச் சுத்த கங்காதீர்த்தத்தாலும், வாசனை கலந்த பனி நீராலும் ஸ்நானஞ்செய்து ஈரமாற்றிப் பிறகு விலையுயர்ந்த பட்டுவஸ்திரந் தரித்து முன்னே சமைத்து வைத்திருக்கின்ற கோயிலினுட்சென்று தக்ஷிணாபிமுகமாக ஆசனத்தின் மேலெழுந்தருளினார்.

ஈதுணர்ந்த திருவாதவூரரும் பரிசுத்த மிக்க சலத்தில் ஸ்நானஞ்செய்து சுத்தமாய வெள்ளை வஸ்திரந்தரித்து, திருநீறு உத்தூளனம் பண்ணித்தமக்குத் திருவடி தீட்சைசெய்து ஆண்டருள எழுந்தருளிவந்திருக்கின்ற ஞானாசிரியருடைய திருமுன்னே மிக்க மனமகிழ்ச்சியுடன் வந்து சேர்ந்தனர்.

அதன்பின்னர், மாணிக்கவாசகரானவர் ஆண்டு எழுந்தருளியிருந்த ஞானாசிரியரது திருவடிகளுக்கு முன்னர் அபிஷேகஞ்செய்து அர்ச்சித்துக் குளிர்ந்த பனிநீர் அளாவிய சந்தனத்தை அழகிய திருமேனி முழுவதும் பூசி மிக்க மகிழ்ச்சியடைந்து நிவேதனத்திற்கு வேண்

டிய பருப்பு, தேங்காய்துருவல் சேர்த்துச் சர்க்கரை கலந்தபாலில் சமைக்கப்பட்ட திவ்யமாகிய அமுதினைப் பொன்னாற்காலியின்மேல் விளங்குகின்ற பொற்றட்டிற் படைத்து நெய், வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம் வைத்து விஷ்ணு, பிரமேந்திராதி வேண்டுகோளுக் கிரங்கி ஆலகால விஷத்தையுண்ட கடவுளே! நீர் இவ்வமுதத்தையும் உண்டருள வேண்டுமென்று மிக்க ஆவலுடன் வேண்டிக்கொண்டனர்.

இவ்வண்ணம் வேண்டிக்கொண்ட மாணிக்கவாசகர் வேண்டுகோளுக்குச் சிவபெருமானனவர் இரங்கி அவ்வாறே திருவமுது செய்து சுத்தசலத்தினால் கையைச் சுத்தஞ்செய்தபின்னர், வெற்றிலைப்பாக்கைக்கொடுத்து தூபதீபஞ்செய்து அழகிய திருநீறு தரித்துக் கண்ணாடி காட்டி பட்டுக்குடை பிடித்து வெண்சாமரையும், ஆலவட்டமும் வீசி ஆசனத்திலெழுந்தருளியிருக்கின்ற ஞானாசிரியருக்கெதிரேதமது இருகரங்களிலும் மலரைஏந்திக்கொண்டு நின்றனர்.

இப்பால் ஞானாசிரியரானவர்

பூதங்களல்ல பொறியல்ல வேறு புலனல்ல வுள்ளமதியின்
பேதங்களல்லவிவை யன்றி நின்ற பிறிதல்லவென்று பெரு நூல்

வேதங்கிடந்து தடுமாறும் வஞ்சவெளி யென்பகூடன் மறுகிற்
பாதங்கனோவவனை யிந்தநெறி பகர்வாரை யாயுமவரே.

என்னும் தத்துவங்களைக் கடந்து அவற்றிற்குட்படாது விளங்குவதாகிய சிவத்துடன் அறிவுகலக்கப்பெற்று மகிழ்பவராகிய மாணிக்கவாசகர்மேல் அன்புவைத்துக் கிருபாநோக்கஞ் செய்து, உலகத்திலுள்ள ஆன்மகோடிகளுக்கும் உண்மை ஞானத்தை விளக்குவதான பஞ்சாட்சர உபதேசஞ் செய்யச் சங்கற்பித்து அப்பஞ்சாட்சரத்திலும் சிவபீஜத்தை முன்னதாக மாறுவதால் ஏற்படும் காரண பஞ்சாட்சரத்தை மாணிக்கவாசகரது திருச்செவியின்வழியே உபதேசஞ் செய்தனர்.

இங்ஙனம் உபதேசம் பெற்ற மாணிக்கவாசகரானவர் இனியில்லாப் பெருமகிழ்ச்சிகொண்டு தமது ஞானாசிரியரது திருவடித்தாமரைகளில் சாஷ்டாங்கமாக வீழ்ந்தனர்.

உடனேசிவபெருமானனவர் தமது திருவடிகளிரண்டினையும் அவ்வன்பரது சிரசின்மேல் வைத்துத் திருவடி தீட்சையுஞ்செய்தனர்.

அங்ஙனம் சிவ தீட்சை மேற்பட்டவுடனே ஸ்ரீமக்மா

ணிக்கவாசகருக்கு முன்னிருந்த பசுகரணங் கெட்டுச் சிவகரணமுற்றுச் சிவபெருமானது திருவடிகளைக் கை களாரப்பிடித்தெடுத்துக் கண்களிரண்டிலு மொற்றிப் பின்மார்போடணைத்துக்கொண்டு மிக்க மகிழ்ச்சியுடன் எழுந்து, சிவபெருமானைக் கண்ணாரக்கண்டு எதிரே நின்று நமஸ்காரஞ்செய்து இரண்டு கரங்களையும் சிர மேற்கொண்டு விஷ்ணு, பிரமர்களால் தேடியும் காணப் படாத தேவரீரே! இவ்விடத்தில் அடியேனை ஆளுதற் பொருட்டே ஞானசிரியர் வேடங்கொண்டு எழுந்தருளி னீர்போலும்! என்று மனமிளகி;

"ஐயனேயெனை யாண்டருள் புரியும்
ஆதியேயுழை யணிமழு விருக்குங்
கையனேகொடுங் காலனை முனியுங்
காலனேயிரு கண்ணினுண் மணியே
செய்யனேயடி போற்றியென் பெரிய
செல்வமேயடி போற்றிபொய் யினர்தம்
பொய்யனேயடி போற்றியெவ் வுயிர்க்கும்
போதமேயடி போற்றியென் றழுதார்."

இவ்வண்ணம் பலநாமங்களைச் சொல்லியழுதனர்.

இவ்விதம் நிகழுங்காலையில் திருவாதவூரரது பாப் கையாகிய இருள் நீங்கி ஞானமாகிய தேஜஸ் உண்

டர்ந்தது போல் சூரியனானவன் கீழ்த்திசையிலிருந்து உதயமானான்.

உடனே மாணிக்க வாசகரானவர் சிவபெருமான் இராத்திரி தரித்த மாலைகளின் பாரமாற்றுரென்று மனங்கலங்கி அவைகளையெல்லாம் மாற்றினர்.

சிவபெருமானே, பொழுது விடிந்தது. இனித்திருவ ரைதளியிடத்திற்கொண்டுபோய் சிவாகமம் உரைத்தருளவேண்டுமென்றெண்ணி அங்ஙனமே யழைத்துச் சென்று;

சிவாகமோபதேசம் செய்தல்.

“ களிம்பு தோய்ந்தசெம் பனைவுயிர் மருவும்
கருமை கூர்மலங் கண்டது கலச்சூழும்
பளிங்குபோன்ற தன்றன்மை புலப்படுத்தின
பற்றினுடல்பல வெடுத்து முன்றுய்
வளங்குலாம் புவனந்தொறுஞ் செயுமுன
வல்வினைப்பயன் வருமுறை நெறியே
யளந்து நாந்தராநுகர்ந்து மேநுகர்வு
மாக்கியே திரிந்தனை மனவருக்கால் ”

என்றபடி ஓ அன்பனே! உன்னை அநாதியே தொட்டுள்ள மலமானது செம்பினைச் சேர்ந்துள்ள களிம்பு

போல் கூடியிருக்கும். உன்னுடைய தன்மையோ, எதிர்பட்ட வர்ணங்களைப் பற்றுங் குணமுடைய பளிங்கு போன்றதாம். அப்படிப்பட்ட அநாதி மலத்தின் சம்பந்தத்தால் நீ எண்ணிறந்த சென்மங்களையெடுத்து உழன்றாய். அங்ஙனம் எடுத்த ஜெனனங்களில் அந்தந்தப் புவனங்களில செய்யும வினைப்பயனின் கிரமத்தையறிந்து அதை அளவு செய்து உனக்கு உண்பிக்க நாம் கர்த்தாவாவோம். நீ உண்ணுதற்குச் சுதந்தர முடையவனாவாய். ஆனால் அங்ஙனம் உண்ணுமிடத்தில் அதை விட்டு ஆகாமியத்தை விளைத்து உனது அஞ்ஞானத்தால் திரிக்தாய்; என்று ஞானமே திருமேனியாக எழுந்தருளியிருந்த சிவபெருமான் உபதேசிக்க, ஸ்ரீமாணிக்கவாசகரானவர்;

"செய்துளோர் பெறும் வினைப் பயனொருவர்
சேர்க்க வேண்டுவ தில்லெனி னிதுமே
லெய்துமேலிது நுகர்வதென் றறிவ
தில்லைநீ வினை யெனிற்சட மறியா
வுய்தலாகிய நன்னெறி யுணரா
வுனையு முன்வினைப் பயனையு முணர்ந்து
மைசவாமல மொழித்தருள் பிரியா
வாழ்கு நல்லுவம் யாமென மதிப்பாய்"

என்றபடி என்னையாண்டடிமை கொண்டுய்விக்க எழுந்தருளியிருந்த என் தலைவனே! தேவரீர் திருவாய் மலர்ந்தருளியது எனது மந்த அறிவிக்கு புலப்பட்டது. ஆயினும், வினைகளைச்செய்த ஆத்மாக்களுக்கு அவ்வினைகளின் பயனை நடுவே ஒருவரிருந்து ஊட்டவேண்டுவதில்லையென்று விளங்குகின்றதே என்று சொல்ல, அதற்குச்சிவபெருமானவர், திருவாதவூரனே! நீ கேட்ட கேள்வி மிக்க சிறந்ததே. ஆனால், அப்படி யிருப்பதாயின் நீ பேரறிவுடையவனா யிருக்கவேண்டும், அப்படிக்கில்லை. நீ சிற்றறிவுடையவனா யிருக்கிறாய். ஆகையால் மேல் வருவது இன்னதென்றும், புசிப்பது இன்னதென்றும் அறிந்து சேரமாட்டாய். வினையுஞ் சட மாகையால் அதுவும் வந்து சேராது. ஆகையால் உன்னையும், உன் வினைப்பயனையுமறிந்து அஞ்ஞானவடிவமாகிய மலத்தை நீக்கி நாமே மோட்சத்தைத்தருவோமென்றறிவாயாக என்றனர்.

அதுகேட்ட மாணிக்கவாசகர் சுவாமியை நோக்கிச் சுவாமீ! உலகத்திற் சென்மித்துள்ள ஒவ்வொருவர்க்கும் இந்த மலமானது ஒழிவுபெறாமலிருப்பது என்? என்றனர். அதற்குச் சிவபெருமானவர் திருவாதவூர

ருவி லாவகைத் தார்பல சமைத்த
  றணைப்பி லெம்புகழ் சாற்ற லன்புடனு
மேவு மாலய மலகிடன் மெழுகன்
  விளக்க நல்விளக் கிடுதலெம் மடியார்க்
கேவலானவை செய்யுமிச் சரிதை
  யியற்ற வல்லவர்க் கெம்முல களிப்போம்'

கர்மிடத்தில்வைத்த விருப்பத்தால் எமக்கு அணிதற்கு ரித்தானவையாகிய புஷ்பமாங்கள் வைத்தலும், புஷ்பங்களைக்கொய்து சுத்தமாக மிக்க விசித்திரமான மாலை தொடுத்தலும், எம்முடைய திருப்புகழை எடுத்துப் பேசுதலும், ஆலயம் அலகிடுதலும், மெழுகுதலும், தீபம் வைத்தலும் சிவனடியார்கள் வைக்குந்திருப்பணியைத் தலைமேற்றாங்கிச் செய்தலுமாகிய இப்படிப்பட்ட சரியா கிரியங்களைச் செய்து வருவோர்க்கு எம்முடைய சிவலோகத்தில் வாழ்ந்திருப்பதாகிய சாலோக பதவியைத் தருவோம். இரண்டாவது;

## கிரியை.

'கந்த வர்க்கமுங் கிளர்மணப் புகையும்
  கவின்கொள் தீபமும் புனிதமஞ் சனமும்
கொந்து விழ்ந்தகன் மலருமம் றுளவுங்
  கொண்டு மாயையின் குணத்திலொன் றிலா

னையந்து சுத்திசெய் தகம்புற மிறைஞ்சி
யங்கி யின்கடன் கழித்தருள் வழிநின்
றிந்த நற்பெருங் கிரியையன் புடனே
'யியற்ற வல்லவ ரெம்மரு கிருப்பார்'

வாசனைத் திரவியங்களும், தூபங்களும், தீபங்களும், சுத்தமாகிய திருமஞ்சனமும், நல்ல சாதி மலர்களும் பஞ்சகவ்வியம், பஞ்சாமிர்தமுதலிய பூஜாதிரவியங்களை யெல்லாங்கொண்டு மாயா குணங்களையெல்லாம் நீக்கப் பெற்று, பூத சுத்தி, திரவிய சுத்தி, மந்திரசுத்தி, ஆத்தும சுத்தி, இலிங்க சுத்தி, என்கிற ஐந்து சுத்திகளையுஞ் செய்து அகத்தும், புறத்தும் எம்மைப் பூசித்து ஓமாதியாகிய அக்கினிகாரியஞ் செய்து முடித்து திருவருளின் வழியே யிருந்து இந்தக் கிரியையைச் செய்யவல்லவர்கள் எம்பக்கத்திலிருப்பதான சாமீப்பிய பதத்தைத் தாமடையப்பெறுவார்கள். மூன்றாவது :

யோகம்.

'மூக்கு மைம்புல னைந்துட னடக்கி
மூல வாயுவை யெழுப்பிரு வழியைச்
சிக்கெ னும்படி யடைத்தொரு வழியைத்
திறந்து தாண்டவச் சிலம்பொலி யுடன்போய்த்

தக்க ஐஞ்செழுத் தோரெழுத் தருவாக்
தன்மை கண்டரு டரும்பெரு வெளிக்கே
புக்க ழுந்தின ரெமதுருப் பெறுவார்
புலியில்வேட்டுவ னெடுத்தமென் புழுப்போல்'

என்றவண்ணம், ராஜஸம், தாமசம், சாத்துவீகம் என்னும் மூன்று குணங்களையும், சத்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் ஐம்புலன்களையும், உள்ளேயடங்கச்செய்து மூலாதாரம் என்னும் இடமாகிய இத்தேகத்தின்கண் மலத்துவாரத்திற்கும், ஆண்குறிக்கும் இடையேயிருக்கும் ஒரு முக்கிய ஸ்தானத்திலடங்கியிருக்கின்ற பிராணவாயுவை, இரேசக, பூரககும்பகங்களாகிய அக்கினியால் எழுப்பி, சுழிமுனைஸ்தானத்திற்கு ஆதாரமாகவிருக்கின்ற இரண்டுகண்களையும் மூடி மனக்கண்ணாகிய ஒருவழியைத் திறந்து நடனஞ்செய்கின்ற சிலம்பின் ஓசையோடு தொடர்ந்து சென்று தகுதியான பிரணவ பஞ்சாட்சர ரூபமாதலாகிய குணத்தைத்தரிசித்து திருவருளைத் தருகின்ற பரவெளியிற் சென்று அழுந்தினவர்கள் புழுவானது குளவிரூபம் பெற்றதுபோல் எம்மைப்போலாதலாகிய சாரூப்பியத்தை யடைவார்கள்.

நான்காவது:

ஞானம்.

“பரிந்த வான்கலை முழுதுமா கமநூல்
பகுதி யும்பல சமயசாத் திரமும்
தெரிந்து சேர்ந்ததில் வாய்ந்தமுப் பொருளின்
சேதி யேபொரு ளெனமனந் துணிந்து
புரிந்து போந்துள சிற்றறி வனைத்தும்
போக்கி யவ்வறி வெனச்சிவ போதம்
விரிந்து தோன்றநெஞ் சுடையவித் தகரே
மேன்மை யானதம் மெய்ப்பதம் பெறுவார்”

என்றவண்ணம் விசாலமாகிய அறுபத்து நான்கு கலைகளையும், ஆகமங்களையும், பலவகைப்பட்ட சாஸ்திரங்களையும் ஆராய்ந்து அச்சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட பதி, பசு, பாசம் என்னும மூன்று பொருள்களின் இலட்சணங்களை உள்ளபடியே யுணர்ந்து அக் கலைஞானமுதிர்ச்சியால் தம்மிடம் குடிகொண்ட அஞ்ஞானத்தை நீக்கிச் சிவபோதம் வெளிவரப்பெற்ற மனத்தையுடைய பெரியோர்களே நம்முடைய சாயுஜ்ஜியபதத்தைப் பெறுவார்கள் என்றும்,

“மறை நான்கும் பயின்றோதி யிட்டிகளும்பலவியற்றி
மல்கான் ஞாலத்

இறவாத புகழ்படைத்த மீசனிடத் தன்பிலரா
யெண்ணு முள்ளம்
புறமோதிக் கொலைபயின்று மதுமாந்திக் கொடும்பாவப்
புலைய ரேனும்
அரவாணன் திருவடிக்கீ ழன்பினரே லவரெம்மை
யடிமை கொள்வார்.”

என்ற ஆன்றோர் வாக்கின்படி பாப ரூபத்தைப் பெற்றவராயினும், இழிந்த குலத்தவராயினும் நல்லொழுக்கமில்லாதவராயினும், நம்மிடத்தில் அன்பு செலுத்தாதவராயினும், திருநீறு உருத்திராட்சம் தரித்துச் சிவவேடம் பூண்ட அன்பர்களைக்கண்டால் அவர்களிடத்து மிக்க அன்புகாட்டி அவர்களுக்கு சுகபோஜன நல்குமவர்களிடதில் மிக்க அன்பராயிருப்பீராய் யான் என்னும் அகங்காரத்தையும் எனது என்னும் மமகாரத்தையும் நீக்குவோராவார் என்றும், உன்னிடத்தில் விரிந்திருக்கின்ற சஞ்சித வினையானது எம்முடைய கட்சுதிட்டியினாலே வெந்து நீறாயிற்று. இச்சென்மத்தில் அநுபவிக்கும்படி கட்டப்பட்ட பிராரத்துவம் இந்தத்தேகத்துடனேபோம். உன்னுடைய புத்தியில் தங்கிய திருவருளானது ஆகாமிய வினைகளையொழிக்கும். ஆதலின் நீ உன்னுடையனவாக நினைத்திருக்கின்ற பொருளும்,

உயிரும், உடலும் நம்முடையனவாகும். ஆகையால்
நீ இனி உன்னைப்போல் மானிடவடிவங் கொண்டுவந்த
நமது வடிவை உன்மனத்திற் சேர்த்திவைப்பாய். இது
வே உனக்குப் பேருபதேசமென்றுந் திருவாய்மலர்ந்தரு
ளினார்.

இவ்வண்ணம் சிவபெருமானார் உபதேசிக்கவே ஸ்ரீமா
ணிக்கவாசகப்பெருமானார் மிகவும் மனத்தின்கண் சந்
தோஷங் கொண்டவராய் சிவபெருமானது திருவடிக
ளில் அடியற்றமரம்போல் விழுந்தெழுந்து நான் செய்த
குற்றங்களுக்கெல்லாம் மனமிரங்கி நான் சீவன் முத்த
னாதற் பொருட்டுத் தேவரீரது சொரூபத்தைக்காட்டி
யருளினீர் என்று சொல்லித் தமது சிரசின்மேல் இர
ண்டு கரங்களையுங் குவித்துச் சுவாமியை நோக்கி, சுவா
மீ! எனது பொருளும், உடலும், நானாகிய உயிரும்,
இனி உம்மதாகவே நினைத்தேன் என்று சொல்லித்தனது
ஆபரணங்களையும், பாண்டியராஜனால் கொடுக்கப்பட்ட
பொருள்களையும் ஆசிரியருக்கெதிரேவைத்து நமஸ்கா
ரஞ்செய்தார்.

இங்ஙனம் மாணிக்கவாசகரிடத்தில் நிகழ்ந்த செய்
கையைக் கண்ட சிவபெருமானவர் அன்பனே! இப்
பொருள்களையெல்லாம், சிவாலயத் திருப்பணிக்கும்,

தவசிரேஷ்டர்களுக்கும், தரித்திரர்களுக்கும் கொடுத்து விடுமென்று புகன்றனர்.

அவ்வாறே மாணிக்கவாசகரானவர் தம்பாலிருந்த பொருள்களையெல்லாம் செலவிட்டுத் தாம் ஞானபோனகத்தையுண்டு ஜீவன் முத்தராய் அரசவேடத்தைத் துறந்து திருநீற்றுப் பூச்சினையும், கோவண வுடையையும், அழுதகண்ணும், விரித்தமயிருமுடையவராய் பசாசுபிடித்தவரைப் போலிருக்கக்கண்ட தம்முடன் வந்த சேனைத்தலைவர்களும், சுற்றத்தார்களுமாகிய யாவரும் அந்த மாணிக்கவாசகருக்கெதிரே சென்று அவரைத் தொழுது வணங்கி, ஐயா! நீர் வருதல்வேண்டும் என்று அழைத்தனர்.

அதற்குத் திருவாதவூரரானவர் அஞ்ஞானத்தில் அமிழ்ந்துகிடக்கின்ற நீங்கள் யார்? மாயையாகிய பொய்ப் பேச்சுகளையெல்லாம் நம்மிடத்தில் சொல்லவேண்டாம் தூரவிலகிப் போய்விடுங்கள் என்று சொல்லினர்.

உடனே, அந்தப்படைத்தலைவர் முதலாயினோர் மிகவும் மனம் வருந்தினவராய் இது செய்தி நமது அரசனுக்குத் தெரிவிக்கவேண்டுமென்று அவ்விடத்தைவிட்டு நீங்கி அரிமர்த்தன பாண்டியன் கொலுவிருக்குஞ் சபா

மண்டபம் வந்து சேர்ந்து அரசனை நோக்கி, அரசே! தங்களது திருப்பேரைப் பூண்டு மந்திரியாயிருந்தாரது செய்கைகளைச் சொல்லுவோம் கேட்பீராக. அவரும், நாங்களும் மதுரையை நீங்கி அநேக காவதங்கள் கடந்தபின்னர் திருப்பெருந்துறை யென்னும் ஊரைப்போய் சேர்ந்தோம். அப்பட்டணத்தின் மத்தியில் ஒரு பூஞ்சோலையிருந்தது. அதற்குள் சென்றோம். அங்கே ஒரு குருந்தமரத்தின்கீழ் ஒரு பெரியவர் தம்மை அநேக அடியார்கள்சூழ எழுந்தருளி யிருந்தனர். அப்பெரியவரிடத்தில் உமது மந்திரியார்சென்று சிலநேரம் வார்த்தையாடிக் கொண்டிருந்து ஓ சங்கர! சிவனே! நமஸ்காரம என்று சொல்லி அவரது திருவடிகளில் விழுந்து நாம் தரித்துக்கொண்டிருந்த ஆபரணங்களையும், குதிரைகொள்ளக் கொண்டுபோன திரவியங்களையும் அவருக்கே கொடுத்துவிட்டுத் தமது உடல்முழுதும் திருநீற்றைப்பூசிக்கொண்டு, ஒரு கோவணத்தையே உடையாகக் கொண்டிருக்கின்றனர். நாங்களும் அவருக்கு இதமான வசனங்கள் அநேகஞ்சொல்லி யழைத்தோம். எங்கள் முகத்தைத் திரும்பியும் பார்த்தாரில்லை. பித்தம் கொண்டவர் போலிருக்கின்றார். ஆகையால் தேவரீரிடம் முறையிட விரைந்து வந்தோம் என்றனர்.

அது கேட்ட அரசன், மிகவும் கோபாக்கிரங் கொண்டவனுய்த்தமது உடல் முழுமைக்கும் வேர்வையுண்டாக இப்படிப்பட்ட மந்திரிமார்கள் அரசனிடத்திலிருப்பாரானல் அரச செல்வங்களுக்கு என்ன குறைவாயிருக்கும்? என்று மனத்தில் எண்ணினவனுய்ப் பின்னர் வருமாறு ஒரு ஓலையில் எழுதிக் காற்றினுங் கடிதாகச் செல்லும் ஏவலர்களைக்கூப் இந்த வோலையைக் கொண்டுபோய்த் திருப்பெருந்துறையிலிருக்கும் நம்மந்திரியாருக்குக் கொடுத்து ஒரு தினத்திலேயே அவரைக் கைப்பிடியாகக் கொண்டுவாருங்களென்று அவர்கள் கையில் கொடுத்தான்.

உடனே அரசனது உத்தரவின்படியே ஏவலாளிகள் மிகவும் கடிதாகச்சென்று திருப்பெருந்துறையையடைந்து சிவபெருமானிடத்தில் மிக்க அன்பினராயிருக்கின்ற திருவாதவூரரைக் கண்டு, ஐயா! இது அரிமர்த்தனபாண்டியராஜனுல் தேவரீருக்கு வரைந்து விடப்பட்ட திருமுகமாகும். இதை நாங்கள் பார்ப்பது அவசியமாகும் என்று கை நீட்டினர்.

அதற்குத் திருவாதவூரரானவர் சிவனது திருமுகத்தையே யல்லாமல் வேறொரு திருமுகத்தைப் பாராதவி

லையிலிருப்பவராகையால் அதை நீங்களே வாசித்துச் சொல்லுங்களென, அவர்களில் ஒருவன் படிக்கத்தொடங்கினான். எப்படியென்றால்,

"தென்னவ னரச னோலை தென்னவன் பிரம ராயன்
என்னுநல் லமைச்சர் காண்க வெல்லையி றனங்கொண் டேகி
கொன்னுறு பரிகொ ளாமற் கோவணங் கொண்டீ ரிது
மன்னர்தங் கருமஞ் செய்வார் வண்மையென் றுவகை யுற்
[றோம்.

வையக மன்ன ராகி வாழ்வதின் மனைக டோறும்
எய்திய வுதரத் தீயா லிரப்பது பெருமை யென்று
மெய்தகத் தம்மை யாண்ட வேந்தனைப் பிழைத்து வேறு
செய்வது பலிக்குமென்று தேர்ந்தநாற் றுணிவுங் கண்டோம்.

மன்னனை யடைந்து வாழ்தல் வஞ்சகஞ் சுமிழு நாகந்
தன்னுடன் மருவி வாழுந் தன்மையென் றுணர்வீ ராயிற்
றுன்னுமிவ் வோலைகாணும் பொழுதுநந் தூதர் தம்மோ
டிங்கர் வருக மாற னெழுத்தென வுரைத்து நின்றான்."

என்ற பாட்டின்படி

பாண்டிய நாடு, மதுரை.

மதுராபுரியை யரசாளும் அரிமர்த்தன பாண்டியன் எழுதுவது: தென்னவன்பிரமராயன் என்னும் சிறப்புப் பெயரைப்பெற்ற மந்திரி காண்க.

1. நீர் அளவு சொல்லப்படாத மிகுந்த திரவியத்தைக் குதிரைகொள்ளு நிமித்தம் கொண்டுபோய் இதுவரைக்கும் குதிரை கொள்ளாமல் கோவணங் கொண்டீர். ஆகையால் அரசருமந்திரித்தொழின்மை செய்பவர்களுடைய வண்மை இவ்வகைத்தானதென்று மிகவும் மனமகிழ்ச்சியடைந்தோம்.

2. இவ்வுலகத்தை யரசாண்டு சம்பத்துடன் வாழுவதைக்காட்டிலும், பரிவந்தடுத்தால் வீடுகள் தோறும் இரந்துண்பதுவே பெருமையாகுமென்றும், பிரீதியோடு தம்மைச் சவரட்சணை செய்த அரசருக்குத் தீங்கு செய்து தாம் வேறொரு கருமஞ்செய்வது பாபமென்றும் நீர் கற்ற நூலிலாராய்ந்துணர்ந்த ஞானியையும் கண்டோம்.

3. அரசர்களைச் சேர்ந்து வாழ்வது வஞ்சகத்தோடு ஒளித்து வைத்திருந்து சமயம் வாய்த்தபோது கக்கும் விஷத்தையுடைய சர்ப்பத்துடன் கூடிவாழும் தன்மைபோலாமென்று நீர் அறிவீரானால், நாம் எழுதிய இந்த ஓலையைக்கண்டவுடன் நம்முடைய ஏவலாட்களுடனே மதுரைமாநகரத்திற்கு வருவீராக.

இங்ஙனம் :

அரிமர்த்தனபாண்டியராஜன்

இவ்விதமாக வாசிக்கப்பட்ட ஓலையைக்கேட்ட மாணிக்கவாசகரானவர், சிவபெருமானுடைய அடியார்களே எம்மையடிமையாக வுடையவர்களல்லாமல் இவ்வோலைவரவிட்ட அரசனே எனக்குத்தலைவனென்றும், அவனிடத்தில் நான் பிழை செய்தேனென்றும், அவ்வரசன் எழுதிவிட்டதென்னகாரணமோ? என்று மனத்தில் நினைத்து, எமனுடைய ஓலையைக் கொண்டுவருந்தூதர்களே சிவபெருமானுடைய கிருபையால் எம்மையணுகமாட்டார்களே, சிவபெருமானுடைய அடியார்கள் ஒருவருக்கும் அஞ்சமாட்டார்களே என்று சொல்லிக்கொண்டே சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலினுட்சென்று, ஆங்கு கைகளைச் சிரமேற கூப்பி நமஸ்காரஞ்செய்து புண்ணிய மூர்த்தியே! சரப்பாபரணனே! ஆபத்துக்காலத்தில் ஆதரிக்குந் தலைவனே! என்று பலபடச்சிந்தித்து, சுவாமீ! மதுரையை அரசாண்டு கொண்டுவரும் அரிமர்த்தன பாண்டியனுனவன் நான் இன்னும் குதிரை கொண்டுவரவில்லை யென்று கடுஞ்சினங்கொண்டு என்னை வருவதாகச்சொல்லி ஓலைவிட்டிருக்கின்றனன் என்று முறையிட்டனர்.

அதுகேட்ட சிவபெருமானவர், அன்பனே! நீ மனம் வருந்தற்க. என்று சொல்லித் திருநீறு சாத்தி

பொன், ரத்தினம் முதலியவற்றால் செய்யப்பட்ட ஆப ரணங்களையும், நல்ல வஸ்திரங்களையும் கொடுத்து முன்போல் மந்திரிவேடத்தராக்கி, ஒருநல்ல மாணிக்கம் ஒன்றையும் கையிற்கொடுத்து நீ உன்னையழைக்கவந்த தூதர்களுடன் சென்று அரசனைக்கண்டு நான்கொடுத் தனுப்பிய மணியையுங் காட்டிக் குதிரைகளெல்லாம் ஆவ ணிமாசத்திலே மூலநட்சத்திர தினத்திலே வந்துசேரும் என்று சொல்லியிருப்பாயானால், நாம் அன்றைக்கு குதி ரைகளைக் கொண்டு வருகின்றோம் என்று சொல்லி மாணிக்கவாசகருக்கு விடைகொடுத்தனுப்பினர்.

இப்பால் மணிவாசகப்பெருமானார் சிவபெருமானை நீங்கிவர, மனமொருப்படாராய்க் கன்றை நீங்கிப் போகு நதலையிற்றுப் பசுவைப்போன்று கண்களிரண்டிலும் நீ ரைச்சிந்தக் கதறிக்கதறியழுது ஐயனே! என்னை நீக்கி னையோ; என்று மனத்தின்கண் சிவபெருமானது பஞ் சாட்சரத்தை யுச்சரித்துக்கொண்டே தம்மையழைக்க வந்த தூதர்களுடன் திருப்பெருந்துறையை நீங்கி மது ராபுரியில் வந்து சேர்ந்து, தமது அரசனாகிய அரிமர்த்த னபாண்டியனது சபையிற்சென்று அவனைக்கண்டு வ ணக்கஞ்செய்து சிவபெருமானார் கடாட்சித்தருளிய பா

ணிக்கத்தைக்கையுறையாக அரசனிடம் வைத்து அவனுக்கெதிரே நின்றனர்.

அதுகண்ட அரிமர்த்தன பாண்டியராஜனானவன் மணிவாசகப்பெருமானிடத்தில் அத்தியந்த ஆசையுடையவனாய் மந்திரியாரே! நீர் வழக்கப்போலிரும் என்ன அவ்வாறே மாணிக்கவாசகரும் தாம் எழுந்தருளியிருத்தற்குரிய பீடத்தின்மேல் எழுந்தருளியிருந்தனர்.

அதன்பின்னர் அரசனானவன் சிறிது தாமதித்து மாணிக்கவாசகரைப்பார்த்து நீர் குதிரை கொள்ளுநிமித்தம் நாம் கொடுக்கப்பெற்றுக்கொண்டுபோன திரவியங்களையெல்லாம் என்செய்தீர்? என்று வினவ; அதற்கு மாணிக்கவாசகரானவர், அரசனே! நீர் கொடுத்த திரவியங்களையெல்லாங் கொண்டுபோய் இலட்சணப்பழுது சிறிதுமில்லாதனவும், நான்குவேகங்களையுங் கொண்டனவும், உயர்ந்த சாதியினவுமாகிய குதிரைகளையெல்லாம் விலைக்கு வாங்கிய பின்னர், அங்குள்ள பிராமணர்களிடம் சென்று அக்குதிரைகளை மதுரைமாநகருக்குச் செலுத்த நாள் பார்த்ததில் அவர்கள் ஆவணிமாதத்திலே மூல நட்சத்திர தினத்தில் செலுத்தலாம். அது மிக்க உயர்ந்தநாளாகும் என்று சொல்லினர். ஆ

கையால் அந்நாள் வருமளவும் இவ்விடத்திலிருக்கலா மென்று திருப்பெருந்துறை யென்னுமூரிலிருந்தேன். நானுராது உம்முடைய சேனைகளெல்லாம் சீக்கிரமே திரும்பி உம்மிடம் வந்து சில பொய்வசனங்களைக் கூற கேட்டு என்மீது கோபித்து ஓலை வரவிட்டீர். அதி னால நான் வந்துவிட்டேன். ஆனால் குதிரைகள் மாத் திரம் பேலே சொல்லியநாளில வந்து சேரும் என்ற னர்.

இவ்வாறுமாணிக்கவாசகர் சொல்லக்கேட்ட அரசனு னவன் உம்மிடத்தில் எனக்குண்டாயிருந்த நண்பை நீக் குமித்தம் பிறர் சொன்னசொல்லைக்கேட்டுக் கோபங் கொண்டு ஓலையெழுதினேன். ஆகையால் உமக்கு இது விஷயத்தில வருத்தம் வேண்டாம் என்று சொல்லித் தன்னுடைய அரண்மனைக்கு அழைத்துக்கொண்டு போய்த் தன்பக்கத்திலிருக்கச்செய்து விலையுயர்ந்த வ ஸ்திரங்களையும் பொன்னுபரணங்களையும் தரித்துக்கொ ள்ளும்படி கொடுத்து முன்போலவே இராஜகாரியங்கள் நடாத்தும்படி ஆஞ்ஞாபித்துத் தனது கிருகத்திற்குப் போகும்படி விடைகொடுத்தனுப்பினன்.

அவ்வாறு மாணிக்கவாசகரானவர் தமது கிருகத்தி

விருக்க, குதிரைக்கூட்டங்கள் வரவேண்டிய நாளுக்கு இரண்டு நாளுக்கு முன்னதாக அரிமர்த்தன பாண்டிய ராஜனது மந்திரிகளில் ஒருவன் அரசன் தனித்திருக்கும்போது அரசனிடம்சென்று பொருநை நாடனாகிய அரசனே! சரணம்! சரணம்! என்று சொல்லி வணக்கஞ் செய்து எம்மையெல்லாம் கிரமத்துடன் பரிபாலித்து வரும் தலைவனே! நான் சொல்லுவதைச் சற்றுத் திருச்செவிசாய்த்துக் கேட்கவேண்டும் என்று சொல்லிச் சொல்லத்தொடங்கினன்.

அது என்னவென்றால்: தென்னவன் பிரமராயன் என்று உன்னுடைய பெயரை தரித்திருக்கின்ற மந்திரியாராகிய திருவாதவூரரானவர் குதிரை கொள்ளுதற்குத் தேவரீர் கொடுத்தருளிய திரவியங்களையெல்லாம் கொண்டுபோய் சோழநாட்டிலுள்ள சிவனடியார்களுக்குத் தானம் செய்துவிட்டார். அது தெரிந்து தேவரீர் கோபங்கொண்டெழுதின ஓலையைக்கண்டு தங்களது கோபத்தைத் தணிக்கு நிமித்தம் இங்குவந்து சில பிரிய வசனங்களைக்கூறி தேவரீரது கோபத்தைத் தணித்துக் குதிரைகளெல்லாம் ஆவணிமாதம் மூலநட்சத்திரதினத்தில் வருமென்று சொல்லினர். அவையாவும் பொய்யேயாகும் என்றனன்.

அதுகேட்டவுடனே அரசனுக்கு இனியில்லாக்கடுங் கோபமபிறந்து தமது தூதர்களில் சிலரை நோக்கித் தூதர்களே! நீங்கள் மிகவும் சீக்கிரமாய்ச்சென்று சிவ பெருமானார் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கின்ற திருப்பெருந்துறையை யடைந்து அவ்விடத்தில் குதிரைக் கூட்டங்கள் இருக்கின்றனவா, இல்லையா? என்று தெரிந்துகொண்டு வாருங்களென்று சொல்லி யனுப்பினன்.

தூதர்களோ, அரசனுக்கு இவ்வளவு கடுங்கோபம் வந்ததற்குக் காரணம் இன்னதென்று விளங்கவில்லை. ஆகையால் நாம் மெதுவாகச்சென்று வந்தால் நம்மீதும் அரசன் கோபங்கொள்வார் ஆனபடியால் சீக்கிரமே போய்ச் சங்கதியைத் தெரிந்துகொண்டு வந்து சொல்லவேண்டுமென்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு மிக்க வேகமாய்க் காற்றினுங் கடிது சென்று அத்தினத்திலேயே எவ்விடத்திலும் சுற்றிப்பார்த்துக் குதிரைகளைக்காணாமல் திரும்பி வந்து அரசனைக்கண்டு, அரசரே! நாங்கள் திருப்பெருந்துறையை யடைந்து அவ்வூரைச்சார்ந்த பலவிடங்களிலும் திரிந்து திரிந்து பார்த்தோம் எவ்விடத்திலும் ஒரு குதிரையையாயினும் கண்டோமில்லை என்று கூறினர்.

இவ்வாறு தூதர்கள் சொன்ன வசனத்தைக் கேட்ட அரிமர்த்தனபாண்டியனே, ஆ! ஆ! மிகவும் நன்றாயிருக்கின்றது; என்று திருவாதவூரரை வியந்து கோபக்குறியுடன் தண்டலாளர்களைப் பார்த்து நீங்கள் நம்பொருள்களைக் கவர்ந்திருக்கின்ற திருவாதவூரனை வருத்தி பொருள்களையெல்லாம் வசூல்செய்து வாருங்கள் என்றுசொல்லி யனுப்பினன்.

உடனே தண்டலாளர்கள் பிராமண வருணத்திற் பிறந்தவரான திருவாதவூரரிடஞ் சென்று ஐயா, திருவாதவூரரே! அரசன் உம்மிடத்துக் குதிரை கொள்ளு கிமித்தங் கொடுத்த பொருள்களையெல்லாம் வாங்கிவரச சொன்னர். அதற்குக் காரணம் என்னவென்பீரானல், நீங்கள் சொல்லியபடி திருப்பெருந்துறையில் ஒரு குதிரைகூட வில்லை யென்று தூதர்கள் மூலமாக அரசன் தெரிந்து கொண்டதே யாகும். ஆகையால் இனி உம்மை அரசாளவொட்டான் உம்மிடத்தில் வைத்திருந்த ஆசையை இன்றோடே விட்டுவிட்டான் என்று சொல்லி, இப்படியிருப்பதால் அரசன் கொடுத்த பொருளைக் கொடுத்தல் வேண்டும் என்று கேட்டனர். அதற்குத் திருவாதவூரரானவர் ஒன்றும் புகலாமல் மௌனமாயிருக்கவே, தண்டலாளர்கள் அமைச்சுரிமைக் குரித்தாயி

ருந்த வேடத்தை நீக்கித் திருவாதவூரரைப் பலவந்தமாகச் சிறைச்சாலையில் வைத்தார்கள்.

அப்பொழுது சூரியாஸ்தமனமாய் இருளென்னும் பேதைப்பெண் வந்து குடிகொண்டனள்.

அவ்விராத்திரியில் மதுரையில் வாழ்வோரெல்லோரும் அந்தோ! இந்தத் திருவாதவூரரானவர் அரசனது பகையை நீக்கிக்கொள்ளுமாறு முடைத்தாவரோ இத்ற்கு நாம் என்ன செய்வோம்? என்று சொலலி இரங்கித் தலைவர்களைப் பிரிந்த மகளிர் போல்துன்பத்தையடைந்து நித்திரை செய்யாமலே வருந்தி விழித்திருந்தனர்.

இங்ஙனமிருக்குஞ் சமயத்தில் மாணிக்கவாசகருக்குண்டான இடையூற்றை சுப்பிரமணியக் கடவுளுக்கு முறையிடுவனபோல் செவந்த உச்சிக் கொண்டையையுடைய சேவல்களெல்லாம் கூவப் பொழுது விடிந்தது.

எங்களுடைய தலைவனாகிய சிவபெருமான் இன்றைக்கே மாணிக்கவாசகர் பொருட்டு இது காறும் ஆரோகணித்திருந்த ரிஷபத்தின்மேல் ஏறுமல் குதிரையின் மேல் ஏறிவருவார். அதை யாவர்க்கும் அறிவிக்கும்

பொருட்டே நான் வந்தேன் என்று சொல்லுவது போலச் சூரியனானவன் கீழ்த்திசையில் தோன்றினான்.

அது காலையில் பூவுலகத்திற் செங்கோல் செலுத்துகின்ற அரிமர்த்தன பாண்டியன் நித்திரையினின்றும் எழுந்து நித்தியகன்மமுடித்துச் சிவபூசைசெய்து இராஜகோலங் கொண்டவனாய்த் தனது ஆகாயமளாவிய அரண்மனை முகப்பில்வந்து எழுந்தருளியிருந்தான்.

தண்டலாளர்களோ, சிறைச்சாலையில் யாதொரு மனத்தளர்ச்சியுமின்றி யிருந்த மாணிக்கவாசகரிடஞ்சென்று ஐயா! நீர் அரசன் குதிரைகொள்ளக் கொடுக்கப்பெற்றுச் சிவனடியார்களுக்குக் கொடுத்துவிட்ட திரவியங்களையெல்லாம் இப்பொழுதே கொடாமற்போவீரானால் உம்மை வருத்தஞ்செய்வோம் என்றுசொல்லி அத்திருவாதவூரரை அக்கினிபோலு மெரிகின்ற வெயிலினிடைநிறுத்த அவரும் யாதொன்றையுமனத்தில் நினையாதவராய் நின்று;

அங்குநின் றினைப்பார் தம்மை யாண்டவான் மைகை யுன்னி
யிங்குணர்க் கில்லைகொல்லோ வென்றுதம்மனத்தே சொல்லிச்
சங்குவெண் குழையாய் மன்னன் றனக்குவாம் பரிக ணீத
னங்கட னுகு மென்று நவின்றசொல் பொய்ம்மை யாமோ.

ஊனுடம் புடைய வாழ்க்கை யொழிந்தனக் கடிமை யென்று
மானிலம் புகலு மாறு வந்தனே யடைந்தேன் றன்னை
மீனவன் றன்பால் மீள விடுத்தனே வேலை நீரு
ளானபி னந்நீ ராற்று நீரென வாவ துண்டோ."

அறத்தனிச் செல்வி பாக வன்பிலே னின்பா லென்று
வெறுத்திடி லடியேற் கிங்கு வேறொரு துணையு மில்லை
செறுத்தயர் புரங்களெல்லாஞ் செற்றவ னடியான் றன்னை
நிறுத்தினர் வெயிலி லென்றால் நின்புகழ்க் கேற்ற மாமோ

வானநா டவர்க்கு மேலோய் வந்தனக் கடிமை யிப்போ
தானநா னிடும்பை யுற்று லாருனக் கடிமை யாவார்
நானென மனத்தார் சொல்லு கல்லுணா யன்றி நின்ற
வீனனு னொருவன் சொல்வ தேறுமோ வுளத்தி லென்றார்.'

ஓ சங்கரா! அந்தக்காலத்தில் என்னை நோக்கி அன்பனே! நீ அரச சமுகம் போயிரு; ஒன்றும் பயப்படாதை. அரசனுக்குக் குதிரைகள் ஒப்புவிப்பது எனது கடைமையாகும் என் அடியேனுக்குச்சொன்னசொல் பொய்தானோ? நான் உன்னை அடைக்கலமாக அடைந்தபின்னரும் என்னை பாண்டியனிடமநுப்பினை. சமுத்திர ஜலத்தைச்சேர்ந்த ஆற்றுச்சலம் மறுபடியும் ஆற்றுச்சலமாவதுண்டோ? அடியேனிடத்தில் அன்பில்லையென்று என்னை வெறுப்பாயானல்' எனக்கு வேறு

யார் துணையிருக்கின்றனர்? உலகத்தில் சிவபெருமானுடைய அன்பர்புராரோ மாணிக்கவாசகர் என்னும் பேருடையவராம். அவரிடத்தில் அரிமர்த்தன பாண்டியராஜன் மிக்க செல்வங் கொடுத்துக் குதிரை கொள்ளச் சொன்னனும். அவற்றையெல்லாம் அவர் சிவனடியார்களுக்குச் செலவிட்டாராம். ஆகையால் அரசனது உத்தரவுபடி. தண்டலாளர்கள் அவரிடத்தி லிருந்து பொருள் வசூலிக்க வெயிலில் நிறுத்தித் தண்டிக்கின்றுர்கள் என்று பேசிக்கொண்டால் அது உன்னுடைய கீர்த்திக்குத்தகுதியானதோ? இப்படியெல்லாம் அடியேன் சொல்லி வருந்துவது உன்னுடைய திருச்செவிக்கேறுமோ? ஏருதோ? என்று சொல்லியிருந்தனர்.

இங்ஙனம் மாணிக்கவாசகர் கூற்றைத் திருச்செவியில் சிவபெருமான் கேட்டருளி அவ்வன்பரது துன்பத்தை நீக்கக் குதிரை கொண்டுவருந் தொழின்மையை மீக்கொண்டனர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## குதிரையிட்ட சருக்கம். கிளை - 4.

ஸ்ரீசிவபெருமானிடத்தில் மிக்க அன்பினால் மனங்கரைபவராகிய மாணிக்கவாசகர் அரசனது தண்டலாளர்களால் வருந்துவதைத் திருச்செவிசார்த்திய பரமசிவன் பிள்ளைகளுக்குண்டான துன்பத்தைத் தந்தையாயுள்ளோர் நிவர்த்திக்கவேண்டியது அவர்களது கடமையாதலின் காட்டில் ஊளையிட்டு இரவெல்லாம் திரிந்துழலும் நரிகளையெல்லாம் குதிரைகளாகவும், தேவலோகத்தாராகிய தேவர்களையெல்லாம் அக் குதிரைகளைச் செலுத்துகின்ற ராவுத்தர்களாகவும், வரத் தமது மனத்தின்கண் சங்கற்பஞ்செய்தனர்.

அப்படியே நரிகளெல்லாம் எண்ணக்கூடாத தொகையனவாய்த் திரண்டு குதிரைகளான பின்பு தேவர்க

ளும் அவ்வக்குதிரைகளுக்கேற்றராவுத்தர்களாயினார்கள். திருச்சிற்லம்பலத்தில் நடனஞ்செய்கின்றவீரான சிவபெருமானும் ஆரியதேசத்துக் குதிரைவர்த்தகர் போல் வேடங்கொண்டு தமது வேதமாகிய குதிரைமேல் ஏறிக்கொண்டனர்.

அதன் பின்னர் அச்சிவபெருமான் குதிரைகளையும் குதிரை செலுத்தும் ராவுத்தர்களையும் ஒழுங்காக நிறுத்தி வீரர்களெல்லாம் இரண்டு பக்கங்களிலும் சர்வஜாக்கிரதையுடன்வர குதிரைகளின் பாதங்களிலிருந்தும் வெளிப்படும் தூசானது ஆகாயத்தை மறைக்க வேகத்துடன் மிக்க ரூபலாவண்ணியமான குதிரைகளை நடாத்திக்கொண்டு மதுரையை நோக்கிவந்து மதுரையின் எல்லையைக் குறுகினார்.

அதுகண்ட மதுரையிலுள்ளாரிற் சிலர் விரைவாகச் சென்று வேப்பமாலையை தரித்தவனை அரிமர்த்தன பாண்டியராஜனைக்கண்டு வணங்கி ஓ அரசனே! நமது மதுரையின் மதிற்புறத்தே அளவுசொல்லப்படாத ஆரியதேசத்துக் குதிரைகள் நம்மூரை நெருங்கிவந்து கொண்டிருக்கின்றன என்று புகல உடனே அரசனானவன் தண்டவாளர்களால் வருந்திக்கொண்டிருக்கின்ற மாணிக்கவாசகர்மேல் மிகுதியும்நேசம்வைத்து அவனா

முன்னதாக வரவழைத்து அவருக்கு உயர்ந்த பட்டுவஸ்திரம் ஆபரணம் முதலியவைகொடுத்து, நாம் இவ்விடம் வந்திருக்கின்ற குதிரைகளைக் காண்போம் வாரும் என்று அவரை உடனழைத்துத் தனது அரண்மனையை விட்டு வெளியேவந்து ரத்னகசிதமாகிய முத்துப்பல்லாக்கின்மேல் ஆரோகணித்து வையாளிவெளியேமிக்க உன்னதமாயமைக்கப்பட்டிருக்கின்ற சிம்மாசனத்தின்மேல் முத்தமிழ்க்கவிஞர்கள் புடை சூழவும், வேதப்பிராமணர் ஆசி கூறவும், பெண்கள் இரண்டு பக்கங்களிலும் வெண்சாமரை வீசவும், சில பெண்கள் தீங்குரல் கொண்டு பாடவும் மிக்க விநோதக்காட்சியுடனவீற்றிருந்தனன்.

அச்சமயத்தில் அன்று ஆவணிமாதம் மூலநட்சத்திரமாதலால், மாணிக்கவாசகருடைய மனஞ் சந்தோஷிக்கவும், சந்திரவமிசம் விளங்கவும் எக்காலத்தும் பஞ்சாட்சரமும், திருநீறும் சிறந்து நிலை பெற்றோங்கவும், சங்கங்களும், சின்னங்களும், பேரிகைகளுஞ் சத்திக்க அடியிலிருந் தெழுந்துகள் ஆகாசத்திற்பரவப்பெரும் புறக்கடலானது உலகத்திற் பரவி வருவது போல்வந்த குதிரைக் கூட்டங்களை அரிமர்த்தன பாண்டியன் இனிது கண்டான்.

இவ்வண்ணம் வரப்பட்ட சுரிகை வாள் முதலிய ஆயுதங்களையும், பட்டுவஸ்திரங்களாகிய உடைகளையும், மயிற்பீலி, முதலியவற்றையுங் கொண்டவராய ராவுத்தர்களுடன் சிவபெருமானும் ரத்தின கஜிதமாகிய கச்சை யிடுப்பிலே கட்டி அதனிடத்தில் உடை வாளைச் செருகிப் பல நிறத்தையுடைய மாலைகளை புயத்திலணிந்து, அங்கி உடுத்து, பட்டு வஸ்திரந்தரித்து திருமுகம் மிக்க தேஜஸையுடையவராய் குதிரை ஓட்டுஞ் சவுக்கை ஒரு கரத்திற் கொண்டு இவ்வடிவங் கொண்டவர்கள் இப்பூமியில் யாவரிருக்கின்றனர் என்று தம்மைக்கண்டோர் சொல்லிக்கொள்ளும்படி அஷ்ட திக்குகளிலும் அணிந்திருக்கின்ற ஆபரணங்களின் ஒளி விளங்கும்படியாக ஒருவெண் குதிரையின்மேலேறி, வெண்கொற்றக்குடை கிழற்ற யுத்தஞ்செய்வதில் வல்ல குதிரைச்சேனைகளின் மத்தியில் குறறமற்ற ஆரியர்களுக்கரசன் போல் வந்தனர்.

அப்படிவந்த சிவபெருமானை அரிமர்த்தன பாண்டிய ராஜன் கண்டு தனது மனத்தின்கண் மிகவுமகிழ்ந்து கண்களைச் சற்றுமிமைக்காமல் திரிமூர்த்திகளே இப்படிப்பட்ட அழகுடையவர்களாவார்களே யொழிய வேறியார் இருக்கின்றனர் என்று நினைந்து; சிவபெருமானை

னவர் நம்மீது வைத்திருக்கும் பெருங்கருணையால் சொல்லியபடியே இன்றைய தினத்தில் குதிரைகொண்டுவந்தாரென்று வெளிவிடாது சிந்தித்திருக்கின்ற மாணிக்கவாசகரை அரசன் பார்த்து ஐயா! நீர் போய் அந்தக்குதிரைகளை கொணர்ந்திருக்கும் ஆரிய குலத்தினைக் கண்டு அக்குதிரைகளையெல்லாம் ஒரு வீதியிலே நடத்தும்படி சொல்லுமென்று சொல்ல அவ்வாறே மாணிக்கவாசகரும் சிவபெருமானிடஞ்சென்று ஓ சுவாமீ! பிரமவிட்டுணுக்களால்அறியப்படாத தேவரீரின் ரிஷபவாகனத்திருக்கோலத்தையல்லாமல்குதிரைவாகனத்திருக்கோலத்தையும் இன்றைக்கு தரிசித்து வணங்களென்ன தவஞ்செய்தேனோ வென்றும், தேவரீர் சகள வடிவமாகிய இந்தவடிவாய் வந்ததனால் இவ்வடிவைக்கண்டு வணங்கப்பெற்றோம். அல்லது நிஷ்கள வடிவமாக வந்தால் யாவரறிய வல்லவர்? ஆகையாலன்றோ? பெரியவர்களெல்லாம் அடியார்க்கெளியவன் அம்பலவாணனென்று சொல்லுகின்றார்கள் என்று உலகத்தார்கள் பேசிக்கொள்ளுகின்றார்கள் என்றும்; இனிய உபசாரவசனம் சிலமொழிந்து அதன்பின்னர் அரிமர்த்தனபாண்டியன் சொன்னபடியே ஓ சுவாமீ! அரசனானவன் இக்குதிரைகளை யெல்லாம் ஒரு வீதியே செலுத்தச்சொன்னானென்று சொல்லினார.

அதுகேட்ட சிவபெருமான் அக்குதிரைகளை நாகபந்தம், விருத்தம், நெடுவீதியென்கிற மூன்று நடைகளும் பொருந்தும்படி நடத்திக்காட்டிக்கொண்டு பஞ்சேவேகம் போல அரசனுக்கெதிரே வந்தார்.

அதைக்கண்ட பாண்டியராஜனானவன் அக்குதிரைகளுக்கு எசமானனைப்பார்த்து அதிசயித்துச் சிரக்கம்பஞ்செய்து விலையுயர்ந்த வஸ்திரமொன்றை அந்த எஜமானனுக்குக் கைவிரலாற் சுழற்றிக்கொடுக்க. அதை அக்குதிரைத் தலைவராகவந்த சிவபெருமான் தமது சவுக்கின்மேல் ஏற்றுக்கொண்டு புன்சிரிப்பு செய்தனர்.

இங்ஙனம் சிவபெருமான் ஏற்றுக்கொண்டதைகண்டு அரசன் அடா! நாம்கொடுத்த வஸ்திரத்தை மரியாதைக்குரிய இலட்சணங்களால் வாங்காமல் சவுக்கிலேற்றுக்கொண்டானே யென்று கோபங்கொண்டவனு யிருக்கக் கண்ட மாணிக்கவாசகரானவர் அரசனே! கோபிக்கவேண்டாம் அப்படி பெற்றுக்கொள்வது அவர்களது தேசவழக்கமாகும் அதைப்பற்றிக் கோபங்கொள்வது சரியன்று என்று சொல்ல, உடனே அரசன் கோபம் நீங்கினனுய்ச் சில அஸ்வசாஸ்திர வல்லவர்களை வரவழைத்து அவ்வநூலில் வல்லவர்களே! நீங்கள் இக்குதிரைகளைப்

பரீட்சித்து இவைகளுக்குள்ள குற்றங்களையும், குணங்களையும் எடுத்துச்சொல்லுங்கள் என்று ஆஞ்ஞாபித்தனன்.

அங்ஙனமே அஸ்வசாஸ்திரிகளெல்லாம் ஒருங்கேகூடி மேற்படி குதிரைக் கூட்டங்கள் தங்கியிருக்கும் இடஞ் சென்று சந்திரசுழி, அண்டாவர்த்தம், முதலாகச்சொல்லப்பட்ட சுழிகளையெல்லாம் நன்குயாராய்ந்து பார்த்துக்கொண்டு அவ்விடம்விட்டு நீங்கிப் பகைவர்களால் எவ்வகையினும் ஜெயிக்கக்கூடாத வெற்றியினையுடைய அரிமர்த்தனபாண்டியனுக் கெதிரேவந்து ஓ அரசனே! நாங்கள் கற்ற நூலின்படி இங்குவந்திருந்த குதிரைகளையெல்லாம் நன்கு பரீட்சித்தோம். அவைகளெல்லாம் இப்பாண்டிய நாட்டிற்கு மேன்மேலும் க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடிய நற்சுழி, நல்வேகம் ரூபலாவண்ணிய முதலியவைகளைக்கொண்டு விளங்குவனவாகவே யிருக்கின்றனவென்று சொல்லி அரசனை நமஸ்காரஞ்செய்து எதிரே நின்றனர்.

இப்படி அவ்வநூல்வல்லவர் சொல்லக்கேட்ட அரசன் அக்குதிரைகளை விலைமதிக்கவே அத்தொகையானது அரசனுடைய மாணிக்கவாசகரிடம் கொடுத்தநுப்

பிய தொகையைவிட எண்மடங்கு அதிகமாயிருக்கவே ஸ்ரீமாணிக்கவாசகர்மேல் மிக்க அன்புடையவனும் மன மகிழ்ச்சியடைந்து குதிரைகளுக்குத் தலைவனாக ஆங்கு எழுந்தருளிவந்த சிவபெருமானைப் பார்த்துத் தாங்கள் இக்குதிரைக்கூட்டங்களை எமக்குக்கயிறு மாறித்தரக் கடவீர் என்று சொல்லினன்.

அம்மொழியைக்கேட்டுப் பரமசிவனானவர் அக்குதி ரைச் சாத்திரங்களிற் பெரியரோருவனாக் கணக்கணை சார்ந்த அவர் குதிரைகளின் கயிற்றை மாறிக்கொடுக் கப் பாண்டியனது காரியஞ்செய்வோரிலொருவர் அக்க யிற்றை வாங்கிக் குதிரைகளையெல்லாம் லாயத்திற்சேர் த்தினர்.

உடனே அஷ்டதிசைகளிலுமுள்ள ராஜாதிராஜர்க ளெல்லாம் நடுங்கும்படி செங்கோல் செலுத்துந்தன்மை யுள்ள அரிமர்த்தன பாண்டியனும், அன்பிற்சிறந்து தமிழ்வேதபோதுவோராகிய ஸ்ரீமம்மாணிக்கவாசகருங் காணும்படி குதிரைச் சேவகர்களாக வந்த தேவர்க ளெல்லாஞ் சூழும்படி மேகம்போன்ற கறுத்த கண்டத் தையுடைய சிவபெருமானவர் தேஜோமயமாய் விண் ணங்காகின்ற தமது ஆலயத்திற்போயினார்.

அதன்பின்னர் அரிமர்த்தன பாண்டியராஜனானவன் மாணிக்கவாசகரைப்பார்த்து என் அன்பிற்சிறந்த மந்திரியாரே! உம்மாலும், சர்வேஸ்வரன் உம்மிடத்தில் வைத்திருக்கும் கிருபையாலும் இப்படிப்பட்ட குதிரைகள் எனக்குக் கிடைத்தனவென்று மிகவும் புகழ்ந்து மனமகிழ்ந்து முன்கோள்மூட்டியவர்களை யிகழ்ந்து அவரை அரண்மனைக்குப்போக விடுத்துப் பெரியோர்களெல்லாம் தம்மையடுத்து மிக்க ஆசிகொடுத்துவரத்தானும் தனது அரண்மனையிற்போய்ப் புகுந்தான்.

இவ்வாறு அற்றைப்பகல்கழிய அன்று இரவு அனறு காலை சர்வேஸ்வரன் தாம்கொணர்ந்த குதிரைகளையெல்லாம் நெடிய குரலைக்கொண்டு ஊளையிடும் திறத்தனவாகிய நரிகளாகத் திருவுள்ளஞ்செய்தனர்.

அவ்வாறே குதிரைகளெல்லாம் நரிகளாகி ஆங்கிருந்த குதிரைகளைக் கடித்துக் கொன்றும், குதிரைச் சேவகர்களை அதம்பண்ணியும், மற்றுமுள்ள சர்வ வீதிகளிலும் சென்று ஊளையிட்டு மிக்க ஆரவாரஞ்செய்து அம்மதுரைமாநகரெங்கும் அலங்கோலமாச்செய்தும் அவைகட்கெதிர்ப்பட்ட அவ்வூர்ச்சனங்கள் இச்சமயத்தில்எங்களை ஆதரிப்பார் இல்லையோ? அந்தோ! அரசனது செங்

கோல் இவ்வளவு திறமுடையது தானோ? எனச் சிலரும், அந்தோ! அரசனே, மிக்க நியாயவாயிலாகச் செங்கோல் நடாத்துவோனாயிற்றே, அவனது ராஜ்யத்தில் இப்படிப்பட்ட கெடுதி நேரிடுவதற்குக் காரணம் என்னவோ? தெரியவில்லையே, எனச்சிலரும் மனமிரங்கவும் நரிகள் செய்யும் கெடுதிகளையெல்லாம் வலியகுதிரைக்காரர்களெல்லோம் விரைந்து சென்று அரசனது அரண்மனை வாசற்படியையடுத்து ஓ நீதிதவராத நியாயனே! நின் தேயத்தில் குதிரைகளாகிய நரிகள் செய்யும் தீங்கைக் கவனியாதிருப்பது என்னவோ? இது பாண்டியஅரசுக்குத் தகுதியோ? என்று கூக்குரல்போட அக்கூச்சலானது அரசனது காதில் வேலாயுதத்தைச் செருகியதுபோல் மிகவும் உறுத்துக்கேட்க அரசன் இனியில்லாக் கோபங்கொண்டவனாய்த் தனது இரண்டு கண்களிலும் தீ யெழவும், உடலம் வியர்வை விடவுமிருப்பதையுணர்ந்த சிவபெருமானானவர் உடனே நரிகளையெல்லாம் அங்ஙனம் மதுரைக்குத் தீங்கிழையாவண்ணம் நீக்கினார்.

அதன் பின்னர் அரிமர்த்தன பாண்டியராஜனானவன் தனது தண்டலாளர்களைப்பார்த்துத் தண்டலாளர்களே, நீங்கள் சிக்கிரமாக இப்பொழுதே சென்று காட்டில்வா

ழும் நரிகளையெல்லாம் குதிரைகளாக்கிக்கொடுத்த மந்
திரியாகிய திருவாதவூரரைக்கொண்டு வாருங்களென்று
சொல்ல ; தண்டற்காரர்கள் அங்ஙனமே திருவாதவூரர்
எழுந்தருளியிருக்கும் திருமாளிகைக்குச்சென்று ஆங்
கு எம்மணிவாசகப் பெருமானைக் கண்டு, ஐயா! உம்
மை அரசன் அழைத்துவரச்சொன்னாரென்று சொல்லி
னார்.

அதுகேட்ட மாணிக்கவாசகரானவர் புன் சிரிப்பாக
ச்சிரித்து முத்தினொளிபோல் நிலவினைக்கக்கும் திருநீறு
கிய சந்தனத்தைப் பூசிச்சிவபெருமானது திருவடிகளை
ச்சிரமேற்கொண்டு தமிழ் வளர்ப்பானாகிய அரிமர்த்தன
பாண்டியனிடஞ்சென்று அவன் பக்கத்தில் நின்றனர்.

அங்ஙனம் மாணிக்கவாசகரை நிற்க கண்ட மாத்திரத்
தில அரசன் கடுஞ்சினமேற்கொண்டவனாய் தம்மைச்
சூழ்ந்துள்ள மந்திரிமார்களைப்பார்த்து, ஓ, மந்திரிமார்க
ளே, இதோ எம்பக்கத்தில் நிற்கின்ற இவரை நீங்கள்
அறிவீர்களா? இவர் யாரென்றால், நாம் குதிரைகொள்
ளக்கொடுத்தனுப்பிய திரவியங்களையெல்லாம் ஏழைக
ளுக்கும், யாசகர்களுக்கும் வள்ளலாகத்தன்னை நினைந்து
"கடைத் தேங்காயை யெடுத்து வழிப் பிள்ளையார்க்கு

டைக்கது போல" த்தானஞ்செய்து விட்டு, நமது நாடைச்சார்ந்த காடுகளிலிருக்கும் நரிகளை யெல்லாம் குதிரைகளாக்கி நம்முன் கொண்டுவந்து காட்டி நம்மை மயக்கிய க்ஷணபுருஷர். இவரை நீங்கள் நன்கு பாருங்கள் என்றுசொல்லி,

"தன்றொழில் வழுவினோர்கள் தமக்குறு துயரஞ் செய்தல்
வன்றிற லரசர் நீதி யாயினு மறைவல்லாளர்
சென்றுயர் தவசரினிற்போர் தெரிவையர் விருத்தர்பால
ரென்றிவர்க் குறுகண்செய்தலெம்மனோ ரியல்பன்றென்று"

என்றபடி தாங்களளிக்குந் தொழிலில் தவறுதல் செய்தவர்களுக்கு துன்பஞ் செய்யவேண்டியது அரசர்களது நியாயம். ஆனாலும், பிராமணர், தபசிகள், பெண்கள், வயோதிகர், பாலியர் ஆகிய இன்னோர்க்குத் துன்பஞ் செய்வது நன்றன்றென்று மனத்தில் நினைத்தவனாய்த் தண்டலாளர்களை விளித்து, நீங்கள் இவரை என் கண்காணாத விடத்திற் கொண்டுபோய் நல்லவெயிலில் நிறுத்தி எம்மிடத்துப் பெற்றுக்கொண்டுள்ள திரவியங்களையெல்லாம் சிறிதும் குறையாவண்ணம் வாங்குங்கள் என்று ஆஞ்ஞாபித்தனன்.

உடனே தண்டற்காரர்கள் திருவாதவூரனாரைத்

துக்கொண்டுபோய் நல்லவெயில் உறைக்கத்தக்க மணற்றாங்கனவிடத்தில் கோடொன்று வளைவாகக்கிழித்து அதற்குள்ளிருக்கும்படி நிறுத்தினார்கள்.

அப்போது திருவாதவூரரானவர் நரிகளையெல்லாம் குதிரைகளாக்கி அரசனை வஞ்சித்தும், அதனால் அன்பரை வருத்தியுஞ் செய்கின்ற திருவிளையாடற்காரனான சிவபெருமானை நினைந்து;

"தொல்லையோ ரிருவர் தேடுஞ் சோதியே யாது செய்வேன்
தில்லையோர் பரவ நின்ற தெய்வமே யாது செய்வேன்
இல்லையோ கருணை நின்பா லென்றனை யடிமை கொண்டா
யல்லையோ தமியே னின்ன லறிதியோ வறிகி லாயோ.

பரித்திர ணரியேயான பான்மைகண் டடியேன் றன்னை
வருத்தின ரிதனை மாற்ற வல்லநீ மாற்று யாகிற்
றரித்தனை விடத்தை யென்னுந் தன்மையும் புரங்கள் மூன்று
மெரித்தது மிலவாமென்றென் றிரங்கின ரெவர்க்கு மிக்கார்."

என்று பூர்வீகத்தில் திருவண்ணாமலையின்கண் விஷ்ணு பிரமர்களால் தேடப்பட்ட சோதி சொரூபனே! தில்லை மூவாயிரவர் துதிக்கும்படி ஆனந்தத்தாண்டவஞ் செய்தருள்கின்ற ஸ்ரீநடராஜனே! நான் என்செய்வேன்? அடியேன்மீது திருக்கருணை யில்லையோ? இப்பொழுது நீ

என்னையடிமை கொண்டவனல்லையோ? நான் அரசனால்படுந்துன்பத்தை யறிந்தனையோ? அறிந்திலையோ? அரசன் நீர் கொண்டுவந்து காட்டிய குதிரைகளெல்லாம் நரிகளாய்ப் போனதைக்கண்டு அடியேனை வருத்தினான். இதை மாற்றவல்லவராகிய தேவரீர் மாற்றாது விட்டு விடுவீரானால் பூர்வத்தில் தேவர்களது உயிர்களைக்காப்பாற்றி அவர்கள் மனைவியரது மாங்கல்ய சுஸ்திரத்தை நிலை நிறுத்தற்பொருட்டு அவர்களாலும், அசுரர்களாலும் கடையப்பட்ட திருப்பாற் கடலினின்று மூண்டான ஆலகால விஷத்தையுண்டு கண்டத்தினிறுத்தினீர் என்பதும் திரிபுர தகனஞ் செய்தீரென்பதும் பொய்யாகவே முடியும் என்று மனமிரங்கி வருந்தித் துதித்திருந்தனர்.

அதுகேட்ட சிவபெருமானவர், தெய்வகங்கையைப்பார்த்து நீ வைகை நதியிற்போய்ப் பிரவேசித்து நமது அன்பராகிய திருவாதவூரருக்கு அரசன் விளைவிக்குந் துன்பத்தை மாற்றக்கடவை யென்றனுப்பினர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## மண்சுமந்த சருக்கம். கிளை - 5.

ஸ்ரீ சிவ்பெருமானது ஆஞ்ஞையைச் சிரமேற்கொண்டதெய்வ கங்கையானது மிக்க ஆரவாரத்துடன் ஆ! ஆ!! வெகு விந்தை! வெகு விந்தை!! பாண்டியனு ஸ்ரீமாணிக்கவாசகரை வருத்தினன்? அவன் அப்படி செய்யானே, அவன் வருத்துவதை நான் பார்க்கிறேன் என்று சொல்லுவதுபோல் கோவித்துப் பிரவாகித்து வையை நதியிற்கலந்து பெரிய சமுத்திரத்தைப் போல எங்கு பார்த்தாலும் வெள்ளம் வந்தது, வெள்ளம் வந்தது, மதுரைமாநகருக்கு என்ன ஆபத்து வருமோ? தெரியவில்லை என்று பலரும் பேசிக்கொள்ளும்படி ஜலத்தேக்கெடுத்து மதுரை நகரத்து மதிற்புறத்தில வந்து மோதிற்று.

அது கண்ட அரிமர்த்தன பாண்டியனுனவன் அக்காலத்து வழக்கப்படியே சீக்கிரத்தில் தமது அரண்மனையைவிட்டு நீங்கிவந்து பொன், பூ, முத்து, வஸ்திரம் ரத்தினபரணம் முதலியவற்றை மிக்க விலை புயர்ந்ததட்டில்

வைத்து பலவித வாத்தியங்கள் கோஷிக்கச் சுமந்து பாதசாரியாய் வையை நதியை நோக்கிச்சென்று அதைச்சமீபித்து இவற்றையெல்லாம் அந்த ஆற்றில் விட்டு எங்கள் தாய்போன்றவளே ! எங்களைக் காப்பாற்றுங் கைத்தாயே! நீயே எங்கள்மேல் இவ்வளவு கோபங் கொண்டால் வேறு யார் அதைத் தணிக்கவல்லவர்கள்? ஆகையால் என் அம்மணி! நீ கொண்டிருக்கின்ற கோபத்துக்குக் காரணமாக நானாவது, என் குடிகளாவது என்னகுற்றம் செய்திருந்தாலும் இவற்றைப்பெற்று அதைமன்னித்து உன்கோபத்தைத் தணித்து எங்களை ரட்சிக்கவேண்டும். என்று சொல்லித்துதித்து வணங்கிநின்றான்.

இவ்வண்ணம் பல உபசார மொழிகளைச் சொல்லியும் வையையானது சிறிதும்கோபந் தணியாமல் மேலுமேலும் அலையடித்துப் பெருகுவதை அரசன் கண்டு நாமென்ன செய்தோம்? ஒன்றும் செய்யவில்லையே, இது என் இப்படி பெருகுகின்றது என்று நினைத்து மந்திரிகளைப்பார்த்து,

‘ ஆதியாங் கடவு ளெந்தை யாலவா யமலன் மங்கை
பாதியான் சிறந்த பூசை பண்டையிற் குறைந்த துண்டோ

நீதியாந் தவத்தின் மிக்கார் நெஞ்சகம் புழுங்க மண்மேல்
தீதியாஞ் செய்த துண்டோ செப்புமி னமைச்சி ரென்றான்;

மந்திரிகளே! எங்கள் தலைவனும், திருவாலவாயாகிய இம்மதுரையில் எழுந்தருளியிருப்பவனும், உமாதேவிக்குத் தமது பாகத்தைக் கொடுத்தவனுமாகிய சிவபெருமான் விஷயமாகப் பூர்வீகத்தில்செய்த பூசையில்ஏதாவது குறைவுண்டோ? மகாதவசிரேஷ்டர்களில் யார் மனத்தையாவது வருந்தும்படி செய்ததுண்டோ? என்ன குற்றம் நான் செய்தேனென்றும் எனக்குத் தெரியவில்லை. ஆகையால் நீங்கள் ஆராய்ந்துபார்த்துச் சொல்லுங்களென்று சொல்லினன்.

அதுகேட்ட மந்திரிமார்கள் சிறிதுநேரம் யோசித்தாராய்ந்தறிந்து அரசனே! எங்களுக்கொன்று புலப்படுகின்றது. அது என்னவெனின்? நமது முதல் மந்திரியாராகிய திருவாதவூரர் மிகுதியும் சிவபெருமானிடம் பக்திசெலுத்துபவராகையால் அவர்மனம் வருந்தும்படி வெயிலில் நிறுத்தித் தண்டிக்கின்றதே இவ்வெள்ளப்பெருக்குக் காரணமாயிருக்கும். ஆகையால் அவரை அக்கோட்டிலிருந்தும் நீக்கி மனமகிழ்ச்சி செய்தால் இவ்வெள்ளந்தணியும் என்று கூறினார்கள்.

இதைக்கேட்ட அரிமர்த்தன பாண்டியராஜனானவன் மந்திரிகளை மிக்வும் புகழ்ந்து சிலரை அநுப்பி மாணிக்கவாசகரைத் தம்மிடம் வரச்செய்து மிக்க முகமலர்ச்சியுடன், திருவாதவூரரே! நீர் சிவபெருமானது திருத்தொண்டர்களுக்குத் தானமாகக் கொடுத்துவிட்ட பொருள்களெல்லாம் நம்மவேயாகையால் அத்தருமமும் எம்மைச்சார்ந்ததேயாகும். நான் இதுகாறும் இதைக்கவனித்தேனில்லை. ஆகையால் அப்பொருளை வாங்கு நிமித்தம் உம்மை வருத்தியவெல்லாம் என்னுடைய அறியாமையே. இதை முன்னரே அறிந்துகொள்ளாமை என்னுடைய மூடத்தனமே. இதைப்பற்றித் தாங்கள் என்மேல் வருத்தம் ஒன்றும் வையாமல் என்னுடைய வேண்டுகோளுக்கிரங்கி யருள்செய்யவேண்டுமென்று சொல்லித் தேவரீரே சென்று இப்பொழுது மதுரையையழிப்பதாக வரும் வெள்ளத்தைத் தணித்து எங்களைக்காப்பாற்றவேண்டுமென்று வேண்டிக்கொண்டனன்.

அதுகேட்ட விருப்பு, வெறுப்பில்லாதவரான மாணிக்கவாசகரானவர் சிவபெருமானுடைய திருவடிகளை மதுரைமாநகரம் வெள்ளத்தால் கொள்ளப்படாமல் நிலைநிற்கவேண்டுமென்றெண்ணி பரிமேல் வருங் கோலமூர்த்தமாகவே சிந்திக்க உடனே வையை நதியானது பேர்

கொண்டிருந்த பிரவாகம் சிறிது சிறிதாக அடங்கியொழியக்கண்ட பிறவிப் பெருங்கடலை நீந்த வல்லவராகிய திருவாதவூரரானவர் வையை நதிக் கரையில் வந்து சேர்ந்தனர்.

அச்சமயத்தில் தூதர்கள் வந்து மாணிக்கவாசகரை வணங்கி ஏதாவது ஏவலுண்டோ? வென்று எதிர்பார்த்து நிற்கக்கண்ட இவர் தூதர்களே! நீங்கள்போய் இவ்வையைநதியைக் கூடிய சீக்கிரத்தில் கரையடைத்து அணைசெய்தற்கு நம்மூரில் முரசறைந்து அவ்வூர்ச் சனங்களையெல்லாம் வரும்படித் தெரிவியுங்கள் என்று சொல்லியனுப்பினர்.

அவ்வாறே தூதர்கள் சென்று பறையறைவிக்க அதுகேட்ட அவ்வூர்ச்சனங்கள் யாவரும் மண்வெட்டியும், மண்ணெடுக்குங் கூடையும் கொண்டு வையை நதிக்கரையில் விரைந்துவந்து கூட்டமாய்ச் சேர்ந்தனர்.

அதன் பின்னர் மாணிக்கவாசகரது உத்தரவுபடியே தூதர்கள் சீக்கிரஞ்சென்று அளவுகோல் கொண்டு அவ்வவர்களுக்கு வெவ்வேறாக அளந்துவிட்டு அப்படிவிடப்பட்ட இடங்கொண்ட கரையை அடைக்க ஆஞ்ஞாபித்தவாறே யாவரும் அடைக்கத் தொடங்கினார்கள்.

அப்படியடைக்கத் தொடங்கியவர்களிற் சிலர் அவ்வையை நதியின் அலைகள் கொண்டுவந்து ஒதுக்கும் மூங்கிலிலுண்டான முத்துக்களாலும் சிலர்யானைக்கொம்பினிலுண்டான முத்துக்களாலும், சிலர் சங்கினிடத்திலுண்டான முத்துக்களாலும், சிலர்கரும்பிலுண்டானமுத்துக்களாலும், கரை செய்து வந்தார்கள்.

இவ்வண்ணம் கரையடைத்து வந்த மதுரை மாந்தர்களில் ஈஸ்வரனிடத்தில் மிக்க அன்புடையவளாய் தவஞ் செய்வதில் கைதேர்ந்தவளாய் நல்ல சிரேஷ்டமான மனத்தையுடையவளாய்த் தன்னைச் சுவரட்சணை செய்வதற்கு வேறு கதியற்றவளாய்ப் பிட்டு விற்றுச் சீவிப்பவளாய் செம்மனைச்செல்வி யென்னும் பேருடையவளாய் ஒரு கிழவி யிருந்தனள்.

அன்னாளுக்குப் பங்காக விதிக்கப்பட்ட கரையை அடைப்பதற்கு அவளுக்குச் சகாயம் ஒருவருமில்லாமையால் அக்கரை அடைக்கப்படவில்லை. அதனால் பக்கத்துக்கரையடைப்போர் பல முறையடைப்பினும் அடைபடா வழியே ஜலம்பெருகதாங்களடைத்தகரை உடைபடுகின்றதாகையால் மிகவும் வருந்தி அவர்கள் தூதர்களிடத்தில் முறையிட, அத்தூதர்கள் கிழவியி

டம் சென்று அவளை வருத்த, அவள் அதையாற்றாதவளாய்ப் பயந்து நடுங்கித் தான் விற்கும் பிட்டினைக் கூலியாகக் கொண்டு தனக்குப் பதிலாகத்தான் அடைக்க வேண்டிய கரையை அடைப்பதற்குக் கூலியாள் கிடைக்காமையால் மிகவும் துக்கித்து நீண்ட இலையையுடைய சூலாயுதத்தை யேந்தி யிருப்பவரான சொக்கநாதரது திருக்கோயிலினுட் சென்று ஸ்ரீசிவபெருமானைக் கண்டு கண்ணாரத் தெரிசித்து கண்களினின்றும் சிந்துகின்ற சலமானது மார்பின்வழியாகத் தாரைதாரையாயொழுக அவ்வெம்பெருமானது திருவடித் தாமரைகளை வணங்கி நின்று;

"கெட்டாரவக் கச்சுடையாய் நீலசிறந் திருமாதின்
கட்டமுலைத் தழும்புபட்ட வத்தனையுந் திருமார்பா ழும்
கட்டியசெஞ் சடையாயுன் கண்ணருள்கொண் டெம்பொரு
பிட்டினைவிற் றுண்பேற்றும் பேரிம்மை யுளதாமோ."

யாருடனு மினிப் புகல்வே னென்றுடையாய் வையையினன்
னீருடையா தடைக்கும் வகை நீசிறிதின் னருளாயேல்
சீருண்டயா யுனக்கடிமை செய்யுமவர்க் கெளியையென்னும்
பேருடையா யெனப் பலரும் பேசுமொழி பழுதாமா.

தாயுமிலை தந்தையிலை தமருமிலை தமியேனைப்
பேயினுட னின்றாலும் பிரித்தறிய கொள்ளரு

நீயதனை நிலம்பாடென் சிந்தயில்லெவ் துயர்தீர
நீயருளா யாயினுயிர் நீப்பேன்மற் றென்செய்கேன்.”

என்று பலவாறாகத் தன்னுடைய குறைகளைச் சொல்லியழுது ஹே சங்கரா! சொக்கநாதா! இப்பொழுது எனக்கு அரசனால் வையைக்கரையை யடைக்க நியமிக்கப்பட்டமையின் நேரிட்டிருக்கின்ற துன்பத்தை நீக்கத் திருவுள்ளங்கொள்ளாது விட்டு விடுவாயானால், என்னுடைய உயிரைத் துறப்பதற்குச் சித்தமாயிருக்கின்றேன் ஏனென்றால் என்னால் கூலியாகக் கொடுக்கக்கூடிய பிட்டுவாங்கி எனக்குப் பங்காகவந்த வையைக்கரையை யடைக்க ஆள் கிடைக்காதபடி மதுரையில் வாழும் யாவரும்போய் அவரவர்கள் பங்கின்படி கரையடைக்கின்றமையால். ஆகையால் நான் தேவரீரை யடைக்கலமடைந்தேன். இனித்தங்கள் சித்தம் எப்படியோவென்று அந்நரை மூதாட்டியானவள் மிகவும் வருந்தி அன்பிற் பொருந்தி மும்முறை மலரடியிற் சிறந்து படிந்து முறையிட்டனள்.

இங்ஙனம் தளர்ந்து அடிபணிந்து கிளர்ந்து விளம்பாநின்ற கிழவியின் சொல்லைக்கேட்ட சிவபெருமானானவர் எந்த உயிருக்கு எவ்விடத்தில் ஆபத்து வருகின்

றதோ அவ்விடத்தில் அப்பொழுதே திருவருள் செய்கின்றவராகையால் இவள் பொருட்டு மனமிரங்கி அக்கிழவிக்குத்தானே கூலியாளாகவரச் சங்கற்பஞ்செய்து;

'ஆடையுந் துணிந்தசீரை யாகியே கூலியாளாய்க்
கூடையுந் தலைமேற் கொண்டு கொட்டுடைத் தோளராகிப்
பீடை கொண்டயர்வாள் காணப் பெரும்பசி யுடையார் போல
வேடைகொண் டொல்லை வந்தார் வேண்டிய வடிவங்கொள்வார்'

கந்தை கந்தையாய்க் கிழிந்த வஸ்திரத்தை அரையிற் கட்டியும், தலையில்ஒருகூடையைக்கவிழ்த்தும், தோளிலோர் மண் வெட்டுங் கருவியைக்கொண்டும் மிக்க பசியால் வருந்துகின்றவர்போன்று கூலியாள் கிடைக்காமையால் வருந்தி நிற்கின்ற கிழவியானவள் காணும்படி இவ்வூரில் என்னைக் கூலியாளாகக் கொள்ளுவாருளரோ ? என்னைக் கூலியாளாகக் கொள்ளுவாருளரோ ? என்று பன்முறை கூவினர்.

அதுகேட்ட கிழவியானவள் தான் கொண்டிருந்த மனவருத்த முழுதினின்றும் நீங்கினவளாய் அச்சிவபெருமானாகிய கூலியாளையடுத்து ;

" மைந்த நீ யெனக்கின் னாளாய் வருக "

என்றபடி மகனே! நீ எனக்கு இவ்விடத்தில் கூலியா ளாக வரக்கடவை என்று கேட்டனள்.

அதற்குக் கூலியாளாக வடிவங்கொண்டு வந்த சிவ பெருமானவர்,

'முன்னர்க் கூலி-தந்தியேல் வருவல்'

என்றபடி எனக்கு முன்னதாகவே கூலியைத் தருவா யானால் நான் உனக்குக் கூலியாளாகத் தடையின்றி வருவேன் என்று புகன்றனர்.

அது கேட்ட கிழவியாளவள் அப்பா! நீ கேட்கும் வண்ணம் உனக்கு முன்னதாகக் கூலி கொடுக்கத்தக்க செல்வம் என்னிடத்திலில்லை. ஆகையால் நீ மிகவும் பசியோடு களைத்திருக்கின்றதாக எனக்குப் புலப்படு கின்றது. அப்பசியைத் தணித்துக்கொண்டு திருப்தி யடைய உனக்கு இப்பொழுது என்னால் விற்கப்பட்டு வரும் பேரமுதயபோலும் பிட்டினைக்கொடுக்கின்றேன். நீ அதையுண்டு பசியைத் தணித்துக்கொண்டு என்னு டைய களைப்பங்கை அடைப்பாயானல் இன்று மாலை க்குள் இப்பிட்டினைவிற்று உனக்குச் சேரவேண்டிய கூலியைக்கொடுத்து விடுகிறேன் என்றனள்.

... அதற்குச் சிவபெருமானாகிய கூலியாளானவர் இசைந்து ஏ, அம்மை! நீ சொன்னவாறே பிட்டினைத் தருவாயானால், நான் அதையுண்டு உனக்கு ஏற்படுத்தியுள்ள அளவுக்கரையை நானே யடைத்துவிடுகிறேன் என்றனர்.

அதுகேட்ட நரைமூதாட்டியானவள் அப்படியாயின் இதையுண்ணென்று தனது அழுக்குப்படிந்த வஸ்திரத்தின்மேல் வைத்திருந்த பிட்டையிடச் சிவபெருமானாகிய கூலியாளானவர் அதையேற்றுண்டு தாயே! நீ பிட்டுகொடுத்து என்னுடைய தணிக்கொணாப் பசியைத் தவிர்த்தாய். இனி உனக்கு வந்த கரைப்பங்கையடைப்பேனென்று சொல்லி மீண்டும், தாயே! நீ கொடுத்த பிட்டு நன்றாயிருந்தது இன்னும் கொஞ்சம் பிட்டுகொடு என்று சொல்லி அதற்கவளால் கொடுக்கப்பட்ட பிட்டை ஒரு கந்தைத்துணியில் வாங்கித் தின்றுகொண்டே மிக்க அலைகளையுடைய வையைக்கரையிற் சென்று மிக்க தவத்தையுடைய மூதாட்டீ! உனக்கு வந்த பங்கு எது? அதைக் காட்டு என்று கேட்டனர்.

அதற்குச் செம்மனச் செல்வியாகிய கிழவியானவள் ஹே, தம்பி! இதோ அடைக்கப்படாமலிருக்கின்ற

இடமே எனக்குவந்தபங்காகும். ஆகையால்அதை நீ கூடிய சீக்கிரத்தில் அடைக்க வேண்டுமென்ன; அதற்கவர் அப்படியேயாகுக, என்று சொல்லிக் கரையடைக்குந்தொழிலிலிறங்கி;

'பேர்ப்பர்மண் கூடைபெய்வர் பிறைமுடி மேற்சும்மாடு
சேர்ப்பர்பின் சுமந்து வையைத் திண்கரை சொரிந்துமீள்வர்
வேர்ப்பர்மெய் யிளைப்பார்போல மென்றுபிட் டிரசநாவிற்
பார்ப்பரின் கன்னைதன்மேற் பரிந்தருட் பார்வைசெய்வார்.

பிட்டுநன் றென்றுகூறிப் பிறைமுடி யசைப்பார்வேடு
விட்டமென் றசையிற்சால வீசனுக் காமிதென்பார்
கொட்டுடன் கவிழ்த்தகூடை கொண்டுநின் றாடல்செய்வார்
வெட்டிமண் குவிப்பாரோடி விரைந்தடி பாய்ந்து மீள்வார்.

என்றபடி ஒரு முறை மண்வெட்டி கொண்டு மண்ணை வெட்டுவார், ஒரு முறை அம்மண்ணை கூடையிற் போடுவார், ஒரு முறை தம் தலைமேற் சுமையாடை வைப்பார், ஒரு முறை அப்படி மண் கொட்டப்பட்டிருக்குங் கூடையைத் தலைமேல் தூக்கிக்கொள்ளுவார், ஒரு முறை அப்படியே வையை நதிக்கரையைச் சேர்ந்து அதைக் கொட்டுவார், மீண்டும் வேர்ப்பார், மீண்டும் இளைத்துக் களைப்பார், பிறகு தமது நாவினால் அக்கிழ

வியினால் கொடுக்கப்பட்ட பிட்டினை ருசி பார்ப்பார், பின்னர் அதைக்கொடுத்த கிழவியின்மேல் திருவருட் பார்வை செய்வார். ஆ! ஆ!! இப்பிட்டு மிகவும் நன்றாயிருக்கின்றது ஆகையால், இது முன்னே கண்ணப்பனால் சீசாளத்தியில் சிவபெருமானுக்குக் கொடுக்கப்பட்ட பன்றி மாமிசத்தைப் பார்க்கினும் சிறந்ததாயிருக்குமென்பார், பின்னர் கூடையைத் தலைமேற்கொண்டு கூத்தாடுவார், பிறகு மண்ணை வெட்டிக்குவிப்பார், ஓடுவார், அங்கிருக்கும் ஓட்டமாய்ப்பாய்ந்து மண்வெட்டியிருக்குமிடத்திற்கு வந்து மறுபடியும் அவ்விடம் விட்டு நீங்குவார்.

இங்ஙனம் சிவபெருமானாகிய கூலியாளானவர் செய்யுந்தொழிற்றிறத்தைக்கண்ட கிழவியானவள் அப்பா! நீ சீக்கிரமாகக் கரையடைக்க வேண்டுமென்று ஆஞ்ஞாபிக்காதவளாய், அந்தோ! இக்கூலியாள் இப்படி அக்கிரமமான செய்கை செய்வதை அரிமர்த்தன பாண்டியராஜனது ஏவலாட்கள் கண்டால் என்ன துன்பம் விளைவிப்பார்களோ! இதற்கு நானென்ன செய்வேன்? என்று மனத்தில் நினைந்தனள்.

இதைத் தமது ஞான சத்தியாலுணர்ந்த கூலியாளா

மிறைவர் அங்கமூதாட்டியைப் பார்த்து அன்னாய்!
நீ இக்கரை இன்னும் அடைக்கப்படவில்லையே யென்
றுவருந்தாமல் வீட்டுக்குச் செல், நான் இதோ அடை
த்துவிடுகிறேன் என்று சொல்லி ஒரு கூடை மண்ணை
அக்கரையில் விட்டெறிந்தனர்.

அவ்வாறே அங்கமூதாட்டியாகிய பிட்டுவாணிச்சி
யானவள் சிவபெருமானாகிய கூலியாளின் சொல்லைக்
கேட்டுத்தனது வீட்டிற்குப் போய்விட்டனள்.

அதன் பின்னர் வையையென்னும் மங்கையானவள்
சுவாமியே கிழவியின்பொருட்டுக் கரையடைக்குந்தொ
ழிலை மேற்கொண்டாரே யென்றஞ்சி அவருடைய திரு
வடிகளைத் தமது அலைகளாகிய கைகளால் நமஸ்காரஞ்
செய்து வணங்கினாள்.

அதன் பின்னர் கூலியாளாகவந்த சிவபெருமானான
வர் மண்ணெடுக்குங் கூடையே தலையணையாகவும் ஆண
டிருந்த கொன்றைமரத்தின் கீழிருந்த மணலே மெத்
தையாகவும் கொண்டு அதில் மிக்க தொழிற்செய்வதால
வருந்தி யிளைத்தவர்போல நித்திரை செய்தார்.

அப்பொழுது சிவாகம்

தேக்கெடுக்குஞ் செல்வராகிய மாணிக்கவாசகரானவர் அரசிமைத்தொழிலைத் தாங்குவார்போன்று கையில் ஒரு பிரம்பேந்தி பக்கத்திலுள்ளவர்களைப் பார்த்து அவ ரவர்களுக்கு அளந்து கொடுக்கப்பட்ட பங்குகளிலுள்ள நன்மை, தீமைகளையறிந்து வாருங்களென்று சொல்ல, அப்படியே அவர்கள் வையைநதிக்கரையின்மேற் போய்ப்பார்க்க யாவரும் கரையடைத்திருக்கவே மிகவும் சந் தோஷித்துச் சிறிது தூரஞ்செல்ல ஆங்கு பிட்டுவாணி ச்சியின் பாகம் மாத்திரமே சரியாய் அடைபடாமையைக் கண்டு ஆங்குள்ளாரை நோக்கி இது யாருடைய பங்கு? இன்னும் சரியாயடைக்கப்பட வில்லையே, என்று கேட்க, அவர்கள் மதுரைமா நகரத்திலே பிட்டுவிற்றுச் சீவிப்பவளாகிய ஒரு கிழவியிருக்கின்றாள் அவளுடைய பங்கு இதுவே. அவளுக்கு ஆளாக ஒருவன் கரையடைப்பதாக அவளிடஞ்சொல்லி இங்கேவந்து மண்ணை வெட்டி தலைமேலெடுப்பதும், திருப்புவதும், கொட்டுவதும், சிரிப்பதும், பாடுவதும், கூத்தாடுவதும், நெடுநேரம் நிற்பதும், ஓடுவதும், ஓடித்திரிவதும், ஒரு கை மண்கொண்டு கரையிலெறிவதும், போவென்று யாரா வது சொல்லின் வருவதும், வாவென்று சொல்லின் போவதும், பிட்டினைத்தின்பதும், நன்றாயிருக்கிறதென்

று அதைத்சிறப்பிப்பதுமாகவிருந்து இப்பொழுதே சென்று கொன்றைமரத்தின் கீழலில் நித்திரை செய்கின்ருன் என்றனர்.

அதுகேட்ட தூதர்களில் வலியானொருவன் மற்றவர்களைப்பார்த்து நீவிர்போய் அவனைக்கொண்டு வாருங்களென்ன, உடனே ஆங்கிருந்த மிலேச்ச தூதர்களில் ஒருவன் ஓடினன்.

அதுபோது எம்மையடிமையாகக் கொண்டாண்டருள்பவரான சிவபெருமானைவர் திடுக்கென்று விழித்துக்கொள்ளக்கண்ட மிலேச்ச தூதனைவன் அவரைச்சீறுவதாக உறுமிப்பார்த்து எங்களுடைய எஜமானன் உம்மையழைக்கின்ருர் ஆகையால் நீர்வருதல்வேண்டும் என்று கூப்பிட, அவர் பயப்படுவார்போல் நடித்து வாராதிருப்பதைக்கண்டு கோபித்து மிலேச்ச தூதனைவன் அவரது கைகளைப் பிடித்து இழுத்துக்கொண்டு வந்து எஜமானனுக்கு முன்னேவிடக் கொடியவனுகிய எஜமானனும் கண்களில் நெருப்பெழக் கோபித்துப்பக்கத்திலிருந்த ஒரு பாவியைப்பார்த்து இங்கு இவனை ரத்தம் ஒழுகும்படி அடிப்பாயாக என்று ஆஞ்ஞாபித்தனன்.

அவ்வாறே அப்பாவியானவன் அடிப்பதற்குப் பிரம்பினைக் கையிலெடுத்தபோதே முனிவர்கள், தேவர்கள் முதலியோர் கைகூப்பிவணங்கினார்கள். இங்ஙனம் நிகழுஞ் சமயத்தில் அவன் அடிக்கவே கூலியாளாக வந்திருந்த சிவபெருமானவர் உமாதேவியிருந்துவாழும் இடப்பாகத்திலும் அவ்வடிபடாதபடி யாவரும் அச்சமடையும் வண்ணம் உடனே மறைந்துவிட்டார்.

அப்படியவனால் அடிக்கப்பட்ட பிரம்படியானது :

'தார்மேனின் நிலங்குபுய வழுதி மேலுந்
தன்மனைமங் கையர்மேலு மமைச்சர் மேலு
மார்மேலுஞ் சென்றுபெருஞ் சேனை மேலு
மயன்மேலு மான்மேலு மறவோர் மேலுந்
தேர்மேல்வெம் பகன்மேலு மதியின் மேலுஞ்
சிறந்தவளிக் கிரன்மேலுந் தேவர் மேலும்
பார்மேலுங் கடன்மேலு மரங்கள் மேலும்
பட்டதரன் மெய்யிலடி பட்டபோதே.

தந்தமுரு வொழிந்துபிறி தருவ மெய்திச்
சதுமுகனுஞ் சங்காழி தரித்த மாலும்
அந்தமுத லறிவரிதாய் வெளியே நின்ற
வண்ணலார் வடிவிலடி பட்ட போதில்

எந்தவுல கங்களினு மிருந்து ளோர்க
ளெம்முடலி லடியுறைத்த தென்று கூற
முந்திரெழும் பன்மொழிக ளுகாந்த வெல்லை
மோகரிக்கு மெழுகடலின் முழக்கம் போலும்.

மாயையெனுங் கரும்பெரிய புனன்மேன் மொக்குள்
வண்ணமெனு மெண்ணிலா வண்டத் துள்ளு
மேயவகை யெண்பத்து நான்கு நூறு
யிரமான பலயோனி யிவற்றி னுள்ளு
மாயவுயிர்க் குயிராகி நிற்குந் தன்மை
யவனிதலத் தஞ்ஞான ரறிந்து பாதச்
சேயபலர் வழுத்துதற்கோர் கூலி யாளாய்ச்
சென்றுமுடி மண்சுமந்தார் தில்லை நாதர்.

என்ற வண்ணம் அக்கொடியவனடித்த அடியானது அரிமர்த்தனபாண்டியன்மேலும், அவனது பெண்டு, பிள்ளைபாது மித்திரர்கள்மேலும், மந்திரிமார் மேலும் மற்றுமுள்ள சேனைமேலும், இன்னும் உலகத்திலுள்ள சர்வபிராணிகளின்மேலும் பட்டது.

அவ்வாறே ஆங்கு எழுந்தருளியிருந்த மாணிக்கவாசகர் மேலும்படவே அச்சமுற்று அந்தோ! சர்வேஸ்வரனவர் என்னை யாண்டடிமைகொள்ள ஒருத்திக்குக் கூலியாளாகி எழுந்தருளிவந்தாரோ? என்று மிகவும்

மனம் வருந்தி கண்ணீர்சோர விருக்குஞ் சமயத்தில் தூதர்கள் கடிது விரைந்து வந்து ஓ சுவாமீ! என்று விளித்துச் சிவபெருமான செய்த திருவிளையாடல்களை யெல்லா முரைத்தனர்.

அது கேட்ட மாணிக்கவாசகப் பெருமானார் அவர் மண்சுமந்த விடத்தைக் காட்டுக எனலும் அப்படியே அவர்கள் காட்ட அவ்விடம் விரைந்து சென்று மனம் வருந்தி வருந்தி ஆங்கு நிலமாரவிழுந்து புரண்டு அடியில் வருமாறு புலம்புகின்றனர்.

நீறுபடும் பொன்மேனி நின்மலனே நெடுங்கங்கை
யாறுபடுஞ் சடைமுடியா யடியவர்கட் கெளியானே
மாறுபடும்புரமெரித்தாய் மாறுபடும் போதுடலிற்
கூறுபடுஞ் சிவஞானக் கொம்பினுளங் குழையாதோ.

கொங்கையான் மணிமார்பிற் குறியிடுமவ்வீறுடைய
மங்கையாள் பெருமானை மண்சுமக்க நினைத்தானோ
கங்கையாளலைக் கரத்தாற் கரைத்திலளோ புள்ளுருவாம்
டங்கயா சனனறியாப் பணிமுடியென்றறிபாளோ.

பிரமனுடன் திருமாலும் பிறப்பகலப் டல்காலும்
பரிவினுடன் நறுமலரோ பத்தரிடும் பச்சிலையோ
புரிதருஞ் செஞ்சடையோ கற்புதுமதியோ வாயிரவாய்
வரியரவின் பலபடமோ மண்சுமக்குங் கம்மாடு.

கலையறியும்புகழ் வையைக்கரையை திருவம்பலமா
வலையெறியும் புனலோசை யந்தர துந்துமியாகத்
தலைவனடங் கண்டார்க ளரவமெனுந் தவமுனியுங்
கொலைதவிரும் புலியென்னுங் குலமுனியு மானாரோ

மீனேறுங் கொடித்தென்னன் விழிக்கேற விரைக்தாகத்
தானேறுவது கண்டுதெருங் கலைபொற் செண்டேறத்
தேனேறு மலர்க்கொன்றைத் திருமுடிமேன் மண்ணேற
யானேறுஞ் சிவபதமு மெனக்கேற வின்னாது

பொன்னுலகத் துள்ளோரும் புரந்தரனுந் திருமாலும்
மன்னுமறைக் குரியோனும் வழிபடுமைத் தொழில்செய்ய
வல்லை தனக்காளாகி யணிவையை யடைத்தடியுன்
டென்னையருட் பணிகொள்ள விசைந்தனையோ விறையோனே

கட்டுமைத் துணிச்சீரைக் கச்சையுமத் திருத்தோளிற்
கொட்டுமுடித் தலைமீது கவித்ததொரு கூடையுமாய்ப்
பிட்டிகேற்றவ முடையாள் பின்பு வருந்திருக்கோல
மிட்டமுறத் தொழும்படி நான் கண்டிலே னிறையோனே.

தாருருஞ் சடை முடியாய் தவம்பெருக முயன்றவர்க
ணீருரும் புகழ்வையை நெடுங்கரை மேனின்றாரோ
சீருருங் கனகமுடித் தென்னவனே மதுரையெனும்
பேருரிலிருப்பவரோ பிட்டமு திட்டருள்வாளோ.

பொன்வெளித் தலைமீது புண்ணியர்மன்ன சமந்தேறங்
கொன்மலியுஞ் சோலறையுங் குளிர்வையைப் பேராறங்

கன்மமெனும் பகைபோகக் கண்ணுதல்வெம்பரியேறுந்
தென்மதுரை மூதூரு மல்லவோ சிவலோகம்.

என்றவண்ணம் விபூதிதரித்த பொன்போலும் விளங்குகின்ற தேஜோமயனே! கங்காதேவியைப் பொறுத்த சடாபாரத்தை யுடையானே! அடியார்களுக் கெளியானே! திரிபுரதகனனே! உனது உடலத்தின்கண் அந்தப் பாவியானவனடித்த அடி பட்டபோது உனது இடது பாகத்தில் வாழ்பவளாகிய சிவஞானக் கொம்பு போல்பவளான உமாதேவியின் மனமானது கலங்காதோ? எனவும் உன்னை காமாட்சியே மண்சுமக்கும்படி நினைத்தாளோ? அன்றி கங்காதேவியும் தனது அலைக்கரங்கொண்டு அம் மண்ணை கரைத்திலளோ? இங்ஙனம் நிகழ்த்தின உனது முடியானது பிரமன் அன்ன வடிவாய்ப் பலகால் பறந்து தேடியும் காணப்படாததென்றறியாளோ? எனவும் நீ மண் சுமந்தபோது சுமையாடையாகக்கொண்டிருந்தது பிரம, விட்டுணுக்கள் தங்கள் பிறவியைக் களைந்துகொள்ளுதற் பொருட்டு நித்தமிட்டர்ச்சிக்கும் புஷ்பங்களோ? அன்றி,

"குடங்கைநீரும் பச்சிலையு மிடுவோர்க் கிமையாக்குஞ்சாமும்
படங்கொள் பாயும்பூவணையுந்தருவாய் மதுரைப்பரமேட்டி."

என்றவண்ணம் அடியார்கள் அர்ச்சிக்கும் பச்சிலேயோ? அன்றி, செலுத்த சடாபாரமோ? உயர்ந்தசடாயாரத்தில் தரித்திருக்கின்ற சந்திரனோ? ஆயிரம் வாயை படைத்திருக்கின்ற சர்ப்பத்தினது படங்களோ? எனவும், நீ மண்சுமந்தபோது அழகிய வையை நதிக்கரையே வெள்ளியம்பலமாகவும், அலேகளின்சத்தமே தேவதுந்துமியாகவும், கொண்டு செய்த திருவிளையாடலே புலிமுனியும், பதஞ்சலியும் கண்டு தரிசித்தார்களோ? எனவும் நீ குதிரைகொணர்ந்தபோது பாண்டியன் கொடுத்த பட்டுவஸ்திரம் சவுக்கிலும், இப்பொழுது தேவரீருடைய அன்பர்களிடு மலரேறும் சிரசில் மண் கூடையும் ஏறுவதனால், நான் ஏறும் சிவபதமும் எனக்கு ஏறுதற்கினிமை யில்லாததாயிருந்தது எனவும்; தேவலோகத்திலுள்ள தேவர்களும், இந்திரனும், விஷ்ணுவும், பிரமனும் வாழையடி வாழையாக உனக்கு அடிமை செய்ய நீ பிட்டுவாணிச்சிக்கு ஆளாகி அழகிய வையைநதியையடைத்து அடிபட்டு அடியேனைக் கிருபையோடு அடிமைகொள்ளச் சம்மதித்தாயோ? எனவும், நீ துண்டு துண்டாய்க் கிழிந்த வஸ்திரத்தை அரையிற் கட்டி, தோளில் மண்வெட்டிவைத்துத் தலைபின்மேல் ஒரு கூடையைக் கவிழ்த்து பிட்டுவாணிச்சியின் பின்னேவந்த

அழகிய திருக்கோலத்தை அன்பினால் தரிசித்துத் தொழுவதற்கு நான் பாக்கியஞ் செய்தேனில்லையே! எனவும், நீ கூலியாளாக வந்த திருவுருவத்தைக் காணு தற்குத் தவஞ்செய்தவர்கள் வையைநதிக்கரையின்மேல் நின்றவர்களோ? அன்றிப்பாண்டியராஜனோ? மதுரை வாழ் குடிகளோ? பிட்டமுதிட்டருத்திய செம்மனச் செல்வியோ? எனவும், நீ குதிரை கொணர்ந்ததும், மண் சுமந்ததும் இவ்விடத்திலேயே யாகையால் இம்மதுரை மாநகரமே நீ வாழ்தற்குரிய சிவலோகமாகும் எனவும் பலவாறு மனமிரங்கிச் சிவபெருமானிடம் கொண்ட மிக்க அன்பின் திறத்தால் வருந்தியிருந்தனர்.

அது காலையில் வையைநதியானது தனது பெருவெ ள்ளம் வடிந்தது. கண்டானரசன். கவற்சியைவிண் டான். இது சிவன் செயலேயென்று கொண்டான். பிறகு மணிவாசகரிடம் வந்தான். வந்து மணிவாசகரே! நீர் பொன்னுலகத்தினின்றும் வந்து திருவாதவூரிலே ஆமாத்தியர் குலத்திலே யவதரித்து எனக்கு மந்திரியா கிச் சிவபெருமானது பரியேறுங்கோலத்தை எனக்குத் தரிசிப்பித்து என்னுடைய ஒழியாப்பந்தத்தை நீக்கியரு ளினீர்.

ஆனால், நானோ! சர்வேஸ்வரன் என்னுடைய பிறவியைக் களையத்தான் திருமேனி கொண்டெழுந்தருளினாரென்றுணராமல் பிரம விஷ்ணுவிந்திராதி தேவர்களால் தொழப்படும் பெருமானுக்கு ஒரு அழுக்கு வஸ்திரத்தைக்கொடுத்தேன். ஆ! ஆ! நான் என்னபிழை செய்தேன்? அன்றி அப்படிப்பட்ட சிவபெருமானுக்கு நீ உண்மை பக்தர் என்றதையும் நான் உணராமல் பொருளைநோக்கித் தங்களையும் அநேகவிதத்தில் வருத்தினேன் ஆயினும் இவையாவும் அறியாமையால் நிகழ்ந்தவைகளே. ஆகையால் தேவரீர் நான் செய்தபிழைகளை நான் நரகவாயிற் புகுதாவண்ணம் மன்னித்து ரட்சிக்க வேண்டும் என்று சொல்லி, உடனே இவ்வுலகத்தில் மதுரைமாநகரத்தில் ஒரு காலத்தில் சிவபெருமான் இன்னாரின்னாரின் பொருட்டு இன்னவிஷயமாக மண்சுமந்தாரென்கிற ஒரு கீர்த்தி எனக்குப் போதுமானது. ஆகையால் தேவரீர் இனி இவ்வுலகத்தை நான் நாள்தோறும் உம்முடைய பணிவிடையைச் செய்துவர ஆள்வேண்டும் என்று வேண்டிக்கொண்டனன்.

அதற்குத் திருவாதவூரரானவர் அரிமர்த்தன பாண்டியராஜனை நோக்கி ஓ, அரசனே! என்னை நீ சடாபாரத்தையுடைய சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற

பெருந்துறையென்னும் திவ்வியக்ஷேத்திரத்தையடைய உத்தரவளிப்பதே நான் இராஜ்ய பரிபாலனஞ் செய்ததாகும் என்று கூறினர்.

அது கேட்ட அரசனவன் மாணிக்கவாசகரை நோக்கிச் சிவபெருமானிடம் மிக்க அன்புடைய அடியார்களுக்கும் இராஜ்ய பரிபாலனஞ்செய்ய ஆசையுண்டாகுமோ? ஒருக்காலும் உண்டாகாது. ஆகையால் நீர் உம்முடைய மனம்போல் செய்யக்கடவீர் என்று சொல்லித் தம்முடைய மதனைக்குத் திரும்பிவிட்டான்.

அதன் பின்னர் மாணிக்கவாசகரானவர் அரசன் போனபின்னர் அங்கு நிலைத்துவாழ மனம் பொருராய் ஆங்கு திருக்கோயில் கொண்டெழுந்தருளியிரா நின்ற சொக்கநாயகக் கடவுளை வந்தனை வழிபாடுசெய்து நமஸ்கரித்துத் தாம் கொண்டிருந்த மந்திரிக்கோலத்தை விட்டு நீத்து முன்போல சிவவேடங்கொண்டு முன்னர் தம்மையடிமைகொண்ட குருவடிவைக்காணும் அவாமேலிட்டவராய் விரைந்து காற்றினும் கடிதே சென்று திருப்பெருந்துறையை யடைந்தார்.

அப்பொழுது அவ்விடத்தில் முன்போலவேயெழுந்தருளியிருக்கும் திருத்தொண்டர்களுக்கு இடையில்தாமும்

வீற்றிருந்தருளி தேவர்களுக்குத் தலைவனாகிய சிவபெருமானிடத்தில் அடியில் வருமாறு ;

"நீண்டுதற் கரிய மார்பின் சேயிழை தனத்தினாலும்
மீண்டொரு மாற்றினாலு மெய்திய தழும்பு போற்றி
வேண்டிய வடிவமாகி வெம்பரிமேற்கொண் டெம்மை
யாண்டருள் செய்யவந்த வண்ணலே போற்றி போற்றி.

அண்டருக்கரியாய் போற்றி யடியவர்க்கெளியாய் போற்றி
வண்டமிழ் பாண்டிநாடு வாழ மண் சுமந்தாய் போற்றி
கண்டனக் கினிய மேனி காட்டியென் சென்னிமீது
முண்டக திருத்தாள்வைத்த முந்தனே போற்றி போற்றி."

என்றவண்ணம் காஞ்சிபுரத்தின்கண் கம்பையாற்றில் ஸ்ரீபார்வதாதேவியின் ஸ்தன்னியத்தினாலும், இவ்விடம் பிரம்பினாலுமுண்டான தழும்புடையாய் உனக்கு வந்தனம். அடியார்கள் வேண்டியாங்கு வடிவங்கொண்டு குதிரைமேற்கொண்டு எழுந்தருளி வந்து எம்மை யடிமைகொண்ட தலைவனே! உன்னை வந்தனஞ்செய்கின்றேன். தேவர்களுக் கரியானே சிவனடியார்க் கெளியானே! வளப்பந்தங்கிய தமிழ்ப்பூமியாம் பாண்டியநாடான்து செழித்தோங்க மண் சுமந்தவனே! அடியேனுக்கு ஆவல்கொள்ளத்தக்க அருள்திருமேனியைக்காட்டி

என் சிரத்தின்மேல் திருவடியைவைத்து தீட்சை செய்த இறைவனே! உனக்குவந்தனஞ்செய்கின்றேன் என்று இவ்வாறு பலவாறாகச்சொல்லித் துதித்த மாணிக்கவாசகரது திருமுடிமேல் தமது தாமரைபோலும் திருக்கரத்தைவைத்து விபூதி தரித்து அங்கிருக்கச்சொல்லித் தாமும் அவ்வடியார் சூழ எழுந்தருளியிருந்தார்.

அதன் பின்னர் ஆசிரியராக எழுந்தருளி வந்திருக்கின்ற சிவபெருமானனவர் மணிவாசகரைப் பார்த்து அன்பனே! நாம் இவ்விடத்தில்வந்து செய்யவேண்டிய கிருத்தியங்களை யெல்லாம் செய்து முடித்துவிட்டோம். ஆகையால் கைலாசத்திலுள்ளவர்களெல்லாம் என்னுடைய கோலத்தைக்காண ஆவல் கொண்டிருக்கின்றனர். அதுபற்றி நாம் அவ்விடம் சேரவேண்டும். நீங்கள் இவ்விடம் செம்மையாக வாழ்ந்திரும் என்றனர்.

அதுகேட்ட அடியவர்கள் மனம் பொறாராய் அநேக தோத்திரஞ் சொல்லிச் சிவபெருமானை வணங்கி எங்களைவிட்டுப் பிரிகின்றீரோ என்று சொல்லியழுது மனநொந்தார்கள்.

அப்பொழுது சிவபெருமானனவர் அவர்களைப்பார்த்து நீங்கள் வருந்தாதீர்கள். இதோ விருக்கிற குருந்த

பரத்தின்கீழ் ஒரு பீடமமைத்து அதில் நம்முடைய திருவடிகளை ஏற்படுத்தி அதை நாமாகவேபாவித்து வந்துகொண்டிருப்பீரானால் ஒருகாலத்தில் இப்பொய்கையினிடமாக அக்கினி யொன்று உண்டாகும் அதில் நீங்கள் படிவீரானால் நம்மிடம் வந்து சேருவீர்கள். பிறகு உம்முடைய துன்பங்களையும் ஒழியப் பெறுவீர்கள் என்று திருவாய் மலர்ந்தனர்.

இங்ஙனம் சொல்லிப் போகின்ற சிவபெருமானை விட்டுப்பிரிய அடியார்களுக்கு மனம் வராமையால் அவரை நோக்கி எங்கள் தலைவரே! இனித்தேவரீரை நாங்கள் எக்காலத்தில் காணப்பெறுவோம் என்று தாயை விட்டுப்பிரிந்த குழந்தையைப்போலக்கதறி அவரை வணங்கி நின்றார்கள்.

இவ்வண்ணம் அடியார்களெல்லாம் அத்திருப்பெருந்துறையிலேயே நின்றும் திருவாதவூரர் மட்டும் சர்வஜீவதயாபரரா யெழுந்தருளித் திருவடிதீட்சை செய்து சுற்ற முழுமைக்கும் சிவகதியிற் செலுத்தத் திருமேனி தாங்கிய சிவபெருமானை விட்டுப் பிரியப் பொறாராய் அவரைப்பின்பற்றியேசென்றனர்.

அது காலையில் உமாதேவியை இடதுபாகத்தில்

கொண்டு வாழ்பவராகிய சிவபெருமானனவர் ஸ்ரீமாணிக்கவாசகர் வருதலைக் கிருபையோடு கண்டருளி ஆங்கெதிர்ப்பட்ட ஒரு கொன்றைமரத்தினடியில் அவரது துன்பத்தை நீக்குதற்பொருட்டே எழுந்தருளினர்.

அதுகண்ட மணிவாசகப்பெருமானர் மிகவும் குதூகலங்கொண்டவராய் அவ்வெம்பெருமானுடைய உபய திருவடிகளிலும் கண்கள் நீரைத் தாரை தாரையாயொழுக்கப்பணிந்து எழுந்து நின்றனர்.

அப்பொழுது சிவபெருமானனவர் மாணிக்கவாசகரைப்பார்த்து அன்பனே! நீ மனம் வருந்தற்க. ஏனெனில், வஞ்சகமில்லா மனத்தையுடையார்க்குத் திருவருள்செய்தற்பொருட்டு நாம் முன்னேயடைந்த இச்சிறப்புப்பொருந்திய க்ஷேத்திரத்தில் இக் குருந்தமரத்தடியில்மட்டும் இங்கிருக்கின்றவர்களுடைய தீவினையைநீக்கியாளும்பொருட்டு இவ்விடத்தில் வசிப்போம்.

இந்த க்ஷேத்திரத்தில் சுழிஞல்தானத்தில் ஒலிப்பதானசங்கவாத்திய பொன்றேயன்றி வேறு வாத்தியங்கள் நமக்காகாவாகும். இது உமாதேவிக்கு நடனஞ்செய்துகாட்டுமிடமாகும். ஆகையால நீ நாம் சொன்ன இவையிற்றையெல்லாம் மனத்திற்கொண்டு ஈங்கு குருந்தமர

த்தடியில் எழுந்தருளியிருக்கின்ற தவ சிரேஷ்டர்களோடு நீயும் கூடியிருந்து நம்முடைய திருவடிசேவை செய்து எப்பொழுது இம்மடுவில் அக்கினி காணப்படுகின்றதோ அப்பொழுது அடியார்களெல்லாம் அதிற் சென்று நுழைந்து நம்மிடம் வருவார்கள். நீ பட்டுப்போகாமல் சிலகாலம் இவ்விடத்திலிருந்து உடனே உத்தரகோசமங்கை யென்னும் நம்பதியிற்சென்று ஆங்கு சாலசித்திகளையுமடைந்து பின்னர் சர்வ சிவக்ஷேத்திரங்களையும் வணங்கினால் நாம் அவ்விடங்களிலும் இந்தப் பிரகாசமுள்ளவடிவையே காட்டுவோம். அதன் பின்னர் நீ சிலநாளிருந்து இன்னும் சிவக்ஷேத்திரங்கள் பல வணங்கி கடைசியாக திருக்கழுக்குன்றமென்னும் திவ்விய க்ஷேத்திரத்தை யடைந்து ஆங்கு நம்திருமேனியைக் கண்டு தரிசித்து மீண்டும் இவ்விடம் வந்து பின்னர் இதையும் நீங்கி ஸ்ரீசிதம்பரத்திற்குச்சென்று ஆங்கு புத்தரை வாதில் வென்ற பின்னரே எம்முடைய பதவியாகிய சாயுச்சியத்தைப் பெறுவாய் என்று சொல்லியருளினார்.

இனித் திருவாதவூரரானவர் பல சிவஸ்தலங்களிலும் சென்று சிவபெருமானை வணங்கிப்பாடியதும் சிதம்பரத்தில் சென்று சிவதரிசனை செய்ததும் வரும்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## திருவம்பலச்சருக்கம். கிளை - 6.

இங்ஙனம் திருவாய் மலர்ந்தருளிய சிவபெருமானை நோக்கி மணிவாசகப்பெருமானார், தவசிரேஷ்டர்களுக்குக் தன்மையை நல்குந் தண்ணளியே! தேவரீர் இத்திருப்பெருந்துறையிலேயே கிடைப்பதன்றி சிதம்பரத்தில் பரமுத்தி கிடைக்குமென்றருளிச்செய்தது எற்றுக்கு? என்று வினவ, அதற்குப் பரமசிவனானவர் மிகக் கருணையோடு சொல்லுகின்றார்.

ஹே, அன்பனே! புழுவானது குளவியால் தன்னை எடுக்கப்படும் இடத்தில் குளவி ரூபத்தையடையாமல் வைக்கப்படும் இடத்திலேயே அடைகின்றதன்றோ? அது போல இவ்விடத்தில் உனக்கு உபதேசம் பண்ணினேனும் அவ்விடமாகிய சிதம்பரத்தின்கண் பரமுத்தியாகிய மோட்சம் கிடைக்கும்.

அன்றி அச்சிதம்பரமானது உடலத்தின்கண் மூலா தாரத்தினின்றுமெழுந்த சுழி முனைநாடி யுடனே நிறை ந்த ஒளியாய் அந்த ஒளியில் பஞ்சாட்சரமுமொன்றாய் நெடிய குழலோசையாய் பிரகாசிக்கின்ற அவ்வோசை நீங்கிய இடமேயாய் விளங்கும். அதிலே நாம் எப்போ தும் நடனஞ் செய்வோம்.

அன்றி, பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்றுசொல்லப்படும் ஐந்து பூதங்களும், இடைகலை, பிங்கலை, சுழிமுனை என்னும மூன்று நாடிகளும், அக் கினி மண்டலம், சூரியமண்டலம், சந்திரமண்டலம் என்னும் மூன்று மண்டலங்களுமாகி நிலைபெற்றிருக் கின்ற சம்பந்தத்தால் பிண்டமும் அண்டமும் ஒன்றே யாகும். இவ்விரண்டிலேயே பஞ்சமூர்த்திகள் நின்ற விதத்தையுங் காணலாம்.

ஆகையால் இந்த அண்டத்தில் அறிதற்கரிய பொரு ளாகிய மூலத்தை நாடிப்பார்த்தாலோ அங்கு விளங்கு கின்ற சிவலிங்கமேனியாயிருக்கும். அந்த நாதவெளி யின்மேல் ஒளியாயிருப்பது சபை, அந்தச் சபையின் கண் உமாதேவியார்கண்டு களிக்கும்படி நிர்த்தம் செய் வோம். அதுவும் சிருஷ்டி, திதி, சங்காரம், திரோப

வம், அநுக்கிரகம் என்னும் பஞ்சகிர்த்தியங்களையும் நடத்துவதற்கேயாகும். அஞ்ஞானத்தை நீக்கும் இவ் வடிவமும் அப்பஞ்ச கிர்த்தியத்தின் பொருட்டேயாகும் யாரொருவர் வந்து தரிசிக்கின்றார்களோ அவர்களுக்கெல்லாம் பேரின்பமுத்தியைக் கொடுக்கும் தலம் அதுவே யாகும்.

ஆகையால் அவ்விடத்தில் சங்கு, சக்கரம், கட்கம, கோதண்டம், கதைகளாகிய பஞ்சாயுதங்களைத் தரிப்பவரான விஷ்ணுவும், பிரமதேவனும், பதஞ்சலி வியாக்கிரபாதரும், திரிபுராதிகளும், தில்லை மூவாயிரவரும், நாற்பத்தெண்ணாயிரம் முனிவரும், முப்பத்துமுக்கோடி தேவர்களும், மற்று முள்ளவர்களும் போந்து எம்முடைய கோலத்தைத் தெரிசித்துத் துதிப்பார்கள் என்று சொல்லி இனி இவைகளையெல்லாம் நீ நன்றாயாராய்ந்து தெளிந்துகொள்ள வேண்டும் என்றுதம்மிடத்திலிருந்த விபூதியையெடுத்து மிக்க அன்புடன் வணங்கி எதிரே நிற்கின்ற மாணிக்கவாசகரது நெற்றியில் தரித்து நீ இவ் விடமே நிற்கக்கடவையென்று சொல்லிப்போக மணிவாசகரும் பின்பற்றித் தொடரக்கண்ட இறைவர் ஒருவாறு கிருபைசெய்து இவர் காணும்படியே எதிராகவே மறைந்துவிட்டனர்.

அதன்பின்னர் மணிவாசகப்பெருமானர் மிகவும் இரங்கி கைகளை சிரமேற்குவித்து வந்து அடியார்கள் சூழ்ந்திருக்குமிடத்தை வந்து சேர்ந்தார்

அப்போதும் சிவபிரானைப் பிரிந்தமைக் காற்றுதவராய் அவ்வடியார்களும் தாமும் அந்தக் குருந்தமரத்தின்கீழே தெய்வீகமாக ஒரு பீடஞ்சமைத்து அதன்மேல் சிவந்ததாமரைமலர்போன்ற திருவடிகளைச் செய்துவணங்கி அங்கேயிருக்கும் காளில் சிவபெருமானைவர் ;

"தண்டமி மூலங்கல் தொடுத்திடுவோரைச்
சோதியாதது பரஞ்சோதி."

என்றவ்வண்ணம் அன்பில்லாராயினும் அவனைப் பாடுமவருக்கு அருள் செய்வோனுவானென்று நினைந்து,

"நமச்சிவாய வாழ்க நாதன் றுள்வாழ்க,"

என்று தொடங்கித் திருவாசகம் பாடுவாராயினர்.

அங்ஙனம் பாடும்போது சிவபெருமானைச்

"சொற்பதங் கடந்து நின்ற சோதிவந் தருளைஎல்லும்
அற்புதமறியேன்."

"அதிசயங் கண்டாம்."

"ஏற்பொலி சடையாய் நெஞ்சங் குழைத்தனை யென்னை."

"சிற்பரன் தனது பாதஞ் சென்னியில் மன்னும்."

"ஐயனே நின்னைக்காண வாசைப்பட்டேன்."

"உய்கிலேன் வாழேன்."

"உனக்கு அடைக்கலம்."

"செய்யு மாறறியேன் அந்தோ செத்திலேன்."

"பொய்யர்ப் பொய்யனே நின் பொற்பாதம்
புணருநா ளென்றோ."

"ஆதரித்தழைக்கி லிங்கேயெதந்து வென்றருளாய்."

என்று இவைகளைக் கொண்டுள்ள பாடல்களைப் பாடிய பின்னர் திருவார்த்தையும், எண்ணப்பதிகமும் இருபத்தெட்டு வெண்பாக்களும், திருப்பள்ளி யெழுச்சியும், திருவேசறவும், ஆநந்த மாலையும், உயிருண்ணிப்பத்தும், பிரார்த்தனைப்பத்தும், உயர்ந்த நீதியோடுகூடிய மதுரையின் திருப்பாண்டி விருத்தமும், சொல்லி அவ்விடத்தில் சிலநாளிருந்து முன்னர் சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளிய வண்ணமே ஒரு நாள் அப்பொய்கையினிடமாக ஒரு அக்கினிப்பிழம்பு தோன்றக்கண்ட அடியார்க்

ளெல்லாம் பஞ்சாட்சர தியானஞ் செய்துகொண்டே அந்த அக்கினியின்மேற்போய் விழுந்தார்கள்.

அப்போது சிவபெருமானனவர் ஆகாயத்தினிடமாகப் பார்வதிசமேதராய் ரிஷபவாகனத்தின்மேல் ஆரோகணித்து எழுந்தருளிவர அக்கினியின் மூழ்கிய அடியார்களெல்லாம் தங்களுடைய துன்பங்களினின்றும நீங்கிக் கணநாதர்வடிவாய் ரூபமாறப்பெற்றுப் பரமசிவனுக்கு எதிரேவந்து வணங்கி நின்றார்கள்.

அதுகாலையில் சிவபெருமானனவர் அவ்வடியார்களைப் பார்த்து ஓ கணநாதர்களே! என்னைவிட்டுச் சிறிதும் நீங்கப்பெறாதவர்களாகிய உங்களை நீங்கி நான் தனியேசென்றதும், பின்னர் உங்களை இப்பொய்கையிலுண்டாகும் அக்கினியிற் புகச்சொன்னதும் ஏனென்றால்; அதன் விவரத்தைச் சொல்லுகிறேன் கேளுங்களென்று சொல்லத்தொடங்கினார்.

நாம் நம்மிடத்தில் மிக்க அன்பைச்செலுத்துகின்ற அடியவனை திருவாதவூரனை இவ்விடத்திலே சிலநாளிருந்து சிதம்பரத்திற்சென்று ஆங்குப் புத்தரைவெல்லும்படி நிறுத்தினோம்.

அப்படியிருப்பதால் அவனுடன் உங்களேயும் சிறிது காலம் இவ்விடத்திலேயே யிருக்கச்சொன்னேம்.

அன்றி, பாசநீக்கப்பெற்றவர் யாவரோனும் உலகத்தின்கண் மானிடவடிவந்தாங்கிச் சிலநாளிருந்தாலும் அவர்களே உலகமாயைவந்து சேர்ந்தே திருமாகையால் அப்பந்தத்தை நீக்கற்பொருட்டே இப்பொய்கையினிடமாக ஞானக்கினியைச் சேர்ப்பித்து உங்களது சரீரங்களேபெல்லாம் அதில் தகிக்கச்செய்து வேறேதேகங்களே இப்பொழுது கொடுத்தோம என்று சொல்லித் தாமும் அந்தர்த்தானமாக அக்கணநாதர்களும் எங்கும் பரவிச்சென்றனர்.

அதன் பின்னர் மணிவாசகப்பெருமானுர், தனியேயிருந்து வேருெரு கொன்றைமரத்தினீழலிற் சென்று சர்வ விஷயங்களேயும் அறிந்துகொள்ளுமாறு சிவயோகத்திற்கூடி எழுந்தருளியிருந்தார்.

அப்பொழுது அவ்யோகத்தினிடமாக அடியார்களெல்லாம ஞானக்கினியிற் புகுந்த விதத்தையும், அவ்வெம்பெருமானுடைய திருவடிகளேத்தாம் வணங்கும விதத்தையும், தான் இனிமேல் சிற்றம்பலத்திற் சேரவிருக்கிறவிதத்தையும் அநுபவ சித்தமாகக் கண்டிருந்தும்,

"செங்கை குவித்தார் விழிநீரைச்சிந்தின ரெந்தாய் வந்தாய்பின்
னெங்க ணொளித்தா யெனமாலுற் றெய்தினர் பொய்கைக் கரை
[மீதில்
கங்கை முழுத்தார் விடையேறிக் கன்னூற நண்ணுந் தலமோ
[வென்
றங்கணிலத்தே போய்வீழ்வுற்றழுதழு தந்தோ வெனநொந்தார்

அன்னை நிகர்ப்பீ ரென்னை யொழித்தே யன்பாளர்
பொன்னடி பெற்றே பொய்கை யழற்கே புகலாமோ
மின்னுருவத்தீர் நும்மருள் கூடா வினையேனுக்
கின்னலளித்தீ ரெங்கு ணொளித்தீ ரெனநொந்தார்."

என்றவண்ணம் மிக்க துக்க சாகரத்திலமிழ்ந்தினவராய்
ன்முறையுமழுது அந்தோ! தாய்க்குச் சமானமானவ
ரே! அடியார்களெல்லாம் திருப்பொய்கையிலுண்டானவ
ஞானக்கினியில் மூழ்கலாமா? தேஜஸையுடைய சொ
ரூபரே! நான் மாத்திரம் உமது திருவருளையடையாத
படி எனக்குத் துன்பங்கொடுத்து எங்கே யொளித்தீர்?
என்று மனம்வருந்திப் பின்னர் ஒருவாறு தெளிந்து உயி
ர்த்த குருந்தமரத்தினிடஞ் சென்று ஆங்கு அலங்கரித்
துள்ள சிவபெருமானது பாதமலர்களைப்பற்றி விழுந்து
எழுந்து ஆங்கு நிலையாகவசித்தலை மேற்கொண்ட வ்த
லவாசிகள் யாவரும் ஜெனிமுவேனையறவே களைந்தெறி
யும் வண்ணம் திருச்சதகமென்னும் பேரால்;

“மெய்தானரும்பி விதிர்விதிர்த்துன் விரையார் கழற்கென்
கைதான் றலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் றவிர்ந்துன்னைப் போற்றி சய சய போற்றி யென்னுங்
கைதானெகிழவிடே னுடையா யென்னைக் கண்டுகொள் ளே.”

என்றற் றொடக்கத்தனவாகிய திருப் பாடல்களைப்பாடி வருந்தி ஆங்கெழுந்தருளியிருந்த காலத்தில் முன்னே சிவபெருமானார் திருவாய்மலர்ந்த குருவசனத்தை நினைந்து அத்தலத்தை வணங்கி யகன்று சென்று உத்தரகோசமங்கை யென்னும் திருப்பதியிற் போய்ச்சேர்ந்தார்

அவ்வரிய க்ஷேத்திரத்தில் சடாமுடியை யுடைய சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற திருக்கோயிலினுட் சென்று ஆங்குச் சிவபெருமான் அருளிய வண்ணம் குருவடிவங் காணப்பெறாமையால் மனம் வருந்தி யயர்ந்து விழுந்து எனையடிமைகொள்ளாதும் உன்னுடைய ஆசிரிய சொரூபத்தைக் காட்டாமலும் கைவிட்டனையோ? என்று,

“கடையவனேனைக் கருணையினாற் கலந்தாண்டுகொண்ட
விடையவனே விட்டிடுதிகண்டாய் விறல் வேங்கையின்றோ
லுடையவனே மன்னு முத்தரகோசமங்கைக்கரசே. [ளே”
சடையவனே தளர்ந்தேனெம் பிரானென்னைத் தாங்கிக்கொ

என்றற்றொடக்கத்ததாகிய சீத்தல் விண்ணப்பம் என்னும் பேருடைய திருப்பாசுரங்களைப் பாடச் சிவபெருமானவர் தாம் திருவாய் மலர்ந்தருளியவண்ணம் தமது திருமேனியைக் காட்டியருளினர்.

அப்படி சிவபெருமானால் காட்டப்பட்ட திருமேனியை உள்ளன்போடு தெரிசித்து அவ் வுத்தரகோசமங்கையிற் சிலநாள் வசித்திருந்து தம்முடைய கடவுளான சிவபெருமானது வசனப்படியே அநேக சிவக்ஷேத்திரங்களிலும் சென்று ஆங்காங்கு எழுந்தருளியிருந்த சிவலிங்கப் பெருமானை வணங்கி அவ்வத்தலங்களினின்றும் நீங்கி சோழநாட்டிற்குப் போய் ஆங்குள்ள திருவிடைமருதூரை யடைந்தனர்.

அங்ஙனம் எழுந்தருளியிருந்த சிவபெருமானைத் தரிசித்து அப்பதியைவிட்டகன்று மிக்க அன்புடன் திருவாரூரையடைந்து சிவபெருமானை வணங்கித் திருப்புலம்பல் என்னும் பதிகத்தைப்பாடிப் பின்னர் சிவபெருமானால் முன்னரே திருவருள் செய்யப்பட்ட சிவக்ஷேத்திரங்களையெல்லாம் நீங்கி ஸ்ரீஞானசம்பந்தருக்கு அவதாரஸ்தலமாகிய சீகாழிப்பதியை யடைந்தனர்.

ஆங்குக் கோபுரவாயிலை நீங்கிப்போய் அது கயிலாயமாகிய செய்தியைக்கண்டு வணங்கும்போது [illegible]

பத்து என்னும் பதிகம்பாடி சிர்சபையில் நிருத்தஞ்செய்ந் சிவபெருமானது திருவடித்தாமரைகளைப் பிடித்து வணங்கி அவ்விடத்தில் சிலநாளிருந்து பின்பு திருக்கழுக்குன்றத்திற்கு எழுந்தருள வெண்ணித் தில்லையின் வழியேபோய் விருத்தாசலத்திற்சென்று ஆங்கு சிவபெருமானை வணங்கி இது திருவருட்டுறையென்று எண்ணிப் பெரியோர்கள் வசிக்கின்ற திருவெண்ணெய் நல்லூரையடைந்து பரமேஸ்வரனை வணங்கி அதை நீங்கி நடுநாட்டு க்ஷேத்திரங்கள் பலவற்றையும், உயர்ந்த காட்டையும் துஷ்டமிருகங்கள் சஞ்சரிக்கும் மலைகளையும் கடந்து திருவண்ணாமலையென்னும் திவ்விய க்ஷேத்திரத்தை சமீபித்து, ஆங்கு வரிசைப்படுத்தியுள்ள கோபுரம், மாடம், கமுகு முதலிய ஒழுங்குகளைக்கண்டு மிகவும் வியந்து புகழ்ந்து அக்காலத்தில் பிரம விட்டுணுக்கள் தேடும்படி நெருப்பு மலையாய்வந்த பெருவாழ்வு இதுதானோ? என்று சொல்லி திருவண்ணாமலையை வணங்கி நகரத்துட்சென்று திருவாலயத்திற் புகுந்து ஆங்கு திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருந்த சிவபெருமானை ஆசிரிய வேடமாகக்கண்டு தரிசித்து;

"மாலுடன் பிரமன் தேவர் வந்தனைக்கடிமை யென்றென்
றேலிடு பொழுதி லால முண்டிருள் கண்டபோற்றி

மேலியேம் பவநோய் தீர விண்ணவர் மண்ணோர் பச்சைப்
பாலுடன் கலந்துட் கொள்ளும் பனிமலை மருந்தே போற்றி.

நெடியவன் கேழலாகி நீணில மகழ்ந்துங் காணா
வடிவகளென் றலைமேல் வைத்த வருட்பெருங் கடலே போற்றி
படியிடம் புரக்கு முண்ணாமுலையெனும் பச்சைமேனிக்
கொடியிடங் கொண்டசெம்பொற் குன்றமே போற்றி போற்றி.

வென்றிடுங் கன்னிமேதிச் சென்னிவிக் கிரமன் றன்னைக்
கொன்றதன் பாவந்தீரக் குறித்திட வருள்வாய் போற்றி
யன்றவன் றன்னையாளு மணியணா மலையாய் போற்றி.”

என்று இவ்வாறு அன்புமேலீட்டால் பரவியிறைஞ்சி அங்கே வசிக்கின்ற நாளில் மார்கழிமாதம்வர அவ்வூர்ப் பெண்களிற்பெரும்பாலார் திருவாதிரைநட்சத்திரத்திற்கு பத்துநாள் முன்னிருந்து ஒவ்வொருவரும் பிராதகாலத்தில் நித்திரையினின்று மெழுந்து வீடுகள்தோறும் போய்ப் பெண்களை யழைத்துக்கொண்டு கூடித்தீர்த்தத்தில் போய் ஸ்நானஞ்செய்வார்கள்.

அதைக்கண்ட மணிவாசகப் பெருமானார் அப்பெண்கள் சொன்னதாகத் திருவெம்பாவையையும், அப்பெண்கள் பாடியாடுகின்ற விதத்தைக்கண்டு திருவம்மானை

யையும் பாடியருளி அந்த க்ஷேத்திரத்தைவிட்டு நீங்கி காஞ்சிபுரத்தையடைந்து ஏகாம்பரக்கடவுளையும் காமாட்சியம்மையையும் கண்டு வணங்கி ஆங்கிருந்தும் விடைபெற்றகன்று திருக்கழுக்குன்றத்திற்குச் சென்றனர்.

அப்போதங்கு கொன்றை மாலையைத் தரித்தவரான சிவபெருமானது திருவடிகளை வணங்கி நமஸ்காரஞ்செய்து ஓ எம் தலைவனே! என்னையாண்டடிமைகொண்ட இறைவனே! உனது அழகிய திருமேனியை எனக்குத் திருவாய் மலர்ந்தவாறே தரிசனந் தந்தருளினை- இந்தத்திருக்கழுக்குன்றிலென்னுங் கருத்தடங்கிய ;

பிணக்கிலாத பெருந்துறைப்பெருமானுன் னாமங்கள்பேசுவார்க்
கிணக்கிலாத தோரின் பமேவருந்துன்பமே துடைத்தெம்பிரா
னுணக்கிலாதவோர்வித்துமேல்விளையாமலென்வினையொத்தபின்
கணக்கிலாத்திருக்கோலநீ வந்து காட்டினாய் கழுக்குன்றிலே.

என்னும் திருக்கழுக்குன்றப் பதிகம்பாடி அவ்விடத்திலேயே சிலபகல் வைகி பின்னர் அப்பதியைவிட்டு நீங்கி அந்தத் தலமுதல மத்திய தேசங்களிலுள்ள ஸ்தலங்களும், காடுகளும், மலைகளும், சோலைகளும், தடாகங்களும், நதிகளுங் கடந்து திருத்தில்லை நகரத்திற்கு மூன்று யாதவழியில் ஸ்ரீமாணிக்கவாசகப் பெருமான் எழுந்தருளினார்.

அதன்பின்னர் பெண்ணாசைப்பட்ட ஊமர்களும், இ டுண்டு வாழாதவரும், சிவபெருமானிடத்தில் பக்தி செலுத்தாதவர்களும் போதற்குரிய நரகவழியில் போகாதவராகிய இவர் தில்லை வழியே போயினர்.

அது காலையில் அவ்வழியினிருபாலும் கொன்றைமலர்கள் மலர்ந்து தேவலோகமாகிய பொன்னுலகம போல் நின்றன.

வண்டுகளானவை சிவநாமாவளியைத் தழுவுகின்ற தமிழ்போல் இசைபாடின. அங்ஙனம் பாடல்களுக்குப் பொருள் சொல்ல வல்ல வித்துவான்கள் அபிநயங் காட்டும் கைகள்போல்காந்தட் பூக்கள் மலர்ந்திருந்தன.

முருக்கமரங்களெல்லாம் சிவஞானத்தை ஒரு சிறிது மிருக்கப்பெறாதவர் தவவேடங் கொள்ளுவதுபோல் வாசனையின்றி ஒளியைமாத்திரமுடைத்தான மலர்களை மலரப்பெற்றிருந்தன.

காயாமரங்களெல்லாம் பள்ளத்திற்செல்லுஞ் சலத்தைப்போல் ஐம்புலன் வழியே செல்லுகின்ற அஞ்ஞானிகளின் மனம்போல் பூத்திருந்தன.

புன்னைமரங்களில் குரங்குகள் கூடியேறியசைத்தா

டுந்தோறும் ஈயின் கூட்டங்களெழுகின்ற தேன் கூண்டும் மலர்களும் அகாயத்தில் சஞ்சரிக்கின்ற சந்திரனும், நட்சத்திரங்களுமபோல் எங்குமிருந்தன.

பக்கங்களில விளங்கியிருந்த பாக்குமரங்களெல்லாம் அநேக வெண்சாமரைகள் வீசவும், மாஞ்சோலையிலிருக்கின்ற குயில்கள் சின்னமூதவும், சண்பகச்சோலைகள் தேவர்களிறைக்கும் பொன் மலரைப்போல் ஒளிபொருந்திய பலர்களைச் சிந்தின.

இப்படிப்பட்ட வளபபம் பொருந்திய மா, நாரத்தை. பாதிரி, தெங்கு, மகிழ், கோங்கு, பலா, மந்தாரம் முதலிய மரங்கள் நெருங்கிய பூஞ்சோலையைக்கடந்து எம்மணிவாசகப்பெருமானர் சிதம்பரத்தைக் கண்டருளினர்.

ஆங்கு ஆகாயமளாவத்தக்க மதில்களையும் கோபுரங்களையும் கும்பங்களையும் உபரிகைகளையும் பார்க்குந்தோறும் அவைகள் அழகு செய்வதைக்கண்டு அஞ்சலி செய்து புகழ்ந்து சிவபெருமானது திருவருளை மகிழ்ந்தனர்.

அன்றியும் அந்த க்ஷேத்திரத்தில் வேதகோஷமும், கீதவோசையும், ஆகம வோசையும் மிகுதியும் கேட்டு

ஆநந்தித்துச் சிற்சபை எதிராகக்கண்டு பொன்னம்பலத்தே நடனஞ்செய்கின்ற கடவுளை அக்காலத்தில் தமது முடிமேல் திருவடிகளைச் சூட்டியருளிய குருவடிவமாகக்கண்டு உயிரொப்பனே! மணிமன்றனே! உனக்கு அடைக்கலம் நானேயாவேனென்று சொல்லிப்பலமுறையும் வணங்கியழுது கண்களினின்றும் ஆநந்த பாஷ்ம்பொழிய நமஸ்காரஞ்செய்து திருவடிகளை முடியிற் சூட்டிக்கொண்டு பின்பெழுந்து அன்பு கூர்ந்து உமா தேவிபாகனாகிய சிவபெருமானை வளத்தையுடைய தில்லைமாநகரத்தில் இப்பொழுதே கண்டேனென்று நல்ல பாடல்களாகிய கண்டபத்து என்னும் பதிகத்தையுரைத்தார்.

அங்ஙனமுரைத்துச் சிவபெருமானை நிஷ்டா முயற்சியால் நினைந்து அசைவற்று ஒரு சித்திரம்போல் சிறிது நேரம் நிற்க. அதைக்கண்ட மெய்காப்பாளர் இது என்னவோ இவருக்கு மயக்கமாயிருக்கின்றதென்றெண்ணி இவரைச் சபையைவிட்டு வெளியேபோமென்று சொல்லியும் இவர் துரியாதீதமென்னு மிடத்தில் அசைவற்றிருந்தாராகையால் அதிற் சிறிதுமனங்கொள்ளாமல் அங்ஙனமே நெடுநேரம் நின்றுகொண்டிருந்தார்.

அப்பொழுது மெய்காப்பாளர்கள் ஆ! ஆ! இவரேன்ன? போவென்றாலும் போகிறாரில்லை! ஒன்றும் பேசுகின்றாருமில்லை பித்தம் பிடித்தவராக விருக்கின்றனர் என்று பயந்து நிற்குந்தருணத்தில் செத்தபிரேதத்திற்கு உயிர் வந்ததுபோல் அஞ்சலியாஸ்தத்தைச் சிரமேற்கொண்டு சிவ சிவ போற்றி என்று திருவாய்மலர்ந்தனர்.

அதன் பின்னர் ஸ்ரீமணிவாசகப் பெருமானார் பொன்னம்பலத்தை மூன்றுமுறை வலமாகப் பிரதட்சணஞ் செய்து ஆங்குத தனக்கொப்பில்லாத மூலஸ்தானத்துக் கடவுளை வணங்கிப் பின்னர் தாயாகிய உமாதேவியின் திருவடிகளையும் வணங்கிப் பிறகு அந்தக்கோயிலுக்கு மேற்பக்கத்தில் திருப்புலீச்சரத்தை யடைந்து ஆங்கு உயிர்களுக்கு வேண்டிய வரங்களைக் கொடுத்தற்பொருட்டே எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கி அப்பதிக்குச் சமீபத்திலுள்ள திருநாகேச்சுரமென்னும் திவ்விய க்ஷேத்திரத்தி லெழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானது திருவடிகளை மிக்க ஆவலுடன் வணங்கி பின்னர் அப்பதியையும் நீங்கித் தில்லை மூவாயிரவர் வாழ்கின்ற சிதம்பரத்தைச் சூழ்ந்த வீதியிற்போகும்போது அமிர்தம்போலும் இனிமையைத் தருவதான திருவாசகம் பாடத்தொடங்கினார்.

அன்னம் பாடியாற்றுள் அப்பொழுது

"ஆமேர்க்குலா கற்றில்லை யாண்டவன் உன்னைக் கொண்டே"

என்று சொல்லப்படும் பாடலைப்புகன்று அதன் பின்னர் இருவகையான கோயிற்பதிகத்தையும், அதன் பின்னர் கீர்த்தித்திருவகவல், திருவண்டப்பகுதி, போற்றித்திருவகவல், ஆகிய மூன்று அகவல்களையும், பின்னர் ஆங்கு வசிக்கும் பெண்களிற் சிலர் கூடித்தங்கள் கைகள் சேப்பவும், சங்கவளையல்கள் அசையவும் பொற்சுண்ணமிடிப்பதைக் கண்டு அவர்கள் பாடியதாகத் திருப்பொற்சுண்ணத்தையும், ஆங்கு சோலையிடத்தே வரும்போது அங்கே பெண்பிள்ளைகள் கூடித்தங்களுக்குள்ளே விளையாடும்போது வீண்பேச்சுப் பேசுதலில்லாமல் எமது கடவுளையே வாயால் வசனியுங்கள் என்று அவர்கள் சொல்லியதாகத் திருத்தெள்ளேணத்தையும், திருவுந்தியாரையும், திருத்தோணோக்கத்தையும், திருப்பூவல்லியையும், திருப்பொன்னூசலையும் பாடியருளினார்.

அதன் பின்னர் அவ்விடத்தில் ஒரு சிறுபெண் தன்னுடைய தாயை நோக்கிக் கூறுஞ் சொற்களாயாக அன்னைப்பத்து என்னும் பதிகத்தையும், பக்கத்தில் மிண்டுகின்ற வண்டுகளிடத்தில் விருப்பம் வைத்து சிவபெருமானு

டைய திருவடிகளை வழுத்துக வென்பதாகக் கோத்தும்பியையும், சோலைகளில் வாழுங் குயிலினங்களைக்கண்டு அவைகளைக் கருணையோடு கூய் ஓ குயிலினங்காள்! நீங்கள் எம்பிரானை அழையுங்கள் என்பதாகக் குயிற்பத்தையும், கிளியை நோக்கி கிளிப்பத்தையும் பாடி அதன் பின்னர் உலகத்தின்கண் தம்மையடிமைகொண்ட கடவுளையல்லாமல் வேறொருவனைத் தெய்வமென்று சொல்லுவதற்கு அஞ்சுகின்றேன் என்று அச்சப்பத்து பாடிய பின்னர் அந்நகர்ப்புறத்திலே ஒரு பன்னசாலை செய்துகொண்டு ஆங்கு எழுந்தருளியிருந்தார்.

இங்ஙனம் திருவாசகம் பாடி பிறவிபினின்று நீங்கவந்துதிருவவதாரஞ்செய்த மாணிக்கவாசகருடைய செய்தியனைத்தையும தில்லையிலுள்ளார் யாவரும் தாங்கள் கூட்டங்கள்தோறுஞ் சொல்லிமகிழ்ந்து அதிசயித்தார்கள்.

இவர் இவ்வாறு எழுந்தருளியிருந்து புத்தரைவாதில் வென்றகதை இனி வரும்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## புத்தரை வாதில் வென்ற சருக்கம். கிளை - 7.

இங்ஙனம் நடக்குநாளில் தாழ்ந்து நீண்ட சடாயாரத்தையுடைய சிவபெருமானுடைய இரண்டு பாதங்களையும் விடாத ஒரு தபசியானவர் சமுத்திரத்தாற் சூழப்பட்ட பூமியிலுள்ள வளத்தையொருங்கே ஆயத்தக்க அன்புள்ள மனமுள்ளவராய் சோழநாட்டைக் கண்டு தில்லைநாதனை வணங்கிப் பின்பு குற்றமற்ற ஈழதேசத்தை பார்க்கவேண்டுமென்று நினைத்து அவ்வீழதேசத்திற்குப் போயினர்.

அங்ஙனஞ்சென்ற தபசியானவர் முதன்மையான அந்நாட்டரசன் இருந்த ஊரைச்சேர்ந்து அவ்விடத்தில் தாம் போமிடங்களிலெல்லாம் சிதம்பரமானது அளவு சொல்லுதற்குக் கூடாத நெடுங்காலம் வாழக்கடவது

என்று சொல்லுவார். இப்படி சொல்லிக்கொண்டே யிருக்கும் நாட்களில் அங்கேயிருக்கும் மூடர்களாகிய புத்தர்கள் ஈழதேசத்தரசனுக்கெதிரே போய் மிக்க அன்புடன் வணங்கி அரசனே! தேவரீர் ஒன்று கேட்டருளவேண்டுமென்று சொல்லி அதைச் சொல்லத் தொடங்கினர்.

அது என்னவென்றால், மிக்க திறமையுள்ளவனாய்க் காணப்படுமொருவன் இந்த நகருக்குள் வந்திருக்கின்றான். அவன் எந்தக்காலத்திலும் ருத்திராட்ச மாலையையே ஆபரணமாகக் கொண்டிருக்கின்றான். பிச்சையெடுத்துண்பதே அவனுடைய செய்கை. ஆனால் அவன் நின்றாலும் இருந்தாலும் பொன்னம்பலம் என்கிற சொல்லையே சொல்லுகின்றான் என்று சொல்லி வணங்கினார்கள்.

அது கேட்ட அரசன் கடுஞ்சினங்கொண்டவனாய் அப்புத்தர்களைப் பார்த்து நீங்கள்போய் அவனை இப்பொழுதே கொண்டுவாருங்களென்று சொன்னான்.

அப்படியே ஏவலாளிகள் அப்பெரியவரிடம் சென்று ஐயா! உங்களை அரசன் அழைக்கின்றான் வாருமென்றார்.

அதற்கவர் நாள்தோறும் நன்மை தீமை யில்லாதபடி
பிச்சையெடுத்துண்ணும் தொழிலை மேவிட்டு வேறொ
ன்றையும் நினையாதவர்களிடத்தும் அரசர்களுக்குக்கா
ரியமுண்டோ? இல்லையே யென்று, ஆனால் ஊரில் பிச்
சை யெடுத்துண்டாலும், காரியமொன்று மில்லையானா
லும், பூமியிலுள்ள உயிர்களை ரட்சிப்பது அரசனுடை
ய கடமையாகையால் எங்களது தலைவனாகிய அரசனி
டத்தில் வரல்வேண்டுமென்று சொல்ல, நல்லதென்று
சிறப்புப்பொருந்திய தூதருடனே அரசன் சமுகத்தை
நாடிப்போயினர்.

அப்போது ஆதியாகிய பிடகநூல் மூன்றையுமறிந்து
நான்கு குற்றங்களையும் நீங்கப்பெற்றுச் சீலமைத்துத்
தரித்து காமாதியாறும், பஞ்சேந்திரியங்களும் அடக்கப்
பட்டவனாய் பஞ்சகந்தமுங் கெடுதலே முத்தியென்று
அறிவிக்கின்ற பௌத்தாசிரியன் தன்னுடனிருக்க சே
னைகள் புடை சூழ அழகிய புயத்தையுடைய புத்தராச
னும் வீற்றிருந்தனன்.

அப்போது அந்த தபசியானவர் உடுக்கப்பட்டிருந்த
வெண்கோவணமும் விளங்கப்பட்ட கபாலமும சதங்
கைகட்டிய பிரம்பும், பொட்டணிந்த திருமுகமும் சிறி

ய புன்சிரிப்பும், அசைகின்ற சடையுமாக எழுந்தருளி அரசன் திகைக்கிடும் வண்ணம் அரசனுக்குச் சமீபமாக வந்து திருவம்பலம் என்று சொல்லி அங்கே எழுந்தருளினார்.

அதுகேட்ட அரசனானவன் ஐயா! நீர் இப்பொழுது திருவம்பலம் என்று இங்கே சொல்லியதென்னை? என்றுவினவினன்.

அதற்குத் தபசியானவர் சோழமண்டலத்திலே சோழராஜனது தரும குடைக்குட்பட்டதான சிதம்பரம் என்று சொல்லப்படும் ஒரு ஸ்தலமுண்டு. அந்த ஸ்தலம் முன்னே தில்லைக்காடாயிருந்தது. அது திரிபுவனங்களுக்கும் முன்னே உண்டான தெய்வஸ்தலமாகும். அதனால் அதற்கு மூலஸ்தானமென்றுஞ்சொல்வதுண்டு அது இப்பூமிக்கு நடுவேயிருப்பதால் அந்த சிற்சபையில் சிவபெருமான் தனது பிரியா நாயகியாகிய சிவகாமி காணும்படி நடனஞ்செய்தார்.

அவ்விடத்தில் இரணிய வன்மனுடைய தேகத்திலிருந்த குட்டரோகத்தை நீக்கிய சுத்தமான மகிமையையுடைய சிவகங்கை யென்னும் ஒரு தடாகமுண்டு. எவ்வளவு

பாவஞ் செய்தவர்களாயிருந்தாலும் அந்தத்தடாகத்தில் மூழ்கி சிவபெருமானது பஞ்சகிர்த்திய நடனத்தைத்தரி சித்தால் அவர்கள் மறுபடியும் இவ்வுலகத்தில் பிறக்க மாட்டார்கள்.

அன்றி, அச்சிவபெருமான் உலக உயிர்கட்கு மோட்சங்கொடுப்பதில் வல்ல சர்வ சமய தெய்வங்களில் நானே வல்லவனென்று தமது திருவடியில் வீரக்கழலை யணிந்தும், வெற்றிக்கொடி கட்டியும் உமாதேவி காண நடனஞ்செய்தருளினர்.

ஆகையால் அப்படிப்பட்ட பரமசிவனுடைய திருவடிகளை வணங்கப்பெறாத தீய மனமும், வாக்குஞ் செய்கையுமுடைய கொடியவர்களும் ஒருதரம் பொன்னம்பலம் என்று சொன்னால் செல்வப்பெருக்கைக் கொடுக்கின்ற பஞ்சாட்சரத்தை இருபத்தோராயிரத் தறுநூறு முறை காலைக்கொண்டு சொலலுவதற்கு ஒப்பாகுமல்லவா ?

ஆகையால் நாம் அவனைக் குறித்துத் திருவம்பலமென்று சொன்னோம். அதன் பொருள் இதுவேயாகும் என்று சொல்கிறார்.

அப்போது புத்தகுருவானவன் மிகவும் வெகுண்டு
பிடகாகமும் மூன்றினையுஞ் சொன்ன தலைவனையல்லா
மல வேறொரு தெய்வமுமிருக்கின்றதா? என்றுசொ
ல்லிப் பின்னரும் இப்படியிருப்பதானால் தில்லை நகரத்
திற்குப்போய் வாது செய்து அந்த உங்கள் சிவபெரு
மான் தாண்டவஞ் செய்யும் பாதத்திலணிந்திருக்கின்ற
வீரக்கழலையும், அவரது வெற்றிக்கொடியையும் அழித்
துப் போடுவேன். அன்றி புத்தன் ஒருவனை தவிர,
வேறு தெய்வமில்லையென்று அந்த சிற்சபையை அரச
மரத்தடியிலிருக்கும் புத்தன் கோயிலென்று சொல்லும்
படி வைப்பேன்.

அப்படி மூன்று தினத்திற்குள் யானே முடிப்பேனெ
ன்று மிகுதியும் சீற்றங்கொண்டு உடனே தனது அழ
கிய சிவிகைமேலேறி தன்னை வணங்கு மியல்புடையா
ராயபௌத்தக் கூட்டங்களெல்லாம் தம்மைச்சூழ்ந்து
வர இடையேயிருந்த காடு, மலை, நாடு முதலியவற்றை
யெல்லாமுங் கடந்து சிதம்பரத்துக்குப் போயினான்.
இவன் இப்படிபோகவே இனி அரசனானவன் தன்னு
டைய செல்வப் புத்திரிக்கு முன்னமே யுண்டாயிருக்கி
ன்ற ஊமைத்தன்மையை நீக்கிக்கொள்ளச் சிதம்பரத்
திற்குப் போகவேண்டுமென்று நினைத்துத் தன்னைத்

தன்னுடைய சேனுபரிவாரங்கள் சூழ ஒப்பற்றபெரிய பல்லாக்கிலாரோகணித்து சோழநாட்டில் வந்து தில லேயாகக்ஷேத்ரத்தைச் சேர்ந்து பரமசிவன் எழுந்தருளியிருக்கின்ற ஆலயத்தில ஒரு மண்டபத்தில வந்து சேர்ந்தான்.

அதன் பின்னர் அரசனும் அவ்விடம் சென்று புத்த குருவை வணங்கித் துதித்து மகிழ்ச்சியடைந்து ஆங்கிருந்தபோது அவ்வாலயத்தில் பணி செய்பவர்கள் எல்லோரும் இவர்களைக்கண்டு ஒன்றாய்ச்சேர்ந்தார்கள்

சேர்ந்தவர்கள் ஒவ்வொருவரும் புத்த குருவைப்பார்த்து நீர் எங்கள் சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற இடத்திற்கு வரத் தகுதியற்றவராகையால சீக்கிரத்தில் தில்லையைவிட்டு ஓடிப்போகவேண்டும். இல்லாவிடில் நாங்கள் பொறுக்கமாட்டோம் என்று சொன்னார்கள்.

அதற்குப் புத்தனைவன் உங்கள் சோழராஜனுக்கு முன்னே தர்க்கஞ்செய்து நீங்கள் அநுசரித்திருக்கின்ற சைவமார்க்கம் நிலையன்றென்று சொல்லிச் சிறப்புப் பொருந்திய புத்தனே உயர்ந்த தெய்வமென்று இப்போதே சொல்லிச் சாதித்தலொழிய போவதில்லை யென்று சொல்லினன்

அதுகேட்ட பணிவிடைசெய்வோர் யாவரும் இதை நம்மவர்களுக் கறிவிப்போமென்று சீக்கிரமாய்ச்சென்று உண்மையான தபோதனர்களுக்கும், தில்லை மூவாயிரவர்களுக்கும், பரிகலத்தார்களுக்கும் அவரவர்கள் வீட்டிற்போய்ச் சொன்னார்கள்.

அங்ஙனம் சொல்லக்கேட்டவர்களுக்கெல்லாம் அச்சொல்லானது புண்ணிலே வேலாயுதம் நுழைந்தாற்போலும் வருத்தச்சகியாதவர்களாகி எல்லோரும் ஒருக்கே புறப்பட்டு ஸ்ரீநடராஜப்பெருமான் எழுந்தருளியிருக்கின்ற ஆலயத்திற்போய் ஆங்கு ஒரு அரிய மண்டபத்திலிருக்கின்ற புத்த குருவின் எண்ணமென்ன? என்று கேட்போமென்றெண்ணித் தில்லை மூவாயிரவரும் அவனையடுத்து ஓ, புத்தனே! பிழைக்கும் வகையறியாத நீ இங்கே சிறிதும் பயமும் அச்சமுமில்லாவண்ணம் யாவரையும் மதியாமலிருந்த காரணமென்னவென்று பலவாறு வைது கேட்டார்கள்.

அதற்குப் புத்தகுருவானவன் ஆறு சாஸ்திரம், நான்குவேதம், இருபத்தெட்டாகமம் பதினெண் புராணம் ஆகிய இவைகளால உங்களுடைய தெய்வமே தெய்வமென்று சொல்லுவீராளுல் நானும் எங்களுடைய தெய்

வமே தெய்வமென்று சொல்லுவேன். ஆகையால் இங்கே எனக்கெதிரே உங்களுடைய தெய்வமே தெய்வமென்று சாதித்துக்கொள்ளுங்களென்று சொன்னான்.

அவ்வனஞ் சொல்லக்கேட்ட தில்லை மூவாயிரவர் புத்தகுருவைப்பார்த்துக் கோபித்து உன்னை வித்துவான்கள் தோற்றாரென்று சொல்லும்படி ஒரு சொல்லிலே யேஜெயிப்போம்.

ஆனால், மிக்க பராக்கிரமசாலிகளான அரசர்களும், பெரியோர்களும் கூடியிருக்கின்ற சபையில் நம்முடைய தர்க்கவாதத்தைச் சொன்னால் அவர்கள் இது தக்கது. இது தகாதது என்று சொல்லுவார்கள். அப்பொழுது ஒரு கலகமுமில்லை.

இல்லையாயின் தில்லை மூவாயிரவர் ஒருங்கு சேர்ந்து புத்தகுருவை கோபித்தார்கள், அடித்தார்களென்று இந்தவுலகத்தார் சொல்லுவார்களென்று நினைந்து இவ்விஷய முழுமைக்குங் காட்டி சோழராஜாவைவருவதாக ஒரு முடங்கல் போக்கினார்கள்.

அவ்வண்ணம் அரசனுக்கு ஓலை விட்டபின்னர் ஆங்காங்குள்ள, பிராமணர்களுக்கும், பெரிய யோதனர்களுக்

கும், அரிய கலைஞானத்தில் வல்லவருக்கும் முடங்கலை வரைந்து நீவிர் யாவரும் நாளையதினத்தில் சிதப்பரத்தைத்தெரிசிக்க யாதொரு தடையின்றி வந்துசேரவேண்டுமென்று மிகவும் விநயத்துடன் ஓலை போக்கினர். உடனே சூரியாஸ்தமனமாய்விட்டது.

அது காலையில் அத்தில்லை மூவாயிரவர் புத்த குருவைப்பார்த்து புத்தனே! நீ இன்று ஒருபொழுது மாத்திரம் இங்கே இரு. நாளையதினத்தில் உன்னுடைய காழ்ச்சியை உலகத்தாருக்கு காட்டுவோமென்றுசொலலித் தங்கள் தங்கள் வீடுகளுக்குச்சென்று அறுசுவை யோடுகூடிய நலல உணவையுண்டு அன்றிராத்திரிநித்திரைசெய்தனர்.

அன்றிரவு 15 நாழிகை சுமாருக்கு பொன்னம்பலத்தின்கண் ஆநந்தத் தாண்டவஞ் செய்தருள்பவரான ஸ்ரீ சிவபெருமானனவர் கையிற் பிரம்பும், சடை முடியும திருநீறுதரித்த திருமேனியுமுடையவராய் யாவராலும விரும்பப்படும் திவ்விய சொரூபந்தாங்கிவந்து அத்தில்லைமூவாயிரவர் கனவில்தோன்றி ஹே, அந்தணர்காள்! நீங்கள் அப்புத்த குருவை வெல்லுதற்பொருட்டு ஒன்றும் மனஞ் சஞ்சலங்கொள்ளவேண்டாம். நம்முடைய

தில்லைமாநகரத்தெல்லையில் திருவாதவூரிற் பிறந்தாரென மாணிக்கவாசக னென்பான் இருக்கின்றான். அவன் இந்த விஷயத்தைக் கேட்பானால் தர்க்கசாஸ்திர முகாந்தரத்தால புத்தரிடம வாதித்து ஜெயங்கொள்ளவான் ஆகையால் நீங்கள் அனைவரும் ஒருமித்துப்போய் அவனை அழையுங்களென்று சொல்லி மறைந்தருளினார்

இங்ஙனம் கனவிற்கண்ட தில்லை மூவாயிரவர் யாவரும்விழித்தெழுந்து சிவபெருமானது திருவருள் விலாசதனதப் புகழ்ந்து சிரசின்மேல கைகுவித்து அழகிய கோயில் மண்டபத்தின்கண் யாவரும் வந்து சேர்ந்தார்கள்.

அதன் பின்னர் ஒருவரை யொருவர் இரவு நிகழ்ந்த கனவினைப்பற்றி வினவி, யாவரிடத்திலும் ஒரு தன்மையாகவே கனவு நிகழ்ந்ததை எண்ணி யெண்ணிமகிழ்ந்து இனி மெய்த்தவ சிரேஷ்டரான மாணிக்கவாசகர் எழுந்தருளியிருக்குமிடத்திற்குச் செல்லுவோமென்று தீர்மானித்து அவ்வாறே அவரிருக்கும்பள்ளிசாலையைச் சமீபித்தார். ஆங்கு எழுந்தருளியிருந்த மாணிக்கவாசகரைக்கண்டு நிகழ்ந்தவைகளையெல்லாம் விண்டு அவரது திருவடிகளைச் சிரமேற்கொண்டு நின்றார்கள்.

அதுகேட்ட மணிவாசகப்பெருமானார் உடனே எழு
ந்து சிவபெருமானது திருவருளை வியந்து முன்னரே
அவ்வெம்பெருமானிட்டருளிய ஆஞ்ஞையை நினைந்து
புறப்பட்டு அத்தில்லை மூவாயிரவரும் தம்மைத் தொட
ர்ந்துவரச்சென்று பொன்னம்பலத்தைக் கண்டு ஆங்கு
நிர்த்தஞ்செய்கிராநின்ற சபாபதியை வணங்கி அவ
னது திருவருளை நிறையப்பெற்று மாயா சகிதர்களாகிய
பௌத்தக் கூட்டமிருக்கின்ற மண்டபத்திற்குப்
போய் அவர்களது தீமை குடிகொண்ட முகதெரிசனம
செய்தல் பாபத்திலும் பாபமாகுமென்றெண்ணித்
திரைபோடச் செய்வித்து அத்திரைக்கு ஒருசார் ஆச
னத்தின்மேல் எழுந்தருளியிருந்தார்.

அதுகாலையில் வேதப்பிராமணர்களும், பௌராணி
கர்களும், கலைஞான வல்லவர்களும், புத்தி சாதுரியத்
தில் வல்லபெரியோர்களும் தம்மைச் சூழ்ந்து வரச்சோ
ழராஜனானவன் சீக்கிரமாகவந்து தில்லைச்சபாநாயகனை
தரிசித்து அவ்விடம் விட்டு முன்னே சொல்லப்பட்ட
மண்டபத்திற்கு வந்து திருவருள் விலாசத்தோடு எழுந்
தருளியிருந்த மணிவாசகப்பெருமானாரைக் கண்டு அவ
ரது திருவடிகளில் வணங்கிப் பூரண சந்திரன்போல்

ஒரு ஆசனத்தில் அவருக்குப் பக்கத்தில் எழுந்தருளினான்.

அது கண்ட ஈழநாட்டரையன் எழுந்து சோழராஜனைப்பணிந்து முன்னே செலுத்தியதில் குறைபட்டிருந்த திறையையுங் கொடுத்து அரசரேறே! நீர் மிகுதியும வாழக்கடவீரென்று துதித்தபோது சோழராஜனும சந்தோஷித்து பக்கத்திலிருக்கச் சொல்ல அவ்வாறே யவனுமிருந்தனன்.

அதுகாலையில அவ்வாதத்திற்குச் சாட்சி சொல்லுவோர் அநேகரும் ஆங்கு அமாந்திருந்தனா.

அங்ஙனம் நடத்தும் வாதத்தைக்காணபிரமன், விஷ்ணு, சத்த முனிவர்கள், அஷ்டதிக்குப பாலகாகள உருத்திரர்கள், விஞ்ஞசயர்கள், சந்திரன், சூரியன முதலியோரே வருபவராவார்கள்.

இவ்வண்ணம் சபை கூடியிருக்குஞ்சமயத்தில் சோழராஜனானவன் எழுந்து ஸ்ரீமணிவாசகப்பெருமான் திருவடிகளில் வணங்கி நமஸ்காரஞ்செய்து ஹே, சுவாமி! சிவஞானத்தை நிலை நிறுத்துவது உமது பாரம். பொய புத்தர்களைச் சொல்லுவது என்னுடைய கடைமை.

ஆகையால் நீங்கள் உடனே அக்காரியத்தைச் செய்த ருளவேண்டும் என்று வேண்டிக்கொண்டனன்.

அவ்வாறு அரசன் கூறக்கேட்ட புத்தர்களெல்லாம் மனவருத்தமடைய மாணிக்கவாசகர் மன மகிழ்ச்சியடைந்து புத்தனைப்பார்த்து திருட்டுவார்த்தை சொல்லபட்டவனே? நீ வந்தகாரணமென்ன? அதைச் சொல்லு என்று கேட்டார்.

அதுகேட்ட புத்த குருவானவன் ஸ்ரீமணிவாசகப் பெருமானை நோக்கி ஐயா! நான் எங்களுடைய தெய்வமாகிய புத்தனே உலகத்திற்குத் தெய்வமே யொழிய வேறு தெய்வங் கிடையாது என்று சாதித்து இந்தப் பொன்னம்பலத்திலே உலகர்யாவருங் காணும்படி அப் புத்தனையே வைத்தற்பொருட்டு நேற்றே இங்குவந்தேனேயொழிய வேறு காரியமேற்கொண்டு வந்தேனல்லேன் என்றான்.

அதுகேட்ட எம் மணிவாசகப்பெருமானனவர் புன்னகைசெய்து ஒ, பூர்வதவமில்லாத புத்தனே! மூயலானாது யானையாகுமென்று [illegible]தான் சொல்லுவையா? அல்லது யார்சொல்லவாவது கேட்டிருக்கின்றனையா?

இல்லையே. ஆயினும் அதுநிற்க. உன்னுடைய தெய்வமும, ஆத்மாக்கள் அவனடியிற் சேருஞ் செய்தியும சொல்லென்று கேட்டருளினர்.

அதற்குப் புத்தகுருவானவன் மிகவுங் கோபங்கொண்டவனாய்க் கண்ணில்லாத குருடனுக்குச் சூரியகிரணத்தினொளியைக் காட்டுதற்குத்தா ஆகுமா? அன்றி, அவனாலாவது பார்க்கக்கூடுமோ? ஆகாது. ஆகையால எங்களுடைய புத்ததேவனுடைய சிறப்புக்களை எடுத்துச் சொல்லவேண்டுமோனால் ஆயிரம் நா வேண்டுமென்று சொல்லிப் பின்னரும் சொல்லுகின்றான்.

எங்களுடைய புத்ததேவனானவன் நல்ல பிடகாகமத்தைச் சொல்லி, அநேகயோனிகள்தோறும் பிறந்து அவ்வவ் வான்மாக்களுக்கு உறுதிசெய்து கொடுமையை விளைவிப்பனவான, கொலை, களவு, பொய், கள்ளுண்ணல் என்னும் நாற்குற்றங்களையும் நீக்கி மேன்மைபெற்றிருக்கின்ற அரசமரநிழலில் அமர்ந்திருப்பவனாவான்.

உயிர்களுக்கோ கருப்பத்திற் சேர்கின்ற உருவம், வேதனை குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் என்னும் பஞ்சகந்தங்களுங்கூடி ஒழிவில்லாதஅநேக அறிவுண்டாக்கி

யொழிவது பிறவித்துன்பமும், அது நீக்கக்கேடாயழி வது மோக்ஷமுமாகு மென்றான்.

இவைகளைக்கேட்ட திருவாதவூரரானவர் சோழராஜனது களங்கமற்ற முகத்தைப்பார்த்து அக்கிருபாநோக்கஞ்செய்து அறியாமையால் பிதற்றுகின்ற புத்தனுக்கு நாம் என்னசொல்லுவதென்று நினைந்து பின்னர் அப்புத்தனைப்பார்த்துச் சொல்லுகின்றார்.

ஹே, புத்தனே! நீ தருமமுண்டென்று புத்ததேவன் பிடகநூலில் சொன்னானென்று சொனாய்.

அன்றி, பொருந்திய அறிவுதோன்றி க்ஷண நேரத்திலமறைந்து போமென்றுஞ்சொன்னாய்.

ஆனால் சொல்லும் பொருளும் நீ தேடிச்சொல்லுமுன்னரே உணர்வுகெட்டால் அஞ்ஞானத்தையே தருகின்ற உன்னாலே நீ எப்படி சொல்லுவாய்? ஆகையால் உனக்கு தருமசாஸ்திரம் என்பது இல்லை.

ஆன்மாக்கள் பொருட்டு உன்னுடைய கடவுள் அநேக யோனிகள் தோறும் போய்ப்பிறந்தானென்று சொன்னாய்.

உன்னுடைய கடவுள் ஆன்மாக்களது மயக்கத்தைத் தீர்க்க வந்தவரானால் அவரும் அதிக மயக்கத்தைக்கொண்டமையால் ஆன்மாக்களுக்குள்ள மயக்கம்நீங்குமோ?

எங்கள் கடவுள் கொல்லநினையானென்று சொன்னாய்.

உங்கள் கடவுள் உலகத்தில் அநேக யோனிகளில் பிறந்தவராகையால் பூர்வஜென்மங்களில் நரிகளாகவும் புலிகளாகவும் பிறந்திருக்கக்கூடும் அப்படி பிறந்தகாலத்தில் கொடியபசிவந்தடுத்திருக்குமேயெப்பொழுதாவது அந்நரியும், புலியும், புல்லைத்தின்றிருக்குமோ? இராதல்லவா. ஆகையால் உன்கடவுளைக்கொல்ல நினையாதவனென்று சொல்லக்கூடுமா?

பொய்யாகிய உன்னுடைய ஆகமத்தில் ஐந்து கந்தங்களுடனே கூடத்தேகமழியுமென்று சொன்னாய்.

அப்படியானால் உன்னுடைய கடவுளுக்கு ரூபமெங்கே? இப்படியிருக்க, ஆன்மாக்களுக்கருள்செய்யும் பொருட்டு ஒரு வடிவங்கொண்டு வந்தானென்ப தென்னை?

ஆகையால் காரணமாகிய ஆன்மாவோடு கூடுகின்ற காரியமாகிய வடிவில்லா திருந்தால் உனது அரசமர

நீழலிலிருக்கும் தெய்வத்திற்கு ரூபமில்லை. அங்ஙன மிருந்தவின் பஞ்சகந்தமுங் கெடுவது முத்தியென்று சொல்லும் வல்லமியில்லாத உன் பிடகாகமத்தைச் சொன்னவர் யார்?

இருபத்தொருவர் என்று சொல்லப்பட்ட உன்னுடைய புத்தர்களெல்லாம தாய்மார் வயிறுகளைப் பீறிக்கொண்டேவருவது சுபாவமென்பார்.

அங்ஙனம் தாய்மார் வயிற்றைக்கீறி வெளிவந்தபோது தாய்மார் இறந்துபடுவார்களல்லவா? அப்படிப்பட்ட கொலையை முன்னிட்டு அரிய நரகத்தில வீழ்வார்களோ தெய்வமாவார்கள்?

ஒளிப்பினையுடைய நான்கு பூதங்களாய உடம்புக்கு வேறு உயிர் இல்லை. அதுவே உயிரென்று சொன்னாய.

அப்படியானால் நீ சொல்லிய சாஸ்திரத்தில் இரயில வித்தினைசெய்யும்போது உன் முகத்தில் ஏறிப்போகும சர்ப்பத்தை இந்தப்பூதங்கள் அறிந்தனவோ?

உருவமும் உயிரும் கூடும் அறிவு உனக்கு இல்லையென்று சொன்னாய்.

ஆனால் இந்த உருவம் நீங்கினகாலத்தில் உயிரும் சீக்கிரத்தில் நீங்கிப்போகும். உருவமும், உயிரும் ஒன்

ருய்க் கூடப்பிறக்குமானால் அதனால் உன்னுடைய உருவும் உயிரும் வேறாகுமென்று உன் வாயீரற்சொல்லுக.

உன்னாகமப்படி ஆகாசமுமில்லை. அவ்வாகாயத்துச் சத்தமுமில்லை. ஆகையால் அந்த ஆகாயம் இல்வழக்காகும என்று சொன்னாய்.

அப்படிப்பார்த்தாலும் உன்னாகமத்தில் சொல்லப்பட்டவையான பிருதிவி, அப்பு, தேயு, வாயு என்னும் நான்குபூதங்களும் இருப்பதற்கு இடம் ஆகாசந்தானே. அது இல்லாவிடின் மற்றைய பூதஙகள் எங்ஙனம் நிலைக்கும்? ஆகையால் நீ சொல்லுஞ் சொல்லினைசை ஆகாயத்திலுண்டானதென்று சொல்லுக

இடம் பரவிய திசையென்று சொல்லுவதும் இல்வழக்கென்று சொன்னாய்.

அப்படி சொன்ன நீயே நெடிய வடதிசையில் அரசமாமிருக்கிறதென்று வணக்கஞ் செய்வாய். நீ இங்ஙனம் பலவாறு வழியில்லாது பேசுஞ்சொற்கள், அறிவிலாதவர்களும், பயித்தியங்கொண்டவர்களும், பொய்பேசுகின்றவர்களும், இருக்கின்ற சபையிலே செல்லுமே யொழிய இங்குச்செல்லாது.

மரமானது உயிரல்லவென்றுசொன்னாய். அது பஞ்சபூதபரிணாமமாகிய தேகத்தையுடையார்போலாறு நலஞ்சலத்தைக் கொள்ளும்போது இலை முதலிய உறுப்புக்கள் கொண்டு செழித்தோங்கும். இல்லையாயின் அவ்விலைகள் சருகுகளாய்த் தீரும் அப்பொழுது அதை உயிரன்றென்றுரைக்கலாமோ ?

ஒரு உயிரைக் கொல்லுவது குற்றமென்றும், செத்த மாமிசத்தைத்தின்பது நன்றென்றுஞ் சொன்னாய்.

அங்ஙனமாயின் ஒரு உயிரைக்கொன்று உனக்கு மாமிசத்தை யுண்பித்து உன் பசியை தணிப்பார்க்கு பாவம் வந்து சேர்வது உனக்கு நல்லதோ.

எங்கோனாகிய சிவபெருமானது ஆகமஞ் சொல்லப்பட்டவர்கள் காரணமிருக்கக் காரியங்கெடுவதே மோட்சமென்று சொல்லுவார்கள்.

நீயோ, போர் புரிந்து வருந்தும் உயிரும் கூடக்கெடுவது மோட்சமென்று பிரிவறியாமல் உளறுவாய்.

பஞ்சஸ்கந்தங்களும் அழிவதே முத்தியென்று சொன்னாய்.

அப்படி பஞ்ச கந்தங்களும் அழிந்தால் முத்திபெற்ற வர் யாரொன்று வினவும்போதில் அழிந்த ஐந்திலுமுண் டான அறிவென்று சொன்னால் அப்போது பஞ்சகந்தங் களும் அழியவுமில்லை மோட்சமுமில்லையாகும் என்று சொல்லியருளினர்.

இவைகளையெல்லாங்கேட்ட புத்தனானவன் மிகவுங் கோபித்து எங்களுக்குத் தெய்வமுமில்லை மோட்சமு மில்லை யென்று சொன்னீர்.

ஆனல் உம்முடைய தெய்வமாவதெது? நீங்கள் அ டையும் மோட்சம் எது? என்று கேட்டான்.

அதற்கு மணிவாசகப்பெருமானர் எங்கள் கடவுளா வான் கலலால நீழலிலிருந்து தருமஞ் சொல்லுகின்ற வடிவைக்கண்டு தெரிசிக்கும்படி நடனஞ் செய்வான். விபூதி தரித்த திருமேனியை யுடையவன். உமாதேவி யை ஒருபாகத்திலுடையவன். கிருபையை யுடைய வன் அவனுடைய பிரதாபத்தை யெடுத்துச்சொல்ல எளிதாகுமோ? ஆகாது. என்று சொலலினர்.

அதகேட்ட புத்தனானவன் ஐயா! நீர் வீணே விஸ்த கவேண்டாம். நிறுத்தும் என்று சொல்லி;

முன்னே எங்களுடைய கடவுள் கல்லால நிழலிலி ருந்து தருமஞ்சொன்னானென்று என்னெதிரே சொன்னீர்.

அப்படிப்பட்ட கடவுள் கையில் செபமாலை கொண்டிருப்பது வேறொரு தெய்வத்தை நினைத்துப் பூசித்தற்கோ?

உலகத்தார் வணங்கும்படி சிதம்பரத்தில் நடனஞ் செய்வான் எங்கள் கடவுள் என்றீர்.

அப்படி நினைத்துச்சென்ற சிலர் பார்க்க ஆடுவதல்லாமல் தமதிச்சையினால் ஆடுவோருமுண்டோ?

அழகிய பொன்னம்பலத்தில் நடிக்கின்ற எமது கடவுள் திருமேனியில் விபூதி தரித்திருக்கின்றானென்றும் மிகுதியும் பெருமையாகச் சொன்னீர்.

அந்த விபூதி பரிசுத்தமானதென்று நினைந்தோ திருமேனியில் அதை தரித்திருக்கின்றானென்றீர்?

உமாதேவியை யொரு பக்கத்தில் உடையவனென்று சொன்னீர்.

பூமியில் பாதி சரீரம் பெண்வடிவாயிருப்ப துண்டோ? அப்படி பாதிதேகம் பெண்ணுருவாயுமது கடவுளிருந்தால் நீர் துறவி விருக்குந்தவமென்ன?

இவ்வாறு அப்புத்தனனவன் சொல்லக்கேட்ட மணி வாசகப்பெருமானார் இகழ்ச்சியைக் குறிக்கின்ற நகை காட்டி நல்ல தவமில்லாதவனே! எம்முடைய கடவுளது அடியார்கள் நல்ல வாழ்வைப்பெற வந்தவர்கள் ஆனால் அந்த உபதேசத்தை உனக்குச் சொல்லவேன் ருல் நீ பாத்திரவானாயில்லை. என்று சொல்லி இன்னும் சொல்லுகின்றார்.

எமது சிவபெருமானனவன் கையிற் செபமாலைகொண்டிருப்பது உலகத்தார்கள் தவஞ் செய்தற்கென்று நினைக்கவேண்டாம். அது ஆயுதத்தொழில்களைப்பழக்குகின்ற பக்குவமுள்ள ஞானசிரியர் கையில்கொண்டும் ஆயுதம் போன்றதாகும்.

தவப்பயனைச் சம்பாதியாதவர்களைப்போல ஊனக் கண்கொண்டு உலகத்தார் பார்க்க எதிரே கூத்தாடுபவன் என்றாய்.

"விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளான் மாமணிச் சோதியான்
உறவு கோனட் டுணர்வு கயிற்றினன்
முறுகவாங்கிக் கடைய முன் னிற்பனே."

என்பது போல் எம்மிறைவன் விறகிலே கலந்திருக்குந் தீயைப்போலவே சர்வதேகங்களிலுங் கலந்து உயிரையெல்லாம் ஆட்டுவிக்கும ஒரு கட்டுவன் என்று எண்ணிக்கொள்க.

உமது கடவுள் திருநீற்றைத்தரித்தது எற்றுக்கென்று கேட்டாய்.

உலகத்தில் பிள்ளைகளுக்குண்டாவனவாயநோய்களைத்தணிப்பதன்பொருட்டுத்தாய்மார்கள் மருந்து சாப்பிடுவதுபோல ஆன்மாக்களுடைய பிறவி நோயை நீக்குவதற்குத் தரித்ததென்றுணர்ந்துகொள்க.

புல்லறிவாளனை புத்தனே! வீண் வார்த்தைகள் பேசவேண்டாம். வெறுயனே நில். எம்முடையபரமசிவனேயல்லாமல் திருநீற்றைத் தரிப்பவர் வேறுயார் இருக்கின்றனர்? அப்படிப்பட்ட திருநீற்றிலுள்ள சுகத்தை வேதஞ் சொல்லுவதேயல்லாமல் மற்றொருவரால் சொல்லுவதற்கெளிதாமோ!

எமது கடவுள் தமது வாமபாகத்தில் பார்ப்பதாதேவியை வைத்திருப்பது அடாது என்று சொன்னுய்.

எமது கடவுள்;

"போகிய பிருத்துயிர்க்குப் போகத்தைப் புரிதலோரார்
யோகிய பிருத்துயிர்க்கு யோகத்தைப் புரிதலோரார்
வேகியானுற் போற்செய்தவினையினை வீட்டலோரார்
மூகியா மூடரெல்லா மும்பரி லொருவனென்பார்."

என்றவண்ணம் ஆன்மாக்களுக்குப் போகத்தைத்தருத ற்பொருட்டே பார்ப்பதாதேவியை ஒருபாகத்தில் வைத் திருப்பதாகும். அதுபோலவே ஆன்மாக்களுக்கு யோ கத்தைக் கொடுத்தற் பொருட்டே யோகவுருவத்தை யும் கொள்ளுபவராவார்.

கண் குருடர்கள் தங்கள் கையில் பிடித்திருக்கின்ற தடியையேயல்லாமல் வேறொன்றையுமறிய மாட்டார் அதுபோல இந்த வார்த்தையை மட்டும் கற்றனையே யன்றி வேறொன்றையும் நீ அறியமாட்டாய். கண்ணில லாத புத்தனே! அழகிய ரிஷபவாகனருடாகிய எங் கள் சிவபெருமான் பூவில் வாசனையானது எப்படி பூ வைவிட்டுப் பிரிக்கக் கூடாமல் கலந்திருக்கின்றதோ அப்படியே ஆத்மாக்களிடத்தில் கலந்திருப்பவராவார்.

அல்லாமலும், 'எங்கள் சிவபெருமானது சொரூபல ட்சணத்தை இன்னும் விதர்த்து சொல்லுகின்றேன் கே ட்பாயாக.

"ஆதிசிவ யோகிமிகு போகியரு வாகுஞ்
சோதி வெகு ரூபிசுக வாரிதுய ரில்லா
நீதிமணி மன்றதனி னின்றசிலை யல்லால்
யாதுமுடி யாதுபதம் யாரறிவ ரென்றார்."

என்றவண்ணம் சொரூபங்கொண்ட இறைவருக்கு எது சிரசு? எது பாதம்? அதை யார் அறியவல்லவர்? அப்படி யிருப்பதால் உன்னால் அறிய ஒண்ணாது.

என்று இவ்வாறு மொழிந்து அதன் பின்னர் சரச்சுவதாதேவியைநோக்கி ஸ்ரீ மணிவாசகப் பெருமானானவர் பிள்ளைகள் பெண்களாகிய எவருடைய வாக்கின்கண்ணும் எழுந்தருளியிருக்கின்ற சரஸ்வதியாகிய நீ இந்தப்படி பொய் புத்தர்கள் வாக்கிலிருந்துகொண்டு பொய்ம்மொழிகளைப் புகல்வது தகுதியோ? என்று கோபித்துச்சொல்லி, இன்னும்:

"தொக்க நான்மறை சொல்லு நீயிவை
சொல்லு தென்கலை மாதராய்
தக்கன் வேள்வியி லன்ற னாசி
தடிந்த தின்று மறப்பதே
முக்க ணாவரு ளில்லை யென்றிடு
மூகர் நாவை யகன்றுநீ

நக்க னார்திரு வாணை யேசென
காம டக்கையு மஞ்சினான்."

இவ்வாறு சொல்லவே சரச்சுவதா தேவியானவள் பாணிக்கவாசகரானவர் முன்னர் நாம் அநுபவித்த துன்பத்தைபெடுத்துக்காட்டியே சிலவியாயங்களைச்சொல்லிநம்மீது கோபித்துச் சிவபெருமான் மீது ஆணைவைத்தனரே, அந்தோ? இனி நாம் இப்பாவிகள் நாவிலிருப்போமானால் என்ன துன்பத்தை அநுபவிக்க வருமோ? என்று எண்ணிப்பயந்து அவ்வஞ்சகருடைய நாவினின்றும் நீங்கினாள்.

அதன் பின்னர் அப்புத்தர்களெல்லாம் விஷத்தைச் சாப்பிட்டவர்கள் எப்படி தம்மறிவைத் தமக்குச் சுவாதீனமாக இருக்கப்பெறாமல் புத்தி தடுமாறி ஒடுங்குவார்களோ அப்படியே ஒடுங்கி ஊமைகளானார்கள்.

இங்ஙனம் நிகழ்ந்தவற்றையெல்லாம் ஈழதேசத்தரசனானவன் நன்கு கண்டு மனத்தில் வியசனங்கொண்டு மீண்டும் அதை ஒருவாறு விண்டு சிவஞான நூலில் வல்லமையால் சிவஞானச்செல்வராய ஸ்ரீமணிவாசகப் பெருமானாரது திருவடிகளில் வணங்கி நின்று;

"சொல்ல வல்லவர் மூகையாயினர்
சொல்லிலா வொரு மூகையாம்
வல்லி யென்புதல் விக்கு மூகை
மறைந்து நல்லுரை கூடினால்
நல்ல தொண்டனு மக்குநானென
நாய னாரவ டன்னை நீ
யொல்லை யிங்கழை யென்னவந்தவ
ளூண்மை சேரவை நண்ணினாள்"

ஓ சுவாமீ! எம் தேசத்திலிருந்து வந்து தர்க்கவாதந் தொடுப்பதில் வல்லவர்களான புத்தர்களெல்லாம் இப்பொழுது ஊமர்களாய்விட்டனர். ஆனால் எனக்கு ஒருபெண் இருக்கின்றனள். அப்பெண்பிறவி ஊமையாயிருக்கின்றாள். அப்படிப்பட்டவளுக்கு அந்த ஊமையை நீக்கிப் பேசும்படி செய்யவேண்டியது உமது பாரமாகும். அங்ஙனம் நீர் செய்துவிடுவீரானால் நான் உமக்கு நல்ல அடிமையாவேன். அப்படியாவது என்னுடைய கடமை. என்று சொல்லினான்.

அதுகேட்ட மணிவாசகப் பெருமானார் அப்படியாயின் அந்தப்பெண்ணைச் சீக்கிரமாகவே இவ்விடமழைக்கவென்று ஆஞ்ஞாபித்தனர்.

அரசனும் அவ்வாறே தன்னுடைய ஊமைப்பெண்ணை வரவழைக்க, அவளும் அந்த சத்தியசபையை வந்து சேர்ந்தனள்.

இங்ஙனம் சேர்ந்து நிற்கின்ற கன்னிப்பருவமுடைய பெண்ணைக் கிருபாநோக்கத்தால் நன்கு பார்த்தருளிச் சமீபமாக அழைத்து மனங்கனிந்து ஓ பெண்ணே! நீ இதுவரைக்கும் இவ்விடத்தில் புத்தனால் சொல்லப் பட்டுவந்தளவான தர்க்க வாதங்களுக்கெல்லாம் நீ விடை பகர்வாயாக என்று வரங்கொடுத்துத் திருநீறு சாத்திச் சொல்லும்படி ஆஞ்ஞாபித்து ஒவ்வொரு கேள்விகளாக ஸ்ரீமத்மாணிக்கவாசகர் சொல்லிக்கொண்டே வந்தனர்.

"பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதுந் திருவாயான் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவ னெவ்வுயிர்க்கு மியல்பானான் சாழலோ.

என்னப்ப னெம்பிரா னெல்லார்க்குந் தானீசன்
றுன்னம்பெய் கோவணமாய்க் கொள்ளுமது வென்னேடீ
மன்னுகலை துன்னுபொருள் மறைநான்கே வான்சரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ.

கோயில் சுடுகாடு கொல்புலித்தோ னல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான்றனியன் காணேடீ
தாயுமிலி தந்தையிலி தான்றனிய னாயிடினுங்
காயி லுலகனைத்துங் கற்பொடிகாண் சாழலோ.

அயனை யனங்கனை யந்தகனைச் சந்திரனை
வயனங்கள் மாயா வடுச்செய்தான் காணேடீ
நயனங்கள் மூன்றுடைய நாயகனே தண்டித்தாற்
சயமன் றோவானவர்க்குந் தாழ்குழலாய் சாழலோ.

தக்கனையு மெச்சனையுந் தலையறுத்துத் தேவர்கணந்
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்ததுதா னென்னேடீ
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்தருளி யருள்கொடு
[த்தங்.
கெச்சனுக்கு மிகைத்தலை மற்றருளினன்காண் சாழலோ

அலரவனு மாலவனு மறியாமே யழலுருவாய்
நிலமுதற் கீழண்டமுற நின்றதுதா னென்னேடீ
நிலமுதற் கீழண்டமுற நின்றிலனே லிருவருந்தஞ்
சலமுகத்தா லாங்காரந் தவிரார்காண் சாழலோ.

மலைமகளை யொருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தா லவன் சடையிற் பாயுமது வென்னேடீ
சலமுகத்தாலவன் சடையிற் பாய்ந்திலனேற் றரணியெல்
[லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாஞ் சாழலோ.

கோலாலமாகிக் குரைகடல் வாயன் றெழுந்த
வாலால முண்டானவன் சதுர்தா னென்னேடீ
யாலால முண்டிலனே லன் றயன் மாலுள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ.

தென்பா லுகந்தாடுந் தில்லைச் சிற்றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும் பித்தன் காணேடீ
பெண்பா லுகந்திலனேற் பேதா யிருநிலத்தோர்
விண்பாலியோ கெய்திவீடுவர் காண் சாழலோ.

தானந்த மில்லான் றனை யடைந்த நாயேனை
யானந்த வெள்ளத் தழுத்துவித்தான் காணேடீ
யானந்த வெள்ளத் தழுத்துவித்த திருவடிகள்
வானுந்து தேவர்கட்கோர் வான் பொருள்காண் சாழலோ.

நங்கா யிதென்ன தவநரம்போ டெலும்பணிந்து
கங்காளந் தோண்மேலே காதலித்தான் காணேடீ
கங்காள மாமா கேள் காலாந்தரத்திருவர்
தங்காலஞ் செய்யத் தரித்தனன்காண் சாழலோ.

கானார் புலித்தோ லுடை தலையூண் காடுபதி
யானா லவனுக்கிங் காட்படுவா ராரேடீ
யானாலுங் கேளா யயனுந் திருமாலும்
வானாடர் கோவும் வழியடிமை சாழலோ.

மலையரையன் பொற்பாவை வாணுதலாள் பெண்டிருவை
யுலகறியத் தீவேட்டா னென்னுமது வென்னேடீ
யுலகறியத் தீவேளா தொழிந்தனனே லுலகனைத்துங்
கலைநவின்ற பொருள்களெல்லாங் கலங்கிடுங்காண் சாழ
[லோ.

தேன்புக்க தண்டலைசூழ் தில்லைச் சிற்றம்பலவன்
றான்புக்கு நட்டம் பயிலுமது வென்னேடீ
தான்புக்கு நட்டம் பயின்றிலனேற் றரணியெல்லா
மூன்புக்க வேற்காளிக் கூட்டங்காண் சாழலோ.

கடகரியும் பரிமாவுந் தேருமுகந் தேறாதே
யிடபமுகந் தேறியவா றெனக்கறிய வியம்பேடீ
தடமதில்க ளவைமூன்றுந் தழலெரித்த வந்நாளி
லிடபமதாய்த் தாங்கினான் றிருமால்காண் சாழலோ.

நன்றாக நால்வர்க்கு நான்மறையி னுட்பொருளை
யன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் காணேடீ
யன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தா னாயிடினுங்
கொன்றான்காண் புரமூன்றுங் கூட்டோடே சாழலோ.

அம்பலத்தே கூத்தாடி யமுதுசெயப் பலிதிரியு
நம்பனையுந் தேவனென்று நண்ணுமது வென்னேடீ
நம்பனையு மாமாகேணான் மறைக டாமறியா
வெம்பெருமா னீசா வென்றேத்தினகாண் சாழலோ.

சலமுடைய சலந்தரன் றனுடறடிந்த நல்லாழி
நலமுடைய நாரணற்கன் றருளியவா றென்னேடீ
நலமுடைய நாரணன்றன் னயனமிடந் தரனடிக்கீ
ழலராக விடவாழி யருளினன்காண் சாழலோ.

அம்பரமாம் புள்ளித்தோ லாலாலமாரமுத
மெம்பெருமா னுண்டசதுரெனக் கறியவியம்பேடீ
யெம்பெருமா னேதுடுத்தங் கேதமுதுசெய்திடினுந்
தம்பெருமை தானறியாத் தன்மையன்காண் சாழலோ.

அருந்தவருக் காலின் கீழறமுதலா நான்கினையு
மிருந்தவருக் கருளுமது வெனக்கறிய வியம்பேடீ
யருந்தவருக் கறமுதனான் கன்றருளிச் செய்திலனேற்
றிருந்தவருக் குலகியற்கை தெரியாகாண் சாழலோ.

இங்ஙனம் அவ்வூமைப்பெண் சொல்லிக்கொண்டு வந்தவிடைகளின் கருத்துகளை யெல்லாம் திருச்சாழல் என்று பெயரிட்டு சாழல் விளையாட்டாகப் பாடலாகப் பாடியருளினார்.

அதன் பின்னர் இவற்றையெல்லாங் கண்ட ஈழநாட்டரசனுக்குத் தன்னுடைய ஊமைப்பெண்ணும் வாய் திறந்து வசனித்ததே என்று இனியில்லா மகிழ்ச்சிகொண்டு இப்படிப்பட்ட மகிமை சைவசமயத்திலிருக்கின்ற

தல்லவா? என்று வியந்து புகழ்ந்து பஞ்சாட்சர தியா னஞ் செய்து விபூதி தரித்து பிறகு ஸ்ரீமணிவாசகப்பி ரானுக்கு யாதொன்றிலும் தவறுதலில்லாத அடிமைத் திறத்தையுடைய அடியவனாயினன்.

இதைக்கண்ட சோழராஜனும் தில்லை மூவாயிரவரும் திருவம்பலம் வாழ்கவென்று துதித்து மணிவாசகப்பெ ருமானையும் துதி செய்தனர்.

இவ்வாறு ஈழநாட்டரசன் விபூதி ருத்திராக்கதாரண னாய் மாணிக்கவாசகருக்கு எதிரே அடிமைப்பட்டவ னாக நிற்கக்கண்ட சிவந்த சிவா வஸ்திரமுடையவர்க ளான புத்தர்களெல்லாம் தங்களுக்குண்டாயிருக்கும் ஊமைத்தன்மை நீங்கவேண்டுமென்று சொல்லித்துதி த்து வணங்கினார்கள்.

அதன்பின்னர் சோழராசனும், தில்லை மூவாயிரவரும் ஸ்ரீமணிவாசகப் பெருமானை நோக்கிச் சுவாமீ! தேவ ரீர் அப்புத்தர்களது வேண்டுகோளுக்கிரங்கி அவர்க ளுக்குண்டா யிருக்கும் மூகைத் தன்மையை நீக்கியே யருளல் வேண்டும் என்று சொல்லித் துதித்தனர்.

அதுகேட்ட மாணிக்கவாசகரானவர் மிகவும் மனம கிழ்ந்து அவர்கள்மேல் தமது கிருபாநோக்கத்தைச்

செலுத்தவே உடனே அப்புத்தர்களெல்லாம் முன்னிருந்த ஊமைத்தன்மையை நீங்கப்பெற்று; மாணிக்கவாசகரைப்பார்த்து ஐயா! பெரியவரே! நாங்களெல்லோரும் பூர்வஜென்மத்தில் செய்த தீவினையினால் சைவசமயத்துக்குரிய விபூதியையணிந்து பஞ்சாட்சரத்தை உச்சரியாமலிருந்தோம். ஆகையால் நீர் இப்பொழுதே எங்களுடைய சிவப்பு வஸ்திரத்தைக் கொளுத்தித்தள்ளிவிட்டுப் பூசுதற்குரிய திருநீற்றையும், அணிதற்குரிய ருத்திராட்சத்தையும், உடுப்பதற்குரிய காவி வஸ்திரத்தையும் கொடுத்தருள வேண்டுமென்று சொல்லி வணங்கினார்கள்.

இங்ஙனம் சொல்லக்கேட்ட மாணிக்கவாசகரானவர் புன்னகைசெய்து இவர்களெல்லாம் பூர்வத்தில் நல்லதவஞ் செய்தவர்களே யாவார்களென்று நினைத்துக்கொண்டு உடனே அவர்கள் கேட்டுக்கொண்ட வண்ணமே அவர்களுக்கு விபூதியையும், ருத்திராட்சத்தையும், கொடுத்து அவர்கள் உடுத்திருந்த சிவப்பு வஸ்திரங்களை அக்கினியிலிட்டுக் கொளுத்திவிட்டார்.

அதன்பின்னர் ஆங்கிருந்த மாணிக்கவாசகரும், தில்லைமூவாயிரவரும், முன்புகொண்டிருந்தஆபாசவேடத்

ளைதரிக்கி விபூதி, ருத்திராட்சமணிக்தவர்களான புத்தர்களும், காவேறியாறு சூழ்ந்த நாட்டை யுடையவனான சோழராஜனும், ஈழதேசத்தரையனும், ஆகிய எல்லோரும் கனகசபையினிடம் நடிக்கும் சபாநாயகரை நேராகவந்து தரிசனஞ் செய்தார்கள்.

[இவ்வணம் இறக்கின்றதே மோட்சமென்று சொல்லித்திரிந்த புத்தர்களெல்லோரும் பொன்னம்பலத்தில் சபாபதியைக் கண்டு வணங்கி அன்பு மிக்க தவசிரேஷ்டர்களானது என்ன அதிசயம்.]

இவ்வாறு யாவருங்கூடிச் சபாநாயகரைத் தெரிசித்து அச்சபையை விட்டு வெளியே நீங்கிவந்தபின் அவரவர்கள் தங்கள் தங்கள் வாசஸ்தலங்களுக்குச் சென்றனர்.

ஸ்ரீமணிவாசகப்பெருமானார் மட்டும் ஆங்குத் திருப்புலீச்சரத்தில் எழுந்தருளி யிருக்கும சிவபெருமானுடைய திருவடிகளைவணங்கி அங்கேயிருந்தனர்.

அது காலையில் தில்லை நகரத்தவர் யாவரும் மாணிக்கவாசகரையடுத்து ஐயரே! நீர் எக்காலத்தும் இங்கேயே எழுந்தருளியிருமென்று வேண்டிக்கொண்டு தங்கள் கிரகங்களுக்குப் போயினர்.

அதன் பின்னர் சோழராஜனும், ஈழநாட்டரையனும் புத்தர்களும் ஸ்ரீமணிவாசகப்பெருமானை வணங்கி வி

டை பெற்றுக்கொண்டு தங்கள் தங்கள் மாளிகைகளுக்கு மிகவும் மனமகிழ்ச்சியுடன் சென்றனர்.

அதுமுதல் அந்த அரசர்களும், புத்தர்களும் திருச்சிற்றம்பலத்தை வணங்கி அதுவேதங்களுக்குரிய உண்மைப்பதியாகக் கொண்டிருந்தார்கள்.

இனி திருவாதவூரர் திருவடிபெற்ற சருக்கம் வரும்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## திருவடிபெற்ற சருக்கம். கிளை-8.

ஸ்ரீமாணிக்கவாசகரானவர் ஆங்குச்சிலபகல் வைகி
வசிக்கும் நாளில் திருப்படையாட்சி, திருப்படையெழு
ச்சி, அச்சோப்பத்து, யாத்திரைப்பத்துமுதலியவற்றை
பாடி யாவராலும் அறிதற்கொண்ணாத பேரின்பவாழ்
வில் அமர்ந்திருந்தனர்

ஆண்டு, யாவராலும் துதிசெய்யப்படுகின்ற பஞ்சாட்
சரமும், திருநீறும் விளங்கும்படி ஆன்மாக்களுக்கு
ள துன்பங்களை அறவே யொழிக்கும் சிவஞானத்தை
தெள்ளிதினுணர்த்தும் திருவாசகத்தைத் திருவாய்மல
தற்பொருட்டு வந்த மாணிக்கவாசகரானவர் பதஞ்சலி
வியாக்கிரபாதர் இவர்களால் பேர்பெறு விளங்குவது
ன கனகசபையில் நடிக்கின்ற ரிஷபவாகனரூடராம்

சபாநாயகரது சிதம்பரமே மேலான பதியாகுமென்று அறிவித்தனர்.

இவ்வாறு அநேக அதிசயங்களைத் தம்முள் தாமேபுணர்ந்துகொண்டமர்ந்திருக்கு நாளில் ஒரு நாள் எவ்வுயிர்களையும் இகபரபோகந் துய்ப்பிக்கின்றவன் நானே என்னை யாவரும் அறிந்துய்ய வேண்டும் என்றுசொல்லுதற்கறிகுறியாகச் சிதம்பரத்தின்கண் பஞ்சகிர்த்திய தாண்டவஞ் செய்தருள்கின்ற சபாபதியானவர் தாம் இவர் மீது வைத்திருக்கும் பெருங்கருணைத்திறத்தாலும், முன்னர் இவருக்கு உறுதிமொழி பகர்ந்திருந்ததனாலும், பவித்திரத்தையுடைய முப்புரிநூலணியப்பட்ட மார்பும் சிவஞானபோதம் என்னும் புத்தகம் தாங்கப்பட்ட கையுமாக ஒரு பிராமண வடிவந்தாங்கி தமது தாமரைபோலுஞ் சேந்த திருவடிகள் நிலத்திற்பட மிகவும் வருந்தி வருவார்போல் நம்மை யாண்டடிமைகொள்ளும்பிரா னெழுந்தருளிய ஸ்ரீமாணிக்கவாசகருக்கு எதிரேவந்து நின்றார்

அவரைக்கண்ட மாணிக்கவாசகரானவர் அத்தியந்த மகிழ்ச்சிகொண்டு தேவரீர் யாரோ? எங்கு இச்சிறியேன்மாட்டெழுந்தருளினீர் என்று இனியமொழிகள் செ

கூறி ஆங்கு அவனை இருக்கச்செய்து, பின்னர் சதுர்வேதங்களையும் அவற்றின் சாகைகளையும் உள்ளபடியே ஆராய்ந்தறிந்த வேதப்பிராமணோத்தமரே! ஐயா! நீர் யார்? உமது இருப்பிடம் எங்கே? என்ன காரியத்தைப்பற்றி இங்கு எழுந்தருளினீர்? என்று வினவினர்.

அதற்குமறையவராகவந்த சிவபெருமானனவர்மாணிக்கவாசகரைநோக்கி ஐயா! யான் ஆதிசைவப்பிராமணன். நான் இருப்பிடம் பாண்டிமண்டலமாகும் என்றனர்.

இங்ஙனம் தமதிருப்பிடம் பாண்டிமண்டலம் என்று சொலலக்கேட்டவுடனே அது மாணிக்கவாசகரது ஜென்மநாடாதலாலும், சிவபெருமானால் அநேக அற்புதங்கள் செய்யப்பட்டதாதலாலும், மிகவும் அகமகிழ்ந்து முன்னிலும விசேஷமுகமன்கூறி நீர் வந்தகாரியத்தைச்சொல்லுமென்றனர்.

அதற்கு அம்மறைவல்லார் ஐயா! நாம் உம்மைக்காணுமாறே கடவுளாணையாகக்கொண்டு ஈங்கு வந்தோமென்று சொல்லிப்பின்னர் பூமியைக்கீண்டும், ஆகாயத்திற்பறந்தும், விஷ்ணு பிரமர்களால் பூர்வத்தில் தேடியுங்காணுதற்கரிய கடவுளாயும், சிற்றம்பலத்தில் நடிக்கின்

றவருமான சிவபெருமானைக் குதிரையேறச்செய்த உம துபெருமையினால் பாண்டிநாடெல்லாம் வாழ்ந்தது.

அன்றியும், சிறப்புப்பொருந்திய திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருக்கின்ற கடவுளுடைய திருவடிகளை வணங்கித் துன்பநீங்கிப் பிறகு திருக்கழுக்குன்றத்திற்குப்போய் பிறகு சிதம்பரத்திற்கு வந்து புத்தரை வென்றீர் என்ற செய்தியைக் கேள்விப்பட்டு மகிழ்ச்சியுற்றார்கள்.

அன்றித்தேவரீர் யாவர்க்குந் தலைவனையும் சிற்றம்பலத்தில ஆனந்ததாண்டவஞ் செய்தருள்பவனையுமிருக்கின்ற சிவபெருமானை அன்பின் மேலிட்டால் பாடியருளிய தமிழ்ப்பாடல் முழுமைக்கும் பாராயணஞ்செய்தற்கு நினைத்து என்னுடைய துன்பங்களெல்லாம் நீங்குதற் பொருட்டே இங்குவந்தனன். நான் அவற்றை யெல்லாம் எழுதல்வேண்டும். ஆகையால் பிராமணோத்தமரே! நீர் அவற்றையெல்லாம் எனக்கு மிகவும் தெளிவாகச் சொல்லவேண்டும் என்று கேட்டனர்.

அதுகேட்ட மாணிக்கவாசகரானவர் அவ்வெம்பெருமானுடைய வேண்டுகோளுக்கிரங்கித் தாம் பாடியருளி

ய திருவாசகத்தை மிகவும் மனமகிழ்ச்சியோடு சொல்லி யருளினார்.

அவ்வண்ணம் பிராமண வடிவந்தாங்கிவந்த சிவபெருமானானவர் மாணிக்கவாசகர் சொல்லிய திருப்பாடல்களை யெல்லாம் கையில் ஏடும் எழுத்தாணியுங்கொண்டு எழுதிப் பின்னர் அவரைப்பார்த்து ஓ புண்ணிய சீலரே! நீர் எம்மீது கிருபாகடாட்சம் வைத்து ஸ்ரீசிவபெருமானைப் பாட்டுடைத் தலைவனாகவைத்து ஒரு கோவை பாடித்தரல்வேண்டும் என்று வேண்டிக்கொள்ள, அவ்வாறே மாணிக்கவாசகரானவர் அகமகிழ்ந்து கோவைபாடவே அப்பிராமணராய் வந்த சிவபெருமானானவர், அதைத் திருக்கரத்திலெழுதி முடித்துக்கொண்டபின் புத்தகத்தைக் கட்டி எடுத்துக்கொண்டு திடீரென்று மின்னலைப்போல் காணப்பட்டுத்தமது திருவுருக்கரந்தார்.

அதுகண்ட மாணிக்கவாசகரானவர் மிகவும் வருந்தி அழுது அந்தோ! எம்பெருமானே ஈண்டு எழுந்தருளினரென்று நான் அறிந்தேனில்லையே! என்ன கொடுமைசெய்தேனோ? என்று சஞ்சல சித்தங்கொண்டவராய் எங்கும் சென்று தேடிக்கண்ணீர் ஆற்றைப்போல பெருக ஏ தேவா! நீ எங்குசென்றனையோ? அந்தோ

இவ்வேழையை இங்கே இப்படி வருந்தவிட்டகலத் துணிந்தீரோ? என்று சொல்லிப் புலர்ந்து நிலத்தில் விழுந்து மேலான ஆனந்தவெள்ளத்தில் அமிழ்ந்தார்.

இதா இங்ஙனமாக சிவபெருமானவர் அப்புத்தகங்களைக்கொண்டு தமது கனகசபைக்கெழுந்தருளி ஆங்கு தேவர்களையும், மகாவிஷ்ணுவையும், பிரமதேவர்களையும் பார்த்து தேவர்களே! நமக்கு அடிமைசெய்து நல்லசுகத்தைப்பெற்ற மாணிக்கவாசகன் சொன்ன இந்த பாடல்களைக் கேளுங்களென்று அவர்களுக்கு அநுக்கிரகஞ்செய்தார்.

அதன்பின்னர் சிவபெருமானவர் உண்மைத்தவசிரேஷ்டனான மாணிக்கவாசகன் சொல்ல எழுதப்பட்ட இந்த மகாமகிமைதங்கிய திருவாசகம் பொன்னம்பலத்தில் திருத்தாண்டவஞ் செய்தருள்கின்ற அழகிய திருச்சிற்றம்பலமுடையார் திருவெழுத்தாமென்று திருக்கோவையார் முடிவிடத்திலெழுதிப் பின்னர் தமது கரங்கொண்டே அப்புத்தகங்களுக்கு மைக்காப்புஞ் செய்த பின்னர் மாணிக்கவாசகரது நல்ல தவத்தை எல்லோருக்கும் அறிவிக்க நினைந்து அப்பொன்னம்பலத்தில் முனிவர் தேவர்கள் வந்து வணங்குதற்குரிய வாசற்படியில் திருவாசகமாகிய திருமுறையை வைத்தனர்.

இங்ஙனம் இவர் வைத்து மறைந்தபின் மறுநாள் காலையில் பூசைசெய்யும் பிராமணன் வந்து அவ்வாசற்படியிலிருக்கும் புத்தகத்தைக்கண்டு இது என்ன புதுமை? இது ஒரு தெய்வீகமாயிருக்கின்றதே என்று நினைத்து மனங்களிர்ந்து அந்தத்தில்லை மாநகரத்திலுள்ளவர்களுக்கெல்லாம் இதை அறிவிக்க நினைத்து அவ்விடம் விட்டகன்று சதா லட்சுமியானவன் குடிகொண்டிருக்கின்ற தில்லையிலுள்ளாரிடஞ் சென்று ஓ தில்லை மாந்தரே! நான் ஒரு அதிசயங் கண்டுவந்தேன். அது என்னவென்றால்: பொன்னம்பலத்தின் வாசற்படியிலே இதுவரைக்குங் கண்டிராத புத்தகம் ஒன்று வைக்கப்பட்டிருக்கின்றது. அது என்ன விந்தையோ என்றான.

அதுகேட்ட அவர்களெல்லாம் மிகவும் ஆச்சரியக்கடலுள் அமிழ்ந்தினவர்களாய் எல்லோரும் ஒன்றாய்க் கூடிவந்து அப்புத்தகத்தைக் கண்டார்கள்.

அதன்பின்னர் இவ்வாசற்படியானது தேவர்களாலும், முனிவர்களாலும் மிதிப்பதற்கேற்றதாயிற்றே. இவ்விடத்தில் இப்புத்தகம் இருப்பது தெய்வீகமே. ஆனாலும் இது கடவுளால் அருளிச்செய்யப்பட்ட தொகுமோ?

அல்லது தமிழ்நூலா? என்று பார்ப்பதற்கு விருப்பங்கொண்டனர்.

அது காலையில் அவர்களில் ஒருவர்போய் வில்வமலர்களால் அப்புத்தகத்தை அர்ச்சனைசெய்து நமஸ்கரித்து அதை மெல்ல எடுத்து அவிழ்த்து ஏட்டை நீக்கி முதலிலுள்ள நான்கு அகவல்களையும் படித்தார்.

அங்ஙனம் திருவாசகத்தில் திருச்சதகம் முதலாகவுள்ள அறுநூறு செய்யுட்களையும், அகப்பொருட்கோவை நானூறு செய்யுட்களையும், யாவருக்கும் விளங்கும்படி படித்தபின்னை முடிவிடத்தில் இது மாணிக்கவாசகர்சொல்ல அழகிய திருச்சிற்றம்பலமுடையார் கையெழுத்து என்று படித்தார்.

அங்ஙனம் படிக்கப்பட்ட திருமுறையைக் கேட்டவர்களெல்லாம் உடல் குழைய, எலும்பு நெக்குவிட்டுருக, சரீரம் புளகாங்கிதங்கொள்ள மனங்கரைந்திளக, கண்கள் ஆனந்தபாஷ்பம் பொழிய நின்று இந்த தவசிரேஷ்டராகிய மாணிக்கவாசகர் சொல்லியருளிய இந்தத்தமிழேயல்லாமல் மோட்சவழியைக்கொடுத்தற்குச் சிவசமயதனில் வேறு உண்டோ? இல்லை என்று சொன்னார்கள்.

அம்மணம் நிகழ்ந்தபின் அத்தில்லைவாழந்தணர்களெல்லா
மொன்றுகூடி இப்பிரபந்தத்தின் பொருளை இதைப்பா
டியருளிய மாணிக்கவாசகரே சொல்ல உணரவேண்டு
மென்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு அப்பிரபு
எழுந்தருளியிருக்குமிடஞ் சென்று அவருக்கெதிரே
போய் மேற்படி திருமுறையை அவருக்கெதிரேவை
த்து ஓ சுவாமீ! இன்று எம்பெருமானாகிய சிவபெரு
மான் செய்தகாரியம் இதுவாகும் என்றுசொன்னார்கள்.

அதுகேட்ட மாணிக்கவாசகரானவர் அந்தோ! என்
னுடைய அற்பமாகிய பாடலை யாவரும் மனமகிழ்ந்து
கொண்டருளப் பூர்வத்தில் இவ்வுலகத்தின்கண் என்
னதவத்தைச்செய்தேனோ? என்று சிவபெருமானை நி
னைந்து பலவாறாகப் புகழ்ந்து மனமகிழ்ந்து அழுதனர்.

இவ்வாறு மாணிக்கவாசகரிடத்தில் நிகழ்ந்த அரு
மையைக்கண்ட அன்பினர்யாவரும் மிக்க நன்மையு
டன் அஞ்சலிசெய்த கரமுடையவர்களாய் ஓ சுவாமீ!
தேவரீரிடத்தில் கடவுள் நிகழ்த்திய காரியங்களைச்சொ
ல்லுமென்று கேட்டார்கள்.

அதற்கு மாணிக்கவாசகர் முன்னே சிவபெருமான்

பிராமண வடிவந்தாங்கித் தம்மிடத்துவந்த வரலாற்றை யெல்லாஞ் சொல்லியருளினர்.

அவற்றையெல்லாங் கேட்டுக்கொண்ட பின்னர் தில்லைமூவாயிரவர் அவ்வேம் மணிவாசகப்பெருமானை வணங்கி ஓ சுவாமி! தாங்கள் எம் பொன்னம்பலக்கடவுளைப்பாடிய தமிழ்ப்பிரபந்தத்திற்கு நல்ல பொருள்சொல்லவேண்டுமென்று மிகவும் வேண்டிக் கேட்டுக்கொண்டனர்.

இவர்கள் வேண்டுகோளுக்கிரங்கி மாணிக்கவாசகரானவர், ஓ தில்லைமூவாயிரவர்களே! நீங்கள் அதின் பொருளைக்கேட்க உள்ளபடியே விரும்பினீர் ஆகையால் நான் இதற்கு அழகிய பொன்னம்பலத்திற்கெதிரேபோய் அந்தவிடத்திலேயே சொல்லுவேன் என்று சொல்லி அவர் முன்னேபோக மற்றையோர் யாவரும் அவரைத் தொடர்ந்து பின்னே சென்றார்கள்.

அவ்வண்ணம் சென்ற மாணிக்கவாசகரானவர் திருச்சிற்றம்பலத்தை யடைந்து தில்லை மூவாயிரவர்களை நோக்கி ஓ பிராமணர்களே! இத்தமிழ்ப் பிரபந்தத்திற்குப் பொருள் இவரேயாவரென்று அங்கு எழுந்தருளியிரு

ந்த சபா நாயகனைக்காட்டி அந்தச்சபையின் கண்ணே
தில்லை மூவாயிரவர்களும் கண்டு பிரமிக்கும்படி சீக்கிர
த்திற் போய்ச் சோதியுடன் மறைந்தார்.

இங்ஙனம் சபாபதித்தானை மாணிக்கவாசகர் அடைந்
தவிதத்தை அத்தில்லை வாழ்வோர்யாவரும் கண்டு மன
மகிழ்ந்து உடற்புளகமெய்திக் கம்பிதம் பெற்று மனங்க
சிந்து மேனியெல்லாம் வியர்வை மூட ஆனந்த பரவசரா
ய்த் தங்கள் தங்கள் கரங்களைச்சிரமேற் கூப்பிக்கொண்
டார்கள்.

அதுகாலையில் பூதங்கள் நடித்தன ஆங்கு வந்த கண
நாதர்கள் புகழ்ந்தனர், தும்புரு நாரதரிருவரும் இசை
செய்தனர், வேதங்களும் அந்தரதுந்துமிகளும் ஆகாச
த்தில் முழங்கின, முனிவரரும், இந்திரரும் பஞ்சதருக்
களின் மலர்களைச் சோறு மாரிபோல் இறைத்தனர்.
ஸ்ரீசபாநாயகரது திருநாமத்தியானஞ் செய்வாரும்,
மௌனமாய் சிவபூசைசெய்வோரும், மிக்க அன்புடன்
சிதம்பரத்தில் வசிக்கின்ற புண்ணிய சீலர்களும், யாவ
ராலும் பரவப்படுகின்ற திருவாசகமென்னும் தமிழ்த்
தேனை யருந்தியிருந்தார்கள்.

இவ்வண்ணம் இழிவுபெற்ற தோல், எலும்பு, நரம்பு,

சி முதலியவற்ருேடுங் கூடிய இவ்வுடல் சிவ ரூபமேயா கும். இவ்வுலகமார்தர்கள் இதையுணர்ந்து அந்த உடலுக்கு இரைதேடித் தடுமாறி வீணுக நரகத்தில் விழுகின்ருர்கள் இது மிகவும் ஆச்சரியமே. ஆயினும் அவ்வளம் நிகழ்வது மாயையின் வலிவேயாகும்.

இவ்வாறு திருவாதவூரிலவதரித்தருளின மாணிக்கவாசகரது திவ்விய சரித்திரத்தை உண்மையன்போடு படிக்கின்றவர்களும், ஒருவர் படிக்கக்காதாரக் கேட்கின்றவர்களும், மிக்க உண்மைஞானம் பதியப்பெற்று சுகபோகத்துடன் கீர்த்தியையு முற்றும் பிறப்பென்னும் வாதனையினின்றும் நீங்கிப் பின்னர் முனிவராதியரால் அடையப்படும் சிவலோகம் பெறுவார்கள். இது அணுவளவும் பிசகாது. சுபம்! சுபம்!! சுபம்!!!

## வாழ்த்து

பூதல மாதும் வாழ்க பெண்ணமுது மொழிந்து வாழ்க
வேதவா கமமும் வாழ்க வேந்தர்செங் கோலும் வாழ்க
நீதிவஞ் செழுந்த நீறுஞ் சிவனடி யாரும் வாழ்க
வாதவூர் நிறைபு ராணம் படித்திடக் கேட்டோர்வாழ்க.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அடைக்கலப்பத்து.

செழுக்கமலத்திரளனநின் சேவடி சேர்ந்தமைந்த
பழுத்தமனத் தடியருடன் போயினர் யான் பாவியேன்
புழுக்கணுடைப் புன்குரம்பைப் பொல்லாக்கல்வி ஞானமில்லா
வழுக்குமனத் தடியேனுடையா யுன்னடைக்கலமே.

வெறுப்பனவே செய்யுமென் சிறுமையை நின் பெருமையினாற்
பொறுப்பவனே யாரரவம் பூண்பவனே பொங்குகங்கை சடைச்
செறுப்பவனே நின் திருவருளாலென் பிறவியைவே
ரறுப்பவனே யுடையா யடியேனுன் னடைக்கலமே.

பெரும்பெருமானென் பிறவியை வேரறுத்துப் பெரும்பிச்சுத்
தரும்பெருமான் சதுரப்பெருமா னென் மனத்தினுள்ளே

வரும்பெருமான் மலரோனெடு மாலறியாமனின்ற
அரும் பெருமானுடையா யடியேனுன் னடைக்கலமே.

பொழிகின்ற துன்பப் புயல் வெள்ளத்தினின் கழற்புணைகொ
டிழிகின்றவன் பர்களேறினர் வான்யானிடர்க் கடல்வாய்ச்
சுழிசென்று மாதர்த்திரை பொரக் காமச்சுறவெறிய
வழிகின்ற னனுடையா யடியேனுன் னடைக்கலமே.

சுருள்புரி கூழையர் சூழலிற் பட்டுன் றிற மறந்திங்
கிருள்புரியாக் கையிலே கிடந்தெய்த்த னன்மைத்தடங்கண்
வெருள்புரிமா னன்னநோக்கி தன்பங்க விண்ணோர்பெருமா
னருள்புரியா யுடையா யடியேனுன் னடைக்கலமே.

மாழைமைப் பாவியகண் ணியர்வன் மத்திடவுடைந்து
தாழியைப் பாவுதயிர் போற்றளர்ந்தேன் றடமலர்த்தாள்
வாழியெப்போது வந்தெந்நாள் வணங்குவன் வல்வினையே
னாழியப் பாவுடையா யடியேனுன் னடைக்கலமே.

மின்கணினார் நுடங்கு மிடையார் வெகுளிவலையி லகப்பட்டுப்
புன்கணனாய்ப் புரள்வேனைப் புரளாமற் புகுந்தருளி
யென்கணிலே யமுதூறித் தித்தித்தென் பிழைக்கிரங்கு
மன்கணனே யுடையா யடியேனுன் னடைக்கலமே.

மாவடுவ கிரன்னகண்ணி பங்கா நின் மலரடிக்கே
கூவிடுவாய் கும்பிக்கேயிடுவாய் நின் குறிப்பறியேன்

பாவிடையாடு குழல்போற் கரந்து பரந்துள்ள
மாகெடுவே னுடையா யடியே னுன்னடைக்கலமே

பிறிவறியா வன்பர் நின்னருட்பெய் கழற்றாளிணைக்கீழ்
மறிவறியாச் செல்வம்வந்து பெற்றாருன்னை வந்திப்பதோர்
நெறியறியே னின்னையே யறியே னின்னையே யறியு
மறிவறியே னுடையா யடியேனுன் னடைக்கலமே.

வழங்குகின்றாய்க் குன்னருளா ரமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின்றேன் விக்கினேன்வினையேனென் விதியின்மையாற்
றழங்கருந்தேனன்ன தண்ணீர் பருகத்தந் துய்யக்கொள்ளா
யழுங்குகின்றே னுடையா யடியேனுன் னடைக்கலமே.

முற்றிற்று.

# அறிக்கை.

☞ வருகிறவாரம் எட்டுப்பட்ங்கொண்ட சஞ்சிகை ஒன்று வரும். அதை ஒரு அணா கொடுத்துப் பெற்றுக்கொள்ளவும்.